விலை: 30.00
பக்கங்கள் : 16 + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 20 ஞாயிற்றுக்கிழமை (05.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 17

# கோட்டா அரசின் கைது வேட்டைகள் தொடர்கிறது

## ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று இரவு கைது



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பிக்க, ராஜிதவை தொடர்ந்து ரஞ்சன்ராமநாயக்க கோட்டபாய ராஜபக்ஷ அரசினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் ஆக்கப்பட்ட

## மகனை தேடிவந்த தந்தை ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் பேசாலை ஓலைத் தொடுவாயை சேர்ந்த சூசைப் பிள்ளை இராசேந்திரம் (வயது 72) என்பவரே மேற்படி உயிரிழந்த வராவார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 6ஆம்திகதி இவருடைய மகன் இ.அன்ரனி ரஞ்சன் காணா மல் ஆக்கப்பட்டார். 15

## தமிழ் மக்களின் பிரச்சினையை கூட்டமைப்பு தீர்க்கவில்லை

உண்மையை ஒப்புக்கொண்டார் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினை களை முழுமையாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டை தாம் ஏற்றுக் கொள்வதாக கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெளிமாவட் டங்களில் போட்டியிடுவது தொடர் பாக ஆராய்ந்து வருகின்றோம் இன்னும் தீர்மானம் எதனை யும் நாம் எடுக்கவில்லை என் றார். (ம-3)

## 21 வயதேயான இளம்குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

இடது கையில் பிளேட்டினால் வெட்டப்பட்ட வெட்டுக்காயங் களுடன் குடும்பப் பெண்ணொரு வர் மரணமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சடலமாக ஒப்படைக்கப்பட்டார். 15

## காணாமல் போனவர்களின் உறவுகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் கோரிக்கை



15

அரசின் செயற்பாடுகளை பார்க்கும்போது

## அரசியல் தீர்வுக்கான வாய்ப்பு வெகுவாக குறைந்துள்ளது

கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை பார்க்கின்றபோது அரசியல் தீர்வுக்கான வாய்ப்பு வெகுவாக குறைந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரி வித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காண 15


## புதையல் தோண்டிய படையினர் உட்பட ஐவர் கைது

(முறிகண்டி)

சட்டவிரோத புதையல் தோண் டிய முயற்சி தொடர்பில் 3 கப்டன் மற்றும் சாதாரண சிப்பாய்கள் அடங்கலாக ஐவர் கைது 15

## அரசியலமைப்பை உடனடியாக மாற்றுங்கள்

கண்டி மல்வத்துவ பீடம்



(கண்டி)

நாட்டின் நலனுக்காக அரசிய லமைப்பு திருத்தம் அவசியம் என்று தான் நம்புவதாக கண்டி மல்வத்து பீடத்தின் அநுநாயக்க தேரர் திம்புல்கும்புரே விமலதர்ம தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் உரையாற்றிய 15

## அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் சந்தித்து பேசவுள்ளோம்

த.தே.கூட்டமைப்பு தீர்மானம்


(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினை சந் தித்து பேச தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற கட்டடத்தொகுதி யில் வைத்து ஊடகவியலாளர் களின் கேள்விகளுக்கு பதிலளிக் கும் போதே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கல 15

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். நேற்றுக் காலை 8.00 மணி யளவில் கிளிநொச்சி திருநகர் தெற்கு பகுதியில் தனது மாட்டுப் பண்ணையை சுத்திகரித்து 15

## பழைய மாணவர் சங்க கூட்டம்

யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் வருடாந்த பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19.01.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறும்.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அதிபர்

(1742)

## USED MEDICAL EQUIPMENTS SALE

1. Blood Analyzer Pointe 180
2. X-Ray Machine 60MA (Mobile)
3. Autoclave (Three Drum, Manuval)
4. Pulse Oximeter

**077 873 0129** (C-8841)

## வேலை வாய்ப்பு

1. தாதிய அனுபவம் உள்ளவர்கள்.
2. ஆங்கில மருந்துகளில் அனுபவம் உள்ளவர்.

**077 873 0129** (C-8841)

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடத்தும்

## தெய்வீக கலையரங்கு

**இடம் :** கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

**காலம் :** 06.01.2020 திங்கட்கிழமை பி.ப 4.30 மணி

### நிகழ்ச்சிகள்

- வேதபாராயணம்: ஈழத்து வேத விற்பன்னர்கள்
- திருவாசகம் ஓதல்: **காரை லீலாவதி இராசரத்தினம்** (பண்ணிசை ஆசிரியர், கிழவன்காடு கலாமன்றம்)
- கலாமன்ற கலைத்துறையினர் வழங்கும் **இசை ஆராதனை, நந்தி வாத்திய இசை, நாட்டியாஞ்சலி**
- கதாப் பிரசங்கம்: **'பிட்டுக்கு மண் சுமந்தார், பிரம்படி பட்டார்'** வழங்குபவர்: ஆன்மீக இளஞ்சுடர் **வி.விஸ்ணுஜன்**
- **சிந்தனைக்கு ஒரு விருந்து**
- **சிறப்பு நாட்டிய அர்ப்பணம்**
- சிறப்பு நிகழ்வு: **வில்லிசை 'ஆசையை வென்ற அடியவர்'** வழங்குபவர்: **கலைவாணர் வில்லிசைக்குழு சின்னமணியின் சிஷ்யர்**

குறிப்பு:-

01. நிகழ்வுக்கான இலவச போக்குவரத்து சேவை யாழ். கிளையிலிருந்து (இல.428 KKS வீதி, யாழ்ப்பாணம்) ஆரம்பமாகும். (யாழ்.வண்ணை சிவன் கோவில் அருகாமை)
02) தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கான தங்குமிட வசதி வழங்கப்படும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

(C-8853) **கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இசைக்கலைஞர்களுக்கான

## வாய்ப்புக்கள்

இசைத்துறையில் ஆர்வமுள்ள பாடகர்கள் (ஆண்கள்/பெண்கள்), கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியக் கலைஞர்கள் எமக்குத் தேவைப்படுகின்றனர். விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

தொ.பே இல. **077 645 4327** (1743)

நேரம் காலை 8.00 முதல் மாலை 8.00

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் 2020

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

IELTS வகுப்புகளும் நடைபெறுகின்றன

UnLimmited Hours Classes
03/06 Months classes

எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

LIFESKILLS A1 மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் நடைபெறுகின்றது

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

**WORLD EDUCATION CONSULTANCY**

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.

**0779265447 / 0217200989** (C-8851)

## வாடகைக்கு

நல்லூர் அருகில் A/C மற்றும் தளபாடங்களுடன் 3 அறை வீடு கிழமை, மாத, வருட வாடகைக்கு விடப்படும்.

(1750)

தொடர்பு **077 397 3166**

## வேலையாட்கள் தேவை

தொட்டிலடி சண்டிலிப்பாய் பகுதியில் இயங்கும் மோட்டார் வாகன கறாச்சுக்கு மோட்டார் சைக்கிள் திருத்துநர், சேவிஸ் வேலைக்கு ஆட்கள் தேவை. (பழக விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்)

(1751)

தொடர்பு **077 082 7349**

## பழைய ஸ்கூட்டர் தேவை

(1752)

தொடர்பு **076 190 3333**

## துயர் பகிர்கின்றோம்



### முத்துக்குமாரு விஜயரகுநாதன்

(முன்னாள் கணக்காளர் - யா/ போதனா வைத்தியசாலை)

எமது இணுவில் அறிவாலயத்தின் ஆயுள் கால உறுப்பினர் மு.விஜயரகுநாதன் அவர்களின் பிரிவால் துயர் உற்று இருக்கும் குடும்பத்தினருடன் நாமும் துயரில் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இணுவில் அறிவாலயம்**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (1744)

**077 210 6155** 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 15 - 09 - 1948

மறைவு 07 - 12 - 2019

கடந்த 07.12.2019 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

### அமரர் கந்தசாமி சிவபாக்கியம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் எதிர்வரும் 06.01.2020 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்**

கரணவாய் மத்தி,
கரவெட்டி. 0777003671

(C-8852)

இங்ஙனம்
குடும்பத்தினர்

யாழ்.வாடகைக்கார் சங்கம் யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

யாழ்.வாடகைக்கார் சங்கத்தில் 2005ஆம் ஆண்டுக்குப்பின், தரிப்பிட அனுமதி பெற்றவர்கள், தங்களால் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு, எமது சங்கத்தில் உள்ள நிர்வாக உறுப்பினர்களை 09.01.2020, 10.01.2020 நேரம் மாலை 4 தொடக்கம் 6 வரை கீழே குறிக்கப்பட்டுள்ள முகவரியில் நேரில் வந்து சந்திக்குமாறு எமது நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

முகவரி: பருத்தித்துறை வீதி,
வீரகாளி அம்மன் கோவில் அருகாமையில்
தொடர்பு இல:- 076 922 9731

(1753)

# மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றவாளிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்!

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் வீரவன்ச உறுதி

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றவாளிகள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்குமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா பிணைமுறி மோசடி உள்ளிட்ட பல சம்பவங்கள் தொடர்பான விடயங்களை வெளியிட வேண்டுமென சபாநாயகர் கரு ஜெயசூரியவைக் கேட்டுக்கொண்டார். இதன்போது குறுக்கிட்டு பேசிய போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றவாளிகள், யார் என்பதை அனைவரும் நன்கு அறிவர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா, "மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த அறிக்கை 900 மில்லியன் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது. உண்மையான திருடர்கள் யார் என்றும் அந்த அறிக்கையில் உள்ளது.

எனவே அதனை விரைவாக வெளியிடுவதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தினார். (இ-7)

## சுதந்திர தினத்தன்று அனைத்து வீடுகளிலும் பயன்தரும் மரக்கன்று ஒன்றை நடுங்கள்

### பிரதமர் மகிந்த மக்களுக்கு அறிவுரை தேசியக் கொடியை ஏற்றுமாறும் கோரிக்கை

(கொழும்பு)

சுதந்திர தினத்தன்று நாடளாவிய ரீதியில் அனைத்து வீடுகளிலும் ஒரே நேரத்தில் பயனுள்ள மரக்கன்று ஒன்றை நடுவதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். மேலும் ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

'பாதுகாப்பான தேசம் - வளமான நாடு' என்ற தெனிப் பொருளில் கீழ் இம்முறை சுதந்திர தின நிகழ்வை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

இவ்விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

இதன்போது குறித்த நிகழ்வில் பொருத்தமான கலாசார நிகழ்வுகளை மாத்திரமே இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.



சுதந்திர தினத்தில் அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றவும் நாடளாவிய ரீதியில் அனைத்து வீடுகளிலும் ஒரே நேரத்தில் பயனுள்ள மரக்கன்றை நாட்டுவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பிரதமர் தெரிவித்தார். அத்துடன் பொது மக்களுக்கு இடையூறின்றி நிகழ்வுகளை நடத்துதல் மற்றும் நிகழ்வு இடம் பெறும் பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

## மணல் ஏற்றிய டிப்பர் மடக்கிப் பிடிப்பு

### சாரதி, உதவியாளர் கைது



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பொற்பதி குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒன்றை அப்பகுதி மக்கள் சேர்ந்து மடக்கிப் பிடித்தனர்.

நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் இவ் டிப்பர் வாகனம் பிடிபட்டது.

வீதியோரமாக மணல் ஏற்றிக் கொண்டிருந்த வேளை அப்பகுதி பொதுமக்கள் இணைந்து டிப்பர் வாகனத்தையும் சாரதி மற்றும் ஒருவரையும் பிடித்தனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கும் பொலிஸ் அவசர இலக்கம் 119 இற்கும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் காலை 8 மணிக்கே பொலிஸார் சம்பவ இடத்திற்கு சமுகமளித்ததாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் மற்றும் சாரதி உதவியாளர் ஆகியோரை பொலிஸார் வரும்வரை காத்திருந்து பொதுமக்கள் ஒப்படைத்தனர். அண்மைய நாட்களாக குறித்த பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொற்பதி இளைஞர்கள் விழிப்புக் குழு ஒன்றினை அமைத்து தமது சூழலை பாதுகாக்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## இரண்டாயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்யத்தீர்மானம்

(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவையை வலுப்படுத்தும் நோக்கில் இரண்டாயிரம் பேருந்துகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டது.

இதற்காக ஆயிரத்து 750 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது சேவையில் ஈடுபடும் பேருந்துகள் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தவில்லை எனவும் இதன் காரணமாக பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளில் பயணிகளுக்கு சிரமம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக் கருதி இறக்குமதி செய்யப்படவுள்ள பேருந்துகள் இலங்கை போக்குவரத்துச் சபையிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (இ-7)

## குடத்தனை குளத்திலிருந்து வயோதிபப் பெண் சடலமாக மீட்பு!

குளத்திலிருந்து வயோதிபப் பெண் பலஒருவரின் சடலம் நேற்றுச் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனைப் பகுதியில் இவ்வாறு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை மகேஸ்வரி (வயது-75) எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த குறித்த வயோதிபப் பெண்ணை நேற்றுச் சனிக்கிழமை காலை காணாத நிலையில் அப்பகுதியில் தேடியபோது வீட்டுக்குப் பின்புறமாகவுள்ள குளத்தில் அவர் சடலமாகக் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## இந்தியாவுக்கு பயணமாகிறார் தினேஷ்

(கொழும்பு)

வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது முதல் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி அவர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு, இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருப்பார் எனத் தெரியவருகிறது.

இலங்கை வெளியுறவு அமைச்சர்கள், தங்கள் முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வது வழமையான நடைமுறையாகக் காணப்படுகின்றது.



இதேவேளை ஜனாதிபதியாக பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ டில்லிக்குச் சென்று, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்தியத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# லாபஸ்சாக்னே இரட்டைச் சதம் அடித்து அசத்தல்

# வலுவான நிலையில் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின், இரண்டாம்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய பதிலுக்கு முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி, நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில், விக்கெட் இழப்பின்றி 62 ஓட்டங்களை பெற்றுள்ளது.


ஆட்டநேர முடிவில், டொம் லதம் 25 ஓட்டங்களுடனும், டொம் பிளெண்டல் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இதேவேளை, அவுஸ்திரேலியா அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், நியூஸிலாந்து அணி, 392 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

சிட்னி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸதிரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 454 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்னஸ் லாபுஸ்சாக்னே 215 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 3 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.



நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், கொலின் டி கிராண்ட்ஹோம மற்றும் நெய்ல் வாக்னர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், டொட் ஆஸ்ட்ல் 2 விக்கெட்டுகளையும், மெட் ஹென்ரி மற்றும் வில்லியம் சோமர்வில் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூஸிலாந்து அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 62 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இன்னமும் 10 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் மூன்றாவது நாளை நியூஸிலாந்து அணி, இன்று தொடரவுள்ளது



# இலங்கை-இந்தியா

## மோதும் ரி-20 இன்று ஆரம்பம்

களிலும் 59 போட்டி களில் மோதியுள்ளன, இதில் இந்திய அணி 44 வெற்றிகளைப் பெற்றுள்ளது, 10 ஆட் டங்களில் தோல்வி அடைந்துள்ளது. சில தோல்விகள் இந்திய அணிக்கு மறக்க முடியாதவை, 2014,ரி20 உலகக்கோப்பை இறுதிப்போட்டி, 2017 சம்பியன்ஸ் கோப்பை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரி20 தொடரில் விளையாடி அந்த தொடரை இழந்தது. அந்த அணி அனுபவ வீரர் லசித் மலிங்கா தலைமையில் களமிறங்குவது கூடுதல் பலமாகும்.

இளம் வீரர்களுக்கு அதிகமான முக்கியத்துவம் அளித்து அணி தேர்வு அமைக்கப்பட்டுள்ளது. மத்யூஸ், பெரேரா, ராஜபக்சா, பெர்னான்டோ, குணதிலக ஆகியோர் நம்பிக்கைக்குரிய வகையில் கடந்த கால போட்டிகளில் பேட்டிங் செய்துள்ளார்கள். இந்த 4 பேட்ஸ்மேன்களும் இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக பார்க்கப்படுகின்றனர்.

கடந்த 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்குப் பின் மீண்டும் ரி20 போட்டியில் விளையாடுவதற்கு முன்னாள் கப்டன் மத்யூஸ் அணிக்குத் திரும்பியுள்ளது ஓரளவுக்கு நம்பிக்கை அளிக்கும்.

மேலும் ஆல்ரவுண்டர்கள் வரிசையில் ஹசரங்கா, உதானாவும் இந்திய அணிக்கு கடும் சவாலாக இருப்பார்கள். இதில் ஹசரங்கா கடந்த 2017-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியவர்.

இந்திய அணிக்கு பந்துவீச்சிலும், பேட்டிங்கிலும் சவால் விடுக்கும் வகையில் இலங்கையின் இளம் அணி தயாராகியுள்ளது. இன்று மாலை போட்டி தொடங்கும்.

# மலிங்கவிடம் யோக்கர் பந்தை கற்றுக்கொள்ளவில்லை -பும்ரா

உலகின் தலைசிறந்த யோக்கர் பந்து வீச்சாளரான லசித் மலிங்கவிடம் இருந்து யோக்கர் பந்துவீச்சை கற்றுக் கொள்ளவில்லை என இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ரா தெரிவித்துள்ளார்.

பல்வேறு வடிவங்களில் யோக்கர் பந்து வீசும் மலிங்க, இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். ரி-20 லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். மலிங்க, உச்சத்தில் இருக்கும்போது பும்ரா அந்த அணியின் புதுமுக வீரராக அறிமுகம் ஆனார்.

இதனால் மலிங்கவிடம் இருந்துதான் பும்ரா யோக்கர் பந்து வீச்சு முறையை கற்றுக் கொண்டார் என பெரும் பாலான ரசிகர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், அது தவறானது என பும்ரா தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து பும்ரா கூறுகையில் "நான் மலிங்கவிடம் இருந்து யோக்கர்பந்து வீச்சு முறையை கற்றுக் கொண்டேன் என்று ஏராளமான ரசிகர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது உண்மையல்ல.

அவர் போட்டியின்போது ஏதும் எனக்கு கற்றுத் தரவில்லை. அவரிடம் இருந்து மனநிலையை எப்படி வைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டேன். மாறுபட்ட சூழ்நிலைகளை எப்படி கையாள வேண்டும், கோபப்படாமல் இருப்பது எப்படி, துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக எப்படி திட்டம் தீட்ட வேண்டும் என்பதை கற்றுக் கொண்டேன்.

நான் வெளியில் சென்று விளையாடாமல் இருக்கும்போது தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருப்பேன். நான் எப்போதும் பந்து வீச்சாளர்கள் விக்கெட் வீழ்த்துவது, வேகமாக பந்து வீசுவது, க்ளீன் போல்ட் போன்றவற்றை விரும்புவேன். நானும் அதை போன்று வீச வேண்டும் என்று விரும்புவேன்.

என்னுடைய மனதில் நான் பிரெட் லீ, அவரை போன்று பந்து வீச வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். அவர் போன்று பந்து வீசியிருக்கி றேன். என்னுடைய ஹீரோவிடம் இருந்து கொப்பி அடித்திருக்கிறேன்" என கூறினார்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 11-04-1962

இறப்பு 03-01-2020

## பொன்னம்பலம் பவானி

துலாவை அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பவானி 03.01.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- நகுலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் கிரிதரன், பிறேமா, தயாளினி, நிறஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயக்குமார், அருமைநாயகம், சுஜாதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகனியா, நிதர்ஷா, வினுஷா, தேஷ்வர், தேஷகி, தேஷிகா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆஷா, அனுஷன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பெரிய அத்தையும் அனயாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நாளை 06.01.2020 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-8854)

துலாவை
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:-
பொ.கிரிதரன்(சகோதரன்)
021 226 3726

# தேசிய சுதந்திரதின நிகழ்வுகளை மக்களுக்கு இடையூறின்றி முன்னெடுக்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

தேசிய சுதந்திர தின நிகழ்வு களை பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாதவாறு முன் னெடுக்குமாறு உரிய அதிகாரி களுக்குப் பணிப்புரை விடுக்கப் பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவால் இந்தப் பணிப்புரை விடுக் கப்பட்டதாக தகவல்கள் வெளியா கின.

கொழும்பிலுள்ள சுதந்திர சது க்கத்தில் இம்முறை தேசிய சுதந் திர தின நிகழ்வுகள் இடம்பெற வுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தேசிய சுதந்திர தின நிகழ்வு கள் அரச திணைக்களங்கள் மற்றும் கொழும்பு மாநகரசபை யின் ஒத்துழைப்புடன் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் பூரண பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும்



தெரிவிக்கப்பட் டது. (இ-7)

# சீருடைக்கான வவுச்சர் பணத்தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைக்காக வவுச்சர் மூலமாக வழங்கப்படும் பணம் அதிகரிக் கப்பட்டது. இத்தொகை 525 ரூபா விலிருந்து 735 ரூபாவாக அதிகரிக் கப்பட்டது.

இதேபோன்று கடந்த அரசாங்க காலப்பகுதியில் வழங்கப்பட்ட வவுச் சர்களின் பின்புறத்தில் இடம் பெற்றிருந்த படங்களும் நீக்கப் பட்டன.

அரசியல்வாதிகளின் படங் களுக்கு பதிலாக மாணவர்களின் படங்களை உள்வாங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது குறிப்பிடத்தக் கது. (இ-7)

## எரிபொருள் மோசடி

# இலங்கையர்கள் 7 பேர் நைஜீரியாவில் கைது!

(நைஜர்)

எரிபொருள் மோசடி தொடர்பில் இலங்கையர்கள் ஏழு பேர் உட்பட 66 பேர் நைஜீரியாவில் கைது செய்யப்பட்டனர்.

நைஜீரியா கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபர்களுக்கிடையில் 7 இலங்கையர்கள், 57 நைஜீரிய பிரஜைகள் மற்றும் கானா நாட்டுப் பிரஜைகள் இருவர் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். வைத்தியநாதன் நடராஜா

பிறப்பு 1933 • 10 • 14

இறப்பு 2020 • 01 • 02



எமது மக்கள் நலன் காப்பகத்தின் இயக்குநர் திருமதி. உதயா பிரபாகரன் அவர்களின் தந்தை திரு. வைத்தியநாதன் நடராஜா அவர்களின் துயரச்செய்தி அறிந்து அவர்களின் குடும்பத்தினருடன் சேர்ந்து நாமும் கலங்கி நிற்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நிர்வாகத்தினர்,
மக்கள் நலன் காப்பகம்,
தாயகம், அனைத்து நாடுகள்.

C-8847

# கண்ணீர் அஞ்சலி

அமரர். முத்துக்குமாரு விஜயரகுநாதன்



எமது சிவபூமி அறக்கட்டளையின் உறுப்பினரான **முத்துக்குமாரு விஜயரகுநாதன்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவபூமி அறக்கட்டளை

1732


## இராசி பலன்

05.01.2020

மார்கழி 20, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு

தசமி பின்னிரவு 1.49 மணிவரை

அச்சுவினி முற்பகல் 11.33 மணிவரை

சுபநேரம் 9.31-11.01 மணிவரை

இராகுகாலம் 5.01-6.31 மணிவரை

வளவன்

கிரகநிலை: ராகு; சுக்; சூரி.சனி புத. கேது.குரு; செவ்

சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி

**மேடம்:** பணியில் சிறு மன உளைச் சல் ஏற்படலாம், கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்கா மல் செய்த வேலையொன் றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், தெய்வீக சிந் தனை மேலோங்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தாருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழி பட வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தனவர வுகள் திருப்தி தரும், எடு த்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்ட காரியங்களில் முன் னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறு வர், பேச்சில் இனிமை ஏற் படும், சிக்கல்கள் விலகி சிறப் புகள் கூடும் நாள், ஆரோ க்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங் கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பய ணங்களின் போது பொரு ட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நி யோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரிய வர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் அகலும், எண்ணங்கள் எளிதில் நிறை வேறும், செய் தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர் கள், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கி யமான நாள்.

**தனுசு:** கேளிக்கை, கொண்டாட்டங் களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூ டும், பொதுவாழ்வில் மதிப் பும் மரியாதையும் உயரும் நாள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** நீண்ட நாளைய பிரச்சினைக ளுக்கு நல்ல முடிவுகள் கிடைக்கலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், போசன சுகமுண்டு.

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச் சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

# தென்மராட்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கண் பார்வையை இழக்கும் அபாயம்!

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அதிர்ச்சித் தகவல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் ஒரு கண் மற்றும் இரு கண் பார்வையை இழக்கும் அபாயநிலை காணப்படுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.பிரபாகரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த வருடம் தென்மராட்சியில் 250 பாடசாலை மாணவர்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையின் போது அதில் பல மாணவர்களுக்கு கண் பார்வைக் குறைபாடு இருப்பது தெரியவந்தது. அதில் சிலர் ஒரு கண் பார்வைக் குறைபாடு உடையவர்களாகவும் மேலும் சிலர் இரு கண்களிலும் பார்வைக் குறைபாடு உடையவர்களாகவும் காணப்பட்டனர். மாணவர்கள் மற்றும் பெற்றோரின் பொருளாதார நிலை காரணமாக இவ்வாறான கண் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களால் மூக்குக் கண்ணாடி பெற முடியாத நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக காலப் போக்கில் அம் மாணவர்கள் கண் பார்வையை இழக்கும் அபாயநிலை காணப்படுகிறது.

இவ்வாறு வருடாவருடம் கண் பார்வைக் குறைபாடுடைய பல மாணவர்கள் இனங்காணப்படுகின்றனர். கண்ணாடி பெற்றுக்கொள்ள முடியாத பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு பொது அமைப்புக்கள் உதவ முன்வர வேண்டும்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் போன்ற சமூக சேவை அமைப்புக்கள் இவ்வாறான மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கி மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்ட வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்தார்.

சுகாதாரப் பரிசோதகரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் இவ்வாறான மாணவர்களின் விபரங்களைப் பெற்றுத் தருமாறும் தம்மால் இயன்ற உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் இந்நிகழ்வில் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## துப்புரவு செய்யப்படாத காணிகள் சுவீகரிக்கப்படும்!

### வேலணை பிரதேச சபை தவிசாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட அபிவிருத்தி செய்யப்படாத நுளம்பு பெருகும் வகையில் உள்ள தனியார் காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளை உடன் துப்புரவு செய்யுமாறும் தவறும் பட்சத்தில் சபையின் சட்டத்திற்கு அமைய பிரதேச சபையால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு காணிகள் சுவீகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் பொதுமக்கள் தங்கள் காணிகளில் காணப்படும் உக்க முடியாத பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள், இலத்திரனியல் பொருட்கள், உடைந்த கண்ணாடிகள் என்பவற்றை சபையின் உப அலுவலகங்களான வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஒப்படைக்கலாம் என வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-7)

## புகையடிக்கும் உபகரணம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நவீன புகையடிக்கும் உபகரணம் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியிலான குறித்த புகையடிக்கும் உபகரணத்தை தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சி.சிவகுமாரிடம் கையளித்தனர்.

இந் நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழக செயலாளர் யோ.ஜெயக்குமார், கழக உறுப்பினர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கலந்து கொண்டனர். (இ-7-30)

### உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட

## கட்டுவன் - மயிலிட்டி வீதியை விடுவிக்கக்கோரி பாதுகாப்பு செயலருக்கு மாவட்ட செயலர் கடிதம்


(யாழ்ப்பாணம்)

யாழ்.வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மயிலிட்டி வீதியை விடுவித்துத்தருமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவுக்குக் கடிதம் அனுப்பினார்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகப் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் குறித்த வீதியை விடுவித்துத் தருமாறு யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய அரச அதிபரால் குறித்தகடிதம் அனுப்பப்பட்டது.(இ-10-18)




## கதிரைகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கதிரைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வழங்கினார்.

சாவகச்சேரி, கெற்பேலி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் குறித்த கதிரைகள் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோருடன் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (இ-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலகத்தின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சங்கானை பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் ந.சிவரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி பிரேமினி பொன்னம்பலம், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி கி.செந்தூரன், சங்கானை பிரதேச செயலக கணக்காளர் எம்.சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## அரச இலக்கிய விருது விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)


இவ்வருடத்துக்கான அரச இலக்கிய விருது விழாவுக்கான நூல்கள் எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து குறித்த விழாவினை ஏற்பாடு செய்துள்ளன.

சுய நாவல், சுய சிறுகதை, சுய கவிதைப் படைப்பு, சுய இணையோர் இலக்கியப் படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை, சிறுவர் இலக்கியப் படைப்பு (16 பக்கங்களுக்குக் குறையாமல்), சுய புலமைத்துவ மற்றும் ஆய்வு சார்படைப்பு, நானாவித விடய நூல்கள் (சமூகவியல், மானிடவியல் மற்றும் மொழிபெயர்ப்பு), மொழிபெயர்ப்பு - நாவல், மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்பு, மொழிபெயர்ப்புக் கவிதைப் படைப்பு, மொழி பெயர்ப்பு - நாடகம், மொழிபெயர்ப்பு - புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு என்பனவற்றை மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்க முடியும்.

சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்கள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஆக்கங்களாக இருப்பதோடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதிக்கு முன் அருகிலுள்ள பிரதேச செயலகங்களூடாக அனுப்ப முடியும். மேலதிகத் தகவல்களைப் பெற பிரதேசசெயலகக்கலாசாரஉத்தியோகத்தருடன்தொடர்புகொள்ளவும்.(இ-10)


# வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவராக பெரேரா நியமனம்



(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட ரேணுகா பெரேரா நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். (இ-10)

# இளைஞர்களுக்கு வரவேற்பு



(யாழ்ப்பாணம்)

நல்லெண்ண விஜயமாக கடற்கரையோரமாக துவிச்சக்கரவண்டி மூலம் கதிர்காமம் சென்று திரும்பிய நான்கு இளைஞர்களுக்கு வல்வெட்டி சந்தியில் வைத்து கடந்த முதலாம் திகதி புதன்கிழமை பொது மக்களால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி உடுப்பிட்டி வல்வெட்டிப் பகுதியிலிருந்து ஆரம்பமான துவிச்சக்கர வண்டிப் பயணம் கதிர்காமம் வரை சென்று மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கு கடந்த முதலாம் திகதி வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10-60)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-20 புனித மரியாள் வீதியில் அமைந்துள்ள ஆதன இல 32 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் பாவிலு பெண் பெஸ்ரிமால் என வரிமதிப்பு பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 05.03.2018 ஆம் திகதியிடப்பட்ட 1948 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரீஸ் வீதி இல. 114 ஐச் சேர்ந்தவர்களான இராஜப்பு லம்பேட்டும், தம்பையா புத்திசிகாமணியும், பெண் குமாரி ஸ்ரெலாவும் மற்றும் இராஜப்பு மயூவும் அவர்களில் 1ஆம், 3ஆம், 4ஆம் பேர்களின் சகோதரியாகிய கில்ஸ்லிதாசன் எமில்டாவுக்கு நன்கொடை மூலம் வழங்கியுள்ளார்கள். எனினும் குறித்த 1948ஆம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் குறிப்பிடப்படாது, 1964 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டு தற்போது கைவசமற்ற உறுதிப்படி உறுதி நிறைவேற்றுனர்களுக்கு உரித்து வந்தடைந்ததாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரீஸ் வீதி இல. 14 என்னுமிடத்தைச் சேர்ந்த மைக்கல் கில்ஸ்லிதாசன் உம் பெண் எமில்டாவும் பிரசித்த நொத்தாரிசு S.இளங்கீரன் முகதாவில் 04.06.2019ஆம் திகதியிடப்பட்ட 10817 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அற்றோனித்தத்துவக்காரர் செபமாலை ஜெபதாசன் ஊடாக வணபிதா மைக்கல் ராஜா ஜீசஸ்க்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம் மாநகர சபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு **J/85** வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பரயடி" விஸ்தீரணம் குளி (11.24) பதினொன்று தசம் இரண்டு நான்கும் மற்றும் மதற்குச் சேர்ந்தவைகளும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் 12.08.2017 ஆம் திகதி தயாரித்த 3306 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது.

இதன் எல்லை.

**கிழக்கு:- 2ஆம் குறுக்குத்தெரு**
**வடக்கு:- சென்மேரீஸ் வீதி**
**மேற்கு:- திரவியம் மேரியம்மாவின் ஆதனம்**
**தெற்கு:- தேவிபுஸ் பொன்னுக்குட்டியின் ஆதனம் இதடங்கலும்.**

தற்போது வணபிதா மைக்கல் ராஜா ஜீசஸ் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வணபிதா மைக்கல் ராஜா ஜீசஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட், முதல்வர்,**
**மாநகர சபை.**

(C-8835)


UNIVERSITY COLLEGE OF JAFFNA    UNIVOTEC

## University College of Jaffna

**University of Vocational Technology**
**Ministry of Higher Education, Technology and Innovations**

**Applications are open for the following Courses**

- Construction Technology
- Building Services Technology
- Mechatronics Technology
- Production Technology
- Farm Machinery Technology
- Food Technology
- Hospitality Management
- Cosmetology ( Beauty Culture )

Closing Date 31st January 2020

Accreditation QMS Registration TVEC Approved

Entry Qualifications
GCE A/L qualified or NVQ 4

Career Path : A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

*For more details*
University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone : 021 221 7791 / 021 221 7792

Application forms are available at leading bookshops or can be dowloaded from the website or can be collected from our office

Please pay the application Fee Rs. 500 to this account no Peoples Bank 162 - 100100045947 and attach the bank slip with application

(C-8844)



உ
ஸ்ரீ ராம ஜெயம்

## இணுவில் திருப்பதி
## அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலயம்
## சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா-2020

**காலம் 06.01.2020 திங்கட்கிழமை**

05.01.2020 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணி முதல் மூலவருக்கு கலச அபிஷேகம் ஆரம்பம்.

**06.01.2020 திங்கட்கிழமை**

அதிகாலை 4.30 மணிக்கு சுப்ரபாதம்
**அதிகாலை 5.00 மணிக்கு** கோபூஜை தொடர்ந்து இசையாராதனை
**அதிகாலை 5.50 மணிக்கு** சர்வ சுவர்ண அலங்காரம், விஸ்வரூப தரிசனம், சர்வ உபசாரம், தசதர்சனம், திவ்விய பிரபந்த சமர்ப்பணம், ஸ்ரீ நிவாசர் கருவறையில் இருந்து புறப்பாடு.

ந.ப.12.00 மணிக்கு விசேட பூஜை
மாலை 6.00 மணிக்கு இரவு திருவிழா ஆரம்பம்
மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை
மாலை 7.00 மணிக்கு சுவாமி வீதி உலா (நாச்சிமார் சகிதம்)
மாலை 7.30 மணிக்கு ஸ்ரீநிவாசர் கருவறை திரும்புதல் (வீணாகான சமர்ப்பணம்)
அகண்ட நாம பஜனை, தொடர்ந்து நித்திரை விழிப்பு வழிபாடு.

**07.01.2020 அதிகாலை 5.00 மணிக்கு தீர்த்தவாரி, சுவாமி வீதியுலா**
காலை 6.00 மணிக்கு பாரணை அன்னதானம்

**06.01.2020 இசை நிகழ்வுகள்**

**இரவு 7.30 மணி நாட்டிய சமர்ப்பணம்- "சாயி ஸ்ருதி" நாட்டியப் பள்ளியினரின் "கிருஷ்ணாவதாரம்"**
**இரவு 8.15 மணி ஸ்ரீநிவாசர், வீணாகான சமர்ப்பணத்துடன் கருவறை திரும்புதல்.**
**வழங்குபவர்கள்: சோமராகம் இசை மன்றம்-நல்லூர்**

**இரவு முழுவதும் நித்திரை விழித்து வழிபாடு செய்வதற்கேற்ப அடியார்களுக்கு ஆலயத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.**

**குறிப்பு:** வைகுந்த ஏகாதசி லக்ஷ்மி நரசிம்ம விஷேட அபிஷேகம், சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய விரும்பும் அடியார்கள் முற்கூட்டியே காரியாலயத்தில் பதிவுகள் மேற்கொள்ளவும்.

(7716)

**தொலைபேசி இல: 077 725 2476**

**ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்.**

# வீட்டுத்திட்டங்கள் குறித்து கொழும்பில் கலந்துரையாடல் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அழைப்பு

## அங்கஜன் எம்.பி.நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்கள் தொடர்பில் நாளை திங்கட்கிழமை கொழும்பில் இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடுவதற்காக சகல பிரதேச செயலாளர்களையும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் அழைத்துள்ளார்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத்திட்டங்களில் அதிகமானோருக்கு முழுமையாக நிதி கிடைக்காத நிலையில் குறித்த நிதியினைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்படும் எனத் தெரிய வருகிறது. (இ-10)

# ஆடைக்களஞ்சியத்தில் தீ



(சேதவத்தை)

கொழும்பு-சேதவத்தை பிரதேசத்திலுள்ள ஆடைக் களஞ்சியசாலையொன்றில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட திடீர் தீப்பரவல் காரணமாக களஞ்சியசாலை கட்டடம் சேதமடைந்ததோடு, கட்டடத்திற்குள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆடைகளும் முழுமையாக தீக்கிரையாகின.

சேதவத்தை - கலுபாலத்திற்கருகில் அமைந்துள்ள ஆடைக் களஞ்சியசாலையிலேயே நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இவ்வாறு திடீர் தீப்பரவல் ஏற்பட்டது.

பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் இணைந்து சுமார் 3 மணித்தியாலங்களின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீப்பரவலுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இத் திடீர் தீப்பரவலால் உயிர்ச் சேதம் எவையும் ஏற்படவில்லை என்று பொலிஸ் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியது. (இ-7)

# சிங்கப்பூருக்கு காணி வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை

## அமைச்சர் ரமேஷ் விளக்கம்



(கொழும்பு)

ஷங்ரில்லா ஹோட்டலுக்கு அருகாமையிலுள்ள் காணியை சிங்கப்பூர் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கடந்த அரசாங்கமே கைச்சாத்திட்டது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அத்துடன் தேசிய வளங்களை தனியார் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல, குறித்த காணி சிங்கப்பூர் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கவே தீர்மானிக்கப்பட்டது.

திட்டமிட்ட வகையில் காடாக்கப்பட்டுள்ள தோட்டக் காணிகள் தொடர்பில் தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிய நடவடிக்கைகளை கம்பனிகள் மேற்கொள்ளாவிடின் அரசாங்கம் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கலாசார பேரவை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச கலாசார பேரவை வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் திருத்தியமைக்கப்பட்ட கலாசாரப் பேரவை யாப்பிற்கிணங்க புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவிருப்பதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச கலாசாரப் பேரவை அங்கத்தவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட சகல துறை கலைஞர்களும் இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

# சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்ட சகலருக்கும் தண்டனை வழங்குக!

## ஜனாதிபதியிடம் உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுதாரியான சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்டவர்களை விசாரணை செய்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும் என அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தலைவர் உதெனி அத்துக்கோரள மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் அனைத்தும் தற்போது நிறைவேற்றப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மக்களுக்கும் தற்போது வாழ்க்கைச் செலவீனம் குறைவடைந்துள்ளது. கடந்த கால அரசாங்கம் கம்பெரலிய செயற்றிட்டத்தின் மூலம் இரண்டு வீடுகளுக்கு பாதை அமைப்பதற்கு ஐந்து இலட்சம் ரூபாய் செலவளித்தது. மக்களுக்கு ஒரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கும் முன்னர் அதன் மூலம் எத்தனை பயனாளர்கள் பயனடையக் கூடியதாக இருக்கும் என அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிராம மக்களின் தேவையை அறிந்து மக்களுக்கான சேவைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடியவர். புதுவருட தொடக்கத்தில் முன்னைய அரசாங்கம் பொதுமக்களுக்கு குறுஞ் செய்தி மூலம் புதுவருட வாழ்த்துக்களை அனுப்பிவைக்கும், ஜனாதிபதி கோட்டாபய அந்தச் செலவீனங்களையும் குறைத்து நாட்டிற்கு 69 இலட்சம் ரூபாய் வரையிலும் மீதப்படுத்தியுள்ளார்.

கடந்த நான்கரை வருடங்களில் இலங்கையில் பல்வேறுபட்ட குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தன. ஊழல்கள் பலவும் இடம்பெற்றன. கடந்த அரசாங்க ஆட்சியின் போதே குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன.

எனவே குண்டுதாரியான சஹ்ரானுடன் இணைந்து செயற்பட்டவர்களை விசாரணை செய்து அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நாட்டில் 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தத்தை நிறைவடையச் செய்து நாட்டில் அமைதியை நிலவச் செய்ததன் பின்னர் கடந்த அரசாங்க காலத்தில் இவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெற்றிருப்பது கவலைக்குரிய விடயமாகும். மக்கள் தங்களின் இயல்பு வாழ்க்கையை இழந்து, மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைக்குத் தள்ளியது இதே அரசாங்கம் தான்.


மேலும் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் அபிவிருத்திக்கு முதற்தடவையாக 20 இலட்சம் ரூபாய் நிதி ஜனாதிபதி கோட்டாபயவின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

பொதுஜன பெரமுன தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்படுவதாக குறிப்பிட்டிருந்த இந்த வாக்குறுதி தற்போது நிறைவேற்றப்பட்டது.

மக்களுக்கு இதுபோன்று பல செயற்றிட்டங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று உறுதியுடன் குறிப்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 340 | 240 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 105 | 100 |
| பச்சைமிளகாய் | 340 | 240 | 190 | 400 |
| தக்காளி | 250 | 200 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 90 | 80 |
| கோவா | 150 | 140 | 110 | 160 |
| கரட் | 350 | 350 | 200 | 480 |
| பூசணி | 60 | 60 | 70 | 80 |
| புடோல் | 200 | 140 | 130 | 160 |
| வாழைக்காய் | 80 | 50 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 280 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 120 | 120 |
| பாகற்காய் | 350 | 350 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 350 | 350 | 230 | 480 |
| பீற்றூட் | 260 | 240 | 210 | 300 |
| கறிமிளகாய் | 280 | 240 | 220 | 300 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 550 | 800 |
| போஞ்சி | 250 | 240 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 300 | 240 | 190 | 120 |
| கீரை - 1பிடி | 80 | 60 | 60 | 70 |
| தேசிக்காய் | 100 | 80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 200 | 220 | 200 |
| வெங்காயப்பூ | 350 | — | 250 | — |
| முள்ளங்கி | 120 | 160 | 110 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஜாப்பலா | 80 | 80 | 110 | 80 |





இறைவன் பிரம்மாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு அட்டவீரச் செயல்களுள் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது. 'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே..' என்று இந்நிகழ்வை புராணம் பேசும். ஆணவம் அகற்றி அருளொளி பரப்பிய இந்தத் திருவிளையாடல் நேற்று முன்தினம் நல்லூர் சிவன் கோயிலில் உற்சவமாக நிகழ்த்தப்பட்டது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# அதிகாலையில் அத்துமீறி நுழைந்தவர்களால் 12 பவுண் நகை, பணம் கொள்ளை!

## சாவகச்சேரியில் தொடரும் அவலம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டிப் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 2மணியளவில் நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்று கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, அதிகாலை 2 மணியளவில் நால்வர் அடங்கிய திருட்டுக் கும்பல் ஒன்று வீட்டு வளவிற்குள் அத்துமீறி நுழைந்து கதவினை உடைத்து உள் நுழைந்தது.

இதன்போது வீட்டில் இருந்த கணவன்-மனைவி இருவரையும் மிரட்டி அவர்களிடம் இருந்த 12பவுண் தங்க நகைகள், 90 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றையும் கொள்ளையிட்டு தப்பித்துச் சென்றது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வாரம் சாவகச்சேரி - நுணாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் 49பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பூரண ஆதரவு

## பியதாஸ தெரிவிப்பு



(கண்டி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவை வழங்குவதாக அக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கலாநிதி ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 17 பிரபல கட்சிகளுடன் இணைந்து பரந்த கூட்டணியாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் அடுத்து நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் களமிறங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

மேலும் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், கட்சிக்குள் சில முக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட வேண்டிய தேவையுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நர்த்தனஷேத்திரா ஆடலரங்கம் இன்று

(யாழ்ப்பாணம்)

மார்கழி மகா உற்சவத்தின் நர்த்தனஷேத்திரா ஆடலரங்கம்-8 இன்று 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையரங்கில் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் (நடனம்) கலாபூஷணம் ஸ்ரீமதி.பத்மினி செல்வேந்திரகுமார் தலைமையில் இடம்பெறும். (இ-5)

## ஆட்டோ உரிமையாளர்களுக்கு காப்புறுதித் திட்டம்



(பொறளை)

ஆட்டோ உரிமையாளர்களுக்காக "ஹரி மக" (சரியான பாதை) அமைப்பால் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

பொறளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொழும்பு மாவட்டத்தின் ஆட்டோ சாரதிகளை விழிப்புணர்வூட்டும் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பல்கலை.மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.


ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான வணிகப் பொருளியல் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அவர் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க கடமைகளைப் பொறுப்பேற்றபோது, உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உடனிருந்தார்.

இதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை ஜனாதிபதி விரைவில் நியமிப்பார் எனத் தெரியவருகிறது.

அத்துடன், நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் கடந்த 20ஆம் திகதியுடன் பதவி விலகிய நிலையில் பேரவைகள் செயலற்றுப் போயுள்ளன.



அவற்றுக்கான புதிய உறுப்பினர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியமிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊழல், மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அந்தஸ்தைக் கருதாது சட்டம் அமுல்படுத்தப்படும்

## கொள்கைப் பிரகடனத்தில் கோட்டா




(நேற்றைய தொடர்ச்சி)

இவ் அனைத்துப் பிரிவுகளும் நிறைவு பெறுமிடத்தே இலங்கை உண்மையிலேயே சுபீட்சமானதொரு நாடாகும்.

"சுபீட்சத்தின் நோக்கு" என்பதன் வாயிலாக நாங்கள் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையினையே அறிமுகப்படுத்துகின்றோம்.

ஒவ்வொரு பிரஜைக்குமாக ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்திலான பொருளாதார நிலைப்பாட்டை உறுதிப்படுத்துதல், முன்னேறுவதற்கு முயற்சிக்கும் ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்புக்களை வழங்குதல், மக்கள்சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட தூய்மையான அத்துடன் வினைத்திறன்மிக்க அரச சேவையை உறுதிப்படுத்தல் மற்றும் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களைப் பாதுகாத்து அவர்களை வலுவூட்டுதல் அதன் முக்கிய நோக்கமாகும்.

### சுபீட்சத்தின் நோக்கு

மக்களை மையமாகக்கொண்ட பொருளாதாரத்தினை வெற்றிகரமாகத் தாபிப்பதாயின் அரசாங்கத்தின் உச்சக்கட்ட உத்தியோகத்தர்கள் தொடக்கம் குறைந்தபட்ச உத்தியோகத்தர் வரை நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக எமது நோக்கு மற்றும் நோக்கங்களைப்பற்றி அறிந்திருக்க வேண்டும். அப்போது அவர்களின் கடமைகளை மிகவும் செயற்றிறனான முறையில் நிறைவேற்றலாம்.

ஊழல்கள் மற்றும் மோசடிகளைப் புறக்கணிப்பதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நாங்கள் செயற்படுத்த வேண்டியுள்ளது. ஊழல் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நாங்கள் அந்தஸ்தைக் கருதாது சட்டத்தை விரைவில் செயற்படுத்தவுள்ளோம்.

இன்று அநேகமான நாடுகள் அரசதுறையின் வினைத்திறமையை உயர்த்துவதற்காகத் தொழில்நுட்பத்தை தீர்வொன்றாக பயன்படுத்தியுள்ளனர். அதனூடாக அனைவருக்கும் சமவாய்ப்புக்களை வழங்க முடியும். அதனால் அரச நிறுவனங்களில் தொழில்நுட்பப் பயன்பாட்டைப் பரவலாக்குவதன்பால் நாங்கள் விசேட கவனத்தைச் செலுத்துகின்றோம்.

எமது நாட்டின் பூகோள ரீதியிலான அமைவு, பௌதீக வளங்கள் மற்றும் மனித வளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே நாம் எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டியுள்ளது.

இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையானது கிரேக்கம், ரோம், அரேபியா, சீனா உள்ளிட்ட பல்லின வியாபாரிகள் வருகின்ற சர்வதேச வியாபார நிலையமாகவிருந்தது. இலங்கை அவ்வாறு உலகில் பிரபல்யமாவதற்கு முக்கிய காரணமானது கீழைத்தேய மற்றும் மேலைத்தேய இணைப்பை ஏற்படுத்தும் கடல்பாதையில் மிக முக்கியமானதொரு இடத்தில் எமது நாடான இலங்கை அமைந்திருத்தலாகும். இன்றும் நாம் அச்சலுகையை அவ்வாறே பெற்றுக் கொள்ள முடியுமாகவுள்ளது.

2005 - 2014 இடைப்பட்ட காலத்தில் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இலங்கையை தென் ஆசியாவின் பொருளாதார மையமாக முன்னேற்றுவதற்கு திட்டம் வகுத்தது. மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகமானது தென் மாகாணத்தின் மாபெரும் தொழில்நுட்ப நகரத்தினைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே தெரிவு செய்யப்பட்டது.

## கொழும்பு துறைமுக நகரம் ஏன்?

இலங்கையை ஆசியாவில் நிதிசார் மற்றும் வர்த்தக மையமாக உருவாக்குவதற்காகவே கொழும்புத் துறைமுக நகரத்தை கட்டியெழுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. நீண்டகால நோக்கங்களுடன் திட்டமிடப்பட்ட அக்கருத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாங்கள் செவ்வையான ஒரு திட்டத்தின்படி செயற்பட்டால் பிராந்திய அயல் நாடுகளுக்குப் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற பல்வேறு சர்வதேச வியாபாரங்களை இலங்கையில் நிலைப்படுத்திக் கொள்ள முடியும். அதற்காக முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் அம்முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் தேவையான சகல வசதிகளையும் துரிதமாக வழங்குவதற்காகவும் நாங்கள் தயாராகவிருத்தல் வேண்டும்.

அதிவேகப் பாதைத் தொகுதிகளைப்போன்று நெடுஞ்சாலைத் தொகுதிகளை முன்னேற்றும் பணிகளைத் துரிதப்படுத்தி நாட்டின் எந்தவொரு இடத்திலிருந்தும் இன்னுமொரு இடத்திற்குச் சில மணித்தியாலயங்களினுள் பயணிக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துதல் பொருளாதார அபிவிருத்திக்கு மிக முக்கியமானது.

புகையிரதச் சேவையை மேம்படுத்துதலும் இவ் வேலைத்திட்டத்தின் அவசியமானதொரு பிரிவாகும். வினைத்திறன்மிக்க அத்துடன் சொகுசு முறையிலான புகையிரதச் சேவையின் மூலம் இன்று பாரியதொரு பிரச்சினையாக நிலவுகின்ற வீதி நெருக்கடிக்கான தீர்வுகளைக் காண முடியும்.

நகரமயமாக்கல் ஒரு நாட்டிற்கு நன்மையைப் போன்று தீமையான விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. அபிவிருத்தி நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக எமக்கு மீள் நகரமய வேலைத்திட்டமொன்று தேவைப்படுகிறது.

இதனூடாக நகரப்புற நெருக்கடியைக் குறைப்பதற்கும், சூழல் மாசடைவதைக் குறைப்பதற்கும், அதேபோன்று வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதற்கும் எமக்கு வசதி கிடைக்கிறது.

இலங்கைபூராகவும் பரந்திருக்கும் மக்களுக்கு தமது கல்வி நடவடிக்கைகள், சுகாதாரச் சேவைகள் மற்றும் தொழில்கள் என்பவற்றை நடத்திச் செல்வதற்காக தமது பிரதேசத்தினுள் வேண்டிய வசதிகள் இருக்க வேண்டும். வீதிகள் மற்றும் புகையிரதப் பாதைத் தொகுதிகளின் முன்னேற்றத்தைப் போன்று நாடு முழுவதிலும் அதிவேக சர்வதேச வலையமைப்பு வசதிகள் மற்றும் தொடர்பாடல் வசதிகள் என்பவற்றை இதற்காக வழங்குதல் முக்கியமாகிறது.

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின்போது மின்சார விலைகள் முக்கிய காரணியாகும். குறிப்பாக பொருளாதாரத் துறைகளுக்கு முதலீட்டாளர்களை வரவழைக்கும்போது இது அழுத்தம் செலுத்துகின்றது. நியாயமான விலைக்கு வலுசக்தியை உற்பத்தி செய்வதற்காக எமக்குக் குறுகியகால அத்துடன் நீண்டகாலத் தீர்வுகள் தேவைப்படுகிறது. நீண்ட காலத் தீர்வுகளைத் தேடும்போது சூரிய சக்தி, காற்றின் சக்தி, நீர் மின்சாரம் போன்ற சுற்றாடல் நேயமிக்க புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய மூலங்களின்பால் முக்கிய கவனம் செலுத்துவது எமது கொள்கையாகும்.

எமது நாடு இரத்தினக்கற்கள் மற்றும் கனிய வளங்கள் நிறைந்த நாடாகவிருப்பினும் அவற்றின் பெறுமதியை அதிகரிக்கும் தொழில்கள் இற்றை வரைக்கும் சர்வதேச ரீதியில் முன்னேற்றமடையவில்லை. பெறுமதியை அதிகரிக்காது இத்தகைய இயற்கை வளங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகளவிலான அந்நியச் செலாவணியை வருடாந்தம் இழக்க நேரிடுகிறது.

இலங்கையில் மட்டுமன்றி ஆபிரிக்க பிராந்திய நாடுகளிலிருந்துகூட கொண்டுவரப்படும் இரத்தினக் கற்களின் பெறுமதியை அதிகரித்து விற்பனை செய்யக் கூடிய சர்வதேச ரீதியிலான இரத்தினக்கல் வர்த்தகத் தொகுதியொன்றை இலங்கையில் தாபிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடல்கள் மற்றும் புவிச்சரிதவியல் அளவைகளுக்காக புதிய தொழில்நுட்ப வசதிகளை வழங்க வேண்டுமென்பதுடன், இலங்கையின் கனிய வளங்களுக்குப் பெறுமதி சேர்க்கும் கைத்தொழில்களுக்கான முதலீடுகளுக்கு விசேட சலுகைகளை வழங்கி அவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

பல்வேறு சட்டதிட்டங்கள், அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றின்மீதான தடைகளின் மூலம் இலங்கையின் பாரம்பரிய வாழ்வாதாரங்களாகிய இரத்தினக்கல் தொழில், ஓட்டுக் கைத்தொழில், செங்கல் கைத்தொழில், தச்சு வேலை மற்றும் கைத்தொழில்கள் போன்ற துறைகளுக்காக அநாவசியமான அத்துடன் அநீதியான வரையறைகளை விதித்து நாட்டின் அபிவிருத்திக்கு தடையேற்படுத்துவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

எதிர்காலத்தைத் திட்டமிடும்போது கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கடற்றொழில் முதலியன தொடர்பாகத் தற்போது இருப்பதைவிட முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறந்ததொரு கால நிலை இருக்கின்ற அத்துடன் அதிவிசாலமான கடல்சார் பொருளாதார வலயத்திற்கு உரித்துடைய நாடென்ற ரீதியில் நம்மால் இத்தொழிலை இதைவிட மிகவும் முன்னேற்ற முடியும்.

சரக்குப் பொருட்கள், பழவகைகள், மரக்கறி வகைகள், தானியங்கள், மாமிசம் மற்றும் மீன் போன்ற ஏற்றுமதி செய்யக் கூடிய கமத்தொழில் உற்பத்திகள் பல இருக்கும்போது இதைவிட ஏற்றுமதி வருமானத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டில் வாழும் மக்களின் 1/3 பங்கினர் கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கடற்றொழில் என்பவற்றின் மீது வாழ்கின்றனர். நாங்கள் இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்.

இத்தொழில்களை முன்னேற்றுவதற்காகப் பாரம்பரிய செய்கை முறைகளுக்கு அப்பாற்பட்ட தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட புதிய அணுகுமுறை தேவைப்படுகின்றது.

அதேபோன்று நச்சுத் தன்மையற்ற உணவு உற்பத்தியை நோக்காகக்கொண்ட கமத்தொழிலுக்காகச் சேதனப் பசளைப் பயன்பாட்டை பரவலாக்குதலும் எமது கொள்கையில் ஒரு பகுதியாகும். எதிர்வரும் தசாப்தத்தில் இலங்கையில் கமத்தொழிலை முற்றுமுழுதாகச் சேதனப் பசளைப் பயன்பாட்டில் ஈடுபடுத்துவத்றகான திட்டங்களை நாங்கள் தயாரிக்க வேண்டும். உள்ளூர் ரீதியாக சேதனப் பசளை உற்பத்தியை விருத்தி செய்யும் வேலைத் திட்டமும் இதில் உள்ளடங்குகின்றது.

கமத்தொழில் உற்பத்திகளை வரையறையின்றி மீள் ஏற்றுமதி செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளதால் சிறிய ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் செயற்பட்டது. கமத்தொழில் உற்பத்திகளை மீள் ஏற்றுமதி செய்வதை முற்றும் முழுதாக நிறுத்துவதற்கு தற்போது பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கடல்சார் பொருளாதாரம் தொடர்பாகவும் இதை விடக்கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். கடற்றொழிலை முன்னேற்றுவதற்குத்தேவையான புதிய தொழில்நுட்பம், இயந்திர உபகரணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக முறையானதொரு வேலைத்திட்டமொன்றை நாங்கள் அறிமுகப்படுத்தவுள்ளோம். ஆழ்கடலில் கடற்றொழிலில் ஈடுபடும் படகுகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகச்சகல கடற்றொழில் துறைமுகங்களை நவீன்மயப்படுத்துவதுடன், தேவைகளுக்கேற்ப புதிதாக துறைமுகங்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நன்னீர் மீன்பிடித்தொழிலை முன்னேற்றுதலும், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதலும் எமது திட்டத்தின் ஒரு பகுதியாகும். எதிர்காலச் சந்ததியினர் சார்பில் சூழலைப் பாதுகாத்தல் எமது அடிப்படைப் பொறுப்பாகும். அரச கொள்கைகளைத் தயாரிக்கும் போதும், செயற்படுத்தும்போதும் சூழல் பாதுகாப்புத் தொடர்பில் நாங்கள் முக்கிய கவனத்தைச் செலுத்துவோம்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் போது உலகில் முன்னணியில் திகழ்கின்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஒரு நாடென்ற வகையில் எமக்குள்ள மிகப் பெறுமதியான வளமானது எமது எதிர்காலச் சந்ததியாகும். அதனால் மனித வள அபிவிருத்தியை எமது அரசாங்கத்தின் முக்கியமான தொரு பொறுப்பு என நாங்கள் இனமறிந்துள்ளோம்.

நாட்டின் எதிர்காலச் சந்ததியைப் பயன்மிகுந்த பிரஜைகளாக்குவதற்குத் தேவையான அறிவினால் அவர்களைப் போஷிப்பதற்கும், அவர்களின் திறன்கள் மற்றும் நிபுணத்துவங்களை விருத்தி செய்வதன்பால் முக்கிய கவனம் செலுத்துவதற்கும் எமக்கு நேர்ந்துள்ளது. இளைஞர், யுவதிகளை வழிதவறவிடாது அவர்களுக்காக உயர் கல்விக்கும், தொழில்நுட்ப கல்விக்குமுள்ள வாய்ப்புகளை விரிவாக்கவேண்டும் இதற்குத்தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மிகக் குறுகிய காலத்தினுள் கட்டியெழுப்ப வேண்டும்.

(தொடரும்...)

# சிறையில் கைதி மர்ம மரணம்!

## உறவினர்கள் வீதி மறியல் பொலிஸார் தீவிர விசாரணை

(கேகாலை)

கேகாலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு குறிப்பிட்டு மாத்தளை - தல்கொடபிட்டி வீதியை மறித்து உயிரிழந்தவரின் உறவினர்கள் மற்றும் பிரதேச வாசிகளும் இணைந்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தல்கொடபிட்டி வீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக அந்த வீதியில் பாரிய வாகனநெரிசல் ஏற்பட்டிருந்ததுடன், குறித்த பகுதியின் பாதுகாப்பிற்காக மேலதிக பொலிஸாரும் இணைக்கப்பட்டனர்.

கொக்கரெல்ல பொலிஸார் கடந்த வருடம் டிசெம்பர் 27 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நபரொருவரை கைது செய்து, குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர். இதன்போது நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதையடுத்து, அவர் கேகாலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

இவர் கடந்த மாதம் 29 ஆம் திகதி சிறைச்சாலையில் உயிரிழந்ததாக குறிப்பிட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் அவரது உயிரிழப்பிற்கு சிறைச்சாலை அதிகாரிகளே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பான முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் குறிப்பிட்டே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குருநாகல் பிரிவின் பதில் பொறுப்பதிகாரியும் கேகாலை மாவட்ட உப பொலிஸ் அத்தியட்சகரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற பகுதிக்கு வந்து சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் தெளிவுபடுத்தியதையடுத்து ஆர்ப்பாட்டாளர்கள் கலைந்து சென்றதுடன் வாகனப் போக்குவரத்தும் வழமைக்குத் திரும்பியது. (இ-7)

# நில ஆய்வுக்காக மலைப்பகுதி ஊடாக பயணிக்கையில் விமானம் விபத்து

## விரிவான விசாரணை நடத்தப்படும்-அமைச்சர் சமல்



(கொழும்பு)

விபத்துக்குள்ளான விமானப் படையின் விமானமானது கிழக்கில் நில ஆய்வு நடவடிக்கைகளுக்காக மலைப்பகுதியூடாக பயணித்துக்கொண்டிருந்த போது மலையொன்றில் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும் இந்த விபத்து சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ப்பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியபோது ஹப்புத்தளையில் இடம்பெற்ற விமான விபத்துச் சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

விமானப் படையின் வை-12 ரக விமானமொன்று வீரவிலவில் இருந்து இரத்மலானை நோக்கிப் பயணிக்கும் போது விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிய வந்துள்ளதுடன் இதில் விமானப் படையைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர் என அறிய முடிகின்றது.

இந்தச் சம்பவம் உண்மையாக இருக்கக்கூடாது என்றே நான் இவ்வேளையில் பிரார்த்திக்கின்றேன். இருப்பினும் இந்த சம்பவம் இடம்பெற்றிருந்தால் எதிர்க்கட்சி சார்பிலும் சபையில் அமர்ந்துள்ள அனைவர் சார்பிலும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, குறித்த விமானம் இரத்மலானையிலிருந்து வீரவிலவுக்கு சென்று பின்னர் அங்கிருந்து மலைப் பிரதேசத்திற்கு சென்று கிழக்கு நிலப்பகுதியில் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சென்றுகொண்டிருந்த போது விமானம் சற்று தாழ்வாகப் பறந்துகொண்டிருந்த வேளையில் ஹப்புத்தளை பகுதியில் மலையொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவே அறிய முடிகின்றது.

இதில் இரண்டு விமானிகளும் இரண்டு ஆராய்ச்சி உதவியாளர்களும் பயணித்துள்ள நிலையில் அவர்கள் நால்வரும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எமது கவலையை தெரிவித்துக் கொள்வதுடன் இதுபற்றி விரிவான விசாரணை நடத்தப்படும்.

விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பிக்க விரைவில் நடவடிக்கையெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரச ஓய்வூதியத் திணைக்களத்தால் இவ்வாண்டிற்கான திகதிகள் அறிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஓய்வூதியத் திணைக்களத்தால் 2020 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி, பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி, மார்ச் மாதம் 10 ஆம் திகதி ,ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி, மே மாதம் 6 ஆம் திகதி, ஜூன் மாதம் 10 ஆம் திகதி, ஜூலை மாதம் 10 ஆம் திகதி, ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி, செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி, ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி, நவம்பர் மாதம் 10 ஆம் திகதி, டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற முடியும் என மேலும் அறிவிக்கப்பட்டது. (இ-10-134)

# யாழ்.பல்கலையில் மரநடுகை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட 39ஆம் அணி மாணவர்களால் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் ஒலிவ், சமுத்திரக்கண்ணி, மகிழ் போன்ற மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

இம் மரநடுகை நிகழ்விற்கு கலைப்பீட பீடாதிபதி கலாநிதி சுதாகர், இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி சுகந்தினி முரளிதரன், மாணவ ஒழுக்காற்று அதிகாரி கஜன், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் கிரிசாந், பூங்கா பராமரிப்புப் பிரிவு மேற்பார்வையாளர் கருணைநாயகம், 39 ஆம் அணி மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டினர். (இ-9)

# இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(கிளிநொச்சி)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழு நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. 2020 ஆம் ஆண்டில் இக்கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் முதன்முதலாக நீர்க்குழாய் பொருத்துநர் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ-4) கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 155 ஆம்கட்டை, ஏ9 வீதி, கிளிநொச்சி அல்லது தொ.இல 021228 5686 இலக்கத்துடன் எதிர்வரும் 10.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (இ-7)


## வேலையாட்கள் தேவை

புத்தளத்தில் இருக்கும் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை பார்ப்பதற்கு தனியாகவோ அன்றி குடும்பத்துடன் வேலை ஆட்கள் தேவை. விவசாயம் நீர்ப்பாசனத்தில் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் அநாதரவாக இருப்பவர்கள் தனியாக இருக்கும் வய்தான கணவன் -மனைவிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி-8849) தொடர்பு:- 077 731 9426



பழமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(C-8832)

றெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 112 3471

Viber:076 466 4153,








## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

22.12.2019 இல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2020 இற்கான புதிய நிர்வாகிகள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | திரு.மு.தர்மகுலராசா அவர்கள் | தலைவர் |
| 2. | திரு.சி.கனகராசா அவர்கள் | உபதலைவர் |
| 3. | திரு.பா.றஞ்சித்குமார் அவர்கள் | செயலாளர் |
| 4. | திரு.தி.சிவநேசன் அவர்கள் | உப செயலாளர் |
| 5. | திரு.சி.நாகேஸ்வரன் அவர்கள் | பொருளாளர் |
| 6. | திரு.ந.கோகுலராசா அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 7. | திரு.இ.சேகர்றெமினியஸ் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 8. | திரு.செ.இராசேந்திரன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 9. | திரு.அ.டெனீஸ்வரன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 10. | திரு.பு.துஷ்யந்தன் அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 11. | திருமதி.செ.கோமளேஸ்வரி அவர்கள் | நிர்வாக உறுப்பினர் |
| 12. | திரு.எ.இ.போல்ஜெயகாந்தன் அவர்கள் | போசகர் |
| 13. | திரு.ச.தியாகராசா அவர்கள் | போசகர் |

(சி-8846)

குறிப்பு: எமது சங்க பழைய, புதிய நிர்வாக (2020) ஒன்றுகூடலும் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றலும் 06.01.2020 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

நிர்வாகம் 40, முனிஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

# விவசாயக்குளம் உடைப்பெடுத்ததால் 120 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு





(நெளுக்குளம்)

வவுனியா ஈச்சங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கள்ளிக்குளம் விவசாயக்குளம் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் உடைப்பெடுத்ததன் காரணமாக குளத்தின் கீழ் விதைக்கப்பட்டு அறுவடைக் காலம் நெருங்கிய நெற்பயிர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் விவசாயிகள் பாரியளவில் நட்டமடைந்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டு புனரமைக்கபட்ட கள்ளிக்குளத்தில் இம்முறை அதிகளவு மழைவீழ்ச்சி காரணமாக குளம் நீரினால் நிரம்பி காணப்பட்டது.

இந்நிலையில் குளக்கட்டில் சிறியளவு துவாரத்தின் ஊடாக நீர்கசிந்து படிப்படியாக அரிக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு உடைப்பெடுத்துள்ளது.

இதன் காரணத்தால் 120 ஏக்கர் பரப்புடைய நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கு சுமார் 35 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து பயனடையவிருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு நெற்செய்கை பாதிப்படைந்ததால் விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளுக்குள் சிக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-299)

# மகிந்த தேசப்பிரிய மன்னாருக்கு விஜயம்



(மன்னார்)

இலங்கை தேர்தல் ஆணையளர் மகிந்த தேசப்பிரிய மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களத்துக்கு நேற்று சனிக்கிழமை காலை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கடந்த வருடம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பித்தல் தொடர்பாகவும் அதே நேரத்தில் குறித்த தேர்தலோடு பணியாற்றிய அதிகாரிகளை சந்திக்கும் முகமாகவும் குறித்த விஜயம் அமைந்திருந்தது. ஜனாதிபதி தேர்தலின் போது மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பான முழுமையான அறிக்கைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அதனை முழுமைப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (ஜ-285)

# ஆணின் சடலம் மீட்பு சந்தேகத்தில் ஐவர் கைது

(பரந்தன்)

கிளிநொச்சி மலையாளபுரம் புதுஐயன்குளத்தின் அணைக்கட்டின் கீழ் பகுதியில் பலத்த வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் கடந்த 30 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தது.

குறித்த நபரை கத்தியால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கிளிநொச்சி கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் கிளிநொச்சி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கொலை செய்ய பயன்படுத்திய கத்தி மட்டும் தப்பித்துச் செல்ல பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

அத்தோடு மறைந்து உள்ளதாக தெரிவிக்கப்படும் மேலும் ஒரு சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கிளிநொச்சி குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஜெசிந்தன் தலைமையிலான குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (ஜ-312)


# வவுனியா வர்த்தக சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(நெளுக்குளம்)

வவுனியா வர்த்தக சங்கத்தின் "அனைவருக்கும் கல்வி உதவித் திட்டத்தின்" ஊடாக 200 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணாங் கள் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது. வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முகராஜா தலைமையில் இடமபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வர்த்தக சங்கத் தலைவரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான ரி.கே.ராஜலிங்கத்தின் சேவைகள் நினைவு கூரப்பட்டன.

இந்நிகழ்வில் நகரசபை தவிசாளர் இ.கௌதமன், பிரதேச சபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமார், மாவட்ட செயலகத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தி யோகத்தர் ஜெ.ஜெயக்கெனடி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், நகரசபை உறுப்பினர்கள், இராணுவத்தினர் பொலிஸார், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)





முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும், சாதிக்கும் சந்ததி என்னும் செயற்றிட்டத்தினுாடாக 184 மாணவர்களுக்கு, கடந்த வியாழக்கிழமை கற்றல் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ள, ஒலுமடு, புலிமச்சிநாதகுளம், அம்பகாமம், மன்னாகண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தெரி வுசெய்யப்பட்ட 184 மாணவர்களுக்கு, ஐம்பத்தையாயிரத்து நாநூறு (55,400.00) ரூபாய் பெறுமதியிலான கற்றல் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# வவுனியாவில் இலவச ஆடை வங்கி

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களின் ஆடைத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு இலவச ஆடை வங்கியொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பூந்தோட்டம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சி.சு.கோணேஸ்வரலிங்கத்தினை ஸ்தாபகராக கொண்டு ஆரம்பிக்கப்படும் இலவச ஆடை வங்கி எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வவுனியா பொது வைத்தியசாலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் வங்கியில் புதிய ஆடைகள் மற்றும் தம்வசம் உள்ள பாவனைக்கு மேலதிகமான நல்ல நிலையில் உள்ள ஆடைகளையும் பொது மக்கள் வைப்பு செய்து நோயாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்குட்பட் டோருக்கு உதவ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-299)

# பொறியியல்பீட மாணவர்களின் வருடாந்த மாபெரும் கண்காட்சி

(முறிகண்டி)

யாழ்.பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த மாபெரும் கண்காட்சி (EXPO ARIVIYAL NAGAR- 2020 ) எதிர் வரும் திங்கட்கிழமையும் மறு நாள் செவ்வாய்க்கிழமையும் இடம் பெறவுள்ளது. காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல் கலைக்கழக பொறியியல் பீடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல் கலைக்கழக தகுதி வாய்ந்த அதி காரி பேராசிரியர்க.கந்தசாமி கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார். (ஜ-100)

# வீதிப்புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(கண்டாவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வண்ணக்கேணி பிரதான வீதிப் புனரமைப்பு பணிகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் நீண்ட காலமாக புனரமைக்கப்படாது காணப்பட்ட குறித்த வீதியை புனரமைத்து தருமாறு கிராம அமைப்புக்கள் மற்றும் மக்கள் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க குறித்த வீதியை புனரமைக்கும் படி பாராளுமன்ற உறுப்பினர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தவிசாளர் குறித்த வீதியினை வடக்கு மாகாண விவசாய அமைச்சினுடைய சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் ஐந்து மில்லியன் நிதியில் இருந்து புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதை தொடர்ந்து குறித்த வீதிக்கான அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன. (ஜ-315)

மனம் தூய்மையாக இருந்தால்;
பத்து மனிதர்களது பலத்தைப் பெறுகிறோம்.
- கிருபானந்த வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தற்கொலை மரணங்களை தடுத்து நிறுத்துங்கள்

வட பகுதியில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கொலை மரணங்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

ஒவ்வொரு நாளும் தற்கொலை செய்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைப் பார்க்கும்போது இதயம் பதைபதைத்துப் போகிறது.

தற்கொலை செய்பவர்கள் இளம் வயதினராக இருப்பதும் மிகப்பெரும் அதிர்ச்சியைத் தருவதாகும்.

தற்கொலைக்கான காரணங்களைப் பார்க்கும்போது இதற்காக இப்படிச் செய்தார்களாக என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு சிறு பிரச்சினைகளைக்கூட தாங்கிக் கொள்ள முடியாத அளவில் நம் இளம் சமூகம் பலயீனப்பட்டுள்ளதென்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

சிறிது காலத்துக்கு முதல் வர்த்தக முயற்சியில் நட்டப்பட்டவர்கள், மீற்றர் வட்டிக்குக் கடன் பெற்று எல்லாவற்றையும் பறிகொடுத்தவர்கள்; எதுவும் செய்ய முடியாத நிலையில் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டனர்.

இந்த அவலச் சம்பவம் கண்டு நம் மக்கள் சமூகம் குய்யோ முறையோ என்று கதறி அழுது வர்த்தக நட்டங்கள், மீற்றர் வட்டி ஆபத்துக்களை எடுத்துரைத்ததன் காரணமாக அந்த அவலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இஃது ஆறுதலைத் தந்திருந்தபோதிலும் இப்போது பேரிடியாக இளம் பிள்ளைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்ற சம்பவங்களை அறியும்போது இறைவா! ஏன்தான் இந்தக் கொடுமை என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு தற்கொலை மரணங்கள் பயங்கரமாக உள்ளன.

எனவே இது விடயத்தில் மக்கள் சமூகம் விழிப்படைய வேண்டும்.

பொது அமைப்புகள் ஆற்றுப்படுத்தும் பணியில் இறங்க வேண்டும். உளவளத்துணையாளர்கள் ஊர் தோறும் தங்கள் பணியின் முக்கியத்துவத்தைக் கூறி இளம் சமூகத்திடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும்.

இதற்குமேலாக; சாந்திகம், அகவிழி, கைகொடுக்கும் நண்பர்கள் போன்ற அமைப்புகள் தங்கள் பணியை விரிவுபடுத்தி அதன் மூலம் தற்கொலை மரணங்களைத் தடுக்க முன்வர வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

அதாவது தங்கள் பிள்ளைகளின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிப்பதுடன் தங்கள் பிள்ளைகள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வும் ஆலோசனையும் வழங்கக்கூடிய பக்குவ நிலையை பெற்றோர்கள் கொண்டிருப்பதும் கட்டாயமானதாகும்.

# அரச நிறுவனத்தில் மக்களிடம் இலஞ்சம் பெறுவோரைக் கைது செய்ய நடவடிக்கை

### கோட்டாவின் உத்தரவுக்கு அமைய விசேட நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் சேவையை பெற்றுக் கொள்வதற்காக வரும் பொது மக்களிடம் இலஞ்சம் பெறும் நபர்களை அதே இடத்தில் கைது செய்வதற்கு விசேட நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

மேல் மாகாணத்தை கேந்திரமாக கொண்டு இதற்கென பொலிஸ் பிரிவு ஒன்று செயற்பட்டு வருவதுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் இதன் தலைமை அதிகாரியாக செயற்படுகின்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக செயற்படும் இந்த பிரிவில் புலனாய்வு பிரிவை சேர்ந்த அதிகாரிகள் சிலரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களிடம் இலஞ்சம் பெறுவதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் பல நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு தற்போது தகவல்கள் கிடைத்துள்ளன. (ம-3)

சிறுபான்மைக் கட்சிகளின்

## பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்ய அரசு முயற்சி

### மனுஷ எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறுபான்மையினக் கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யவே, அரசாங்கம் புதிய அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தைக் கொண்டுவர முயற்சித்து வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மனுஷ நாணயக்கார மேலும் கூறியுள்ளதாவது,

“தற்போது அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளதா என கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியெல்லாம் கட்சியில் எந்தவொரு பிரச்சினையும் கிடையாது. நாம் ஐக்கிய தேசியக் கட்சியினராக ஒன்றிணைந்து சஜித் பிரேமதாசவின் தலைமையில் சிறப்பாக செயற்படுவோம்.

ஆட்சிக்கு வந்தவுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரட்னவை கைது செய்தார்கள். இந்த அரசியல் பழிவாங்கலில் இருந்து மக்களைத் திசை திருப்ப, தற்போது பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளார்கள்.

இதுதான் இவர்களது ஜனநாயகம். இந்த நிலையில், 19 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்கவும் அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது என அவர் குற்றம் சாட்டினார். (ம-3)

கோயிலுக்குச் செல்வதற்காக

## அதிகாலையே நீராடிய வயோதிபப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோயிலுக்குச் செல்வதற்காக அதிகாலைவேளை நீராடிய வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த த.செல்வராணி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, திருவெம்பாவைப் பூஜைக்காக அதிகாலை வேளை குறித்த பெண் குளித்துள்ளார். அச்சமயம் நெஞ்சு வலிப்பதாகத் தெரிவித்தமையையடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இவரது மரண விசாரணையை தென்மராட்சி வலய திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.இளங்கீரன் மேற்கொண்டார். (ம-3,10)

## நாட்டை அழகாக்க மக்களிடம் ஒழுக்கம் இருக்க வேண்டும்

### பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன

(கொழும்பு)

நாட்டுக்கு ஒழுக்கமான மக்கள் அவசியம் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை அழகாக்குவதற்கு மக்களிடத்தில் ஒழுக்கம் இருக்க வேண்டியது அவசியமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காப்புறுதிப் பத்திரங்கள் மூலம் சாரதியொருவர் விபத்தில் சிக்கி உயிரிழக்கும் பட்சத்தில் அவரது குடும்பத்துக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

இருபாலை தெற்கு வேளாதோப்பு கட்டப்பிராய் பகுதியைச் சேர்ந்த மகேந்திரன் அசோக்குமார் (760393665V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரிக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மௌனமே வேலையின் மிக வலிமையான வடிவம். சாஸ்திரங்கள் எவ்வளவு பெரியதாகவும் தெளிவாகவும் இருந்தாலும் மௌனத்தின் பயனை அது தருவதில்லை. குரு மௌனமாக இருக்கிறார். அமைதி எங்கும் பரவுகிறது. அவரது அமைதி எல்லா சாஸ்திரங்களையும் விட பரந்து தெளிந்தது. உள்ளே நடைபெறும் வேலை வெளியே தெரிவதில்லை. -ரமணர்**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** உமையாள்புரம், விளாவோடை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம், பம்பைமடுவிலிருந்து பறயனாளங்குளம் வரை, பூவரசங் குளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நிலையில்லாத செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல் நம்முடைய இன்பத்திற்காகவே அனைத்தையும் நிறைவாக அளிக்கும், கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருக்க வேண்டும்.
- எல்லோருக்கும் கடவுளும் தந்தையும் ஆனவர் ஒருவரே. அவர் அனைவருக்கும் மேலானவர். அவர் அனைவர் மூலமாகவும்செயலாற்றுவதுடன் அனை வருக்குள்ளும் இருக்கிறார்.
- இறைவன் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல், நீங்களும் பிறரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்.
- ஞானமும் அறிவும் உனக்கு இனிமையாய் இருக்கும். அவற்றை நீ அடைந்தால் முடிவில் உனக்குப் பயன் கிடைக்கும். உன் நம்பிக்கையும் வீண்போகாது.
- இனிய சொற்கள் தேன்கூடு போன்றவை. மனத்திற்கு இனிமையானவை, உடலுக்கும் நலம் தருபவையாகும்.
- மன ஒற்றுமை கொண்டிருங்கள் அமைதியுடன்வாழுங்கள் அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்.
- நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய். நீ நெருங்கிக் கொண்டிருக்கும் பாதாளத்தில் எவரும் செயல்புரிவதுமில்லை சிந்தனை செய்வதுமில்லை.

# அடுத்திருப்பவர்களின் பாதைக்கு வழிகாட்டும் பிரகாச விண்மீன்களாகுவோம்

ஞானிகள் இயேசுவைத் தரிசித்த இன்றைய நாளைக் கத்தோலிக்கத்திருச்சபை ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா என கொண்டாடுகிறது. வீண்மீன் ஒன்று தோன்றியதைக் கண்டு ஞானிகள் கிழக்கிலிருந்து புறப்பட்டு அதன் வழிகாட்டலில் பயணித்து பெத்லகேம்மில் ஒரு மாட்டுத்தொழுவத்தின் மேல் அந்த விண்மீன் நின்றபோது அதனுள் பிறந்திருந்த இயேசுவைக்கண்டு மகிழ்ந்தனர். ஞானிகளை ஆங்கிலத்தில் "மேயை-Magi" என அழைக்கின்றோம். இந்த ஞானிகள் அரசர்கள் தான் என்னும் கருத்து: "பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர். மன்னர் உன் உதயக்கதிர் நோக்கி நடைபோடுவர்" என்று கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டு பைபிளில் உள்ள எசாயா புத்தகத்தில் 60 அதிகாரம் 3 வசனத்திலிருந்து வந்திருக்கக்கூடும் என்கிறார்கள்.

ஞானிகள் மூன்று பேர் என்று பைபிளில் கூறப்படவில்லை. ஆரம்பகால கத்தோலிக்க பாரம்பரியத்தில் ஞானிகளின் எண்ணிக்கையில் முரண்பாடு இருந்துள்ளது. கீழைத்தேய திருச்சபை ஞானிகள் பன்னிரண்டு பேர் என்கிறது. ஆனால் உரோமில் ஆரம்பகால கிறிஸ்தவ ஓவியங்களின் படி: புனிதர்கள் பேதுரு மற்றும் மார்செலினுஸ் அவர்களின் கல்லறையில் இரண்டு ஞானிகள் ஓவியங்களில் காணப்படுகின்றனர். புனித டொமரிலாவின் கல்லறையில் நான்கு ஞானிகள் சித்திரிக்கப்படுகின்றனர். மேற்கத்தேயத்தில், ஆரம்பகால திருச்சபையின் தந்தையர்கள் பலர், ஞானிகள் மூன்றுபேர் என்கின்றனர். இவர்கள் இயேசுவுக்கு அளித்த பரிசுகளின் எண்ணிக்கையில் இவர்கள் மூவர் என நம்பப்படுகின்றது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து மேற்கத்தேய திருச்சபையில் இந்த ஞானிகள்: மெல்கியோர், காஸ்பர் மற்றும் பால்தாசர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர்கள் மெய்யியலாளர்கள், ஆட்சியாளர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை செய்பவர்கள். முற்காலத்து கிழக்கில் ஞான அறிவை கற்றுத் தேர்ந்தவர்கள். இவர்கள் வானியலாளர்கள்.

பைபிளின் திருப்பாடல் புத்தகம் 77 அதிகாரம், 10-11 வசனங்களும் முக்கியமானவை: "தர்சீசு அரசர்களும் தீவுகளின் அரசர்களும் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். சேபாவிலும் செபாவிலுமுள்ள அரசர்கள் நன்கொடைகளைக் கொண்டு வருவார்கள். எல்லா அரசர்களும் அவர்முன் தரைமட்டும் தாழ்ந்து வணங்குவார்கள் எல்லா இனத்தவரும் அவருக்கு ஊழியம் செய்வார்கள்" இந்த ஞானிகள் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து இயேசுவை வணங்கினார்கள். மெல்கியோர் என்ற ஞானி இயேசுவுக்குப் பொன்னைக் காணிக்கையாக்கினார். கஸ்பார் சாம்பிராணியைக் கொடுத்தார். பல்த்தசார் வெள்ளைப் போளத்தைக் கொடுத்தார். பொன்னைக் கொடுப்பதன்



## பரமபிதா காட்டிய பாதை

மூலம் இயேசுவை அரசனாக அவர்கள் ஏற்கின்றனர். சாம்பிராணியைக் கொடுப்பதன்மூலம் கடவுளாக அங்கீகரிக்கின்றனர். அத்துடன் வெள்ளைப் போளத்தை வழங்கி இயேசுவின் பாடுகள் மற்றும் அடக்கத்தை குறித்துக் காட்டுகின்றனர்.

மெல்கியோர் பேர்சியாவிலிருந்தும் கஸ்பார் இந்தியாவிலிருந்தம் பல்த்தசார் அரேபியாவிலிருந்தும் வந்திருக்கிறார்கள் என்கிறது கத்தோலிக்கமரபு. இந்த விண்மீனுக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுக்கக்காரணம்: இவர்கள் கீபூறுமொழியில் இருந்த பைபிளைக் கற்றுத்தேர்ந்து உண்மைகளை கண்டடைந்திருக்க வேண்டும். பலநூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இறைவாக்கினர் பிலேயாமின்கணிப்பு வார்த்தைகள் இவர்களது கவனத்தை கட்டாயம் ஈர்த்திருக்க வேண்டும். இது பைபிளில் உள்ள எண்ணிக்கைப் புத்தகம் 24 அதிகாரம், 17 வசனமாகிறது: "யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று உதிக்கும்! இஸ்ரயேலிலிருந்து செங்கோல் ஒன்று எழும்பும்!" கிறிஸ்து பிறந்த செய்தியை அறிவிக்க தோன்றிய இந்த விண்மீனுக்கு மிசோ என்னும் பெயர் உண்டு என்கிறார்கள். எந்தவொரு சாதாரண நட்சத்திரத்தாலும் ஒரு மாட்டுத்தொழுவத்திற்கு வழிகாட்ட முடியாது. ஆனால் பெத்லகேமில் உள்ள பெருமளவான மாட்டுத்தொழுவத்திற்குள் சரியாக இயேசு பிறந்த மாட்டுத்தொழுவத்திற்கு இந்த விண்மீன் வழிகாட்டியது. எனவே இந்த விண்மீன் கடவுளின் ஒருசம்மனசு அல்லது இயேசு பிறப்பை குறித்துக்காட்ட கடவுள் உருவாக்கிய வேறு ஏதேனும் சிறப்பு அடையாளம் என ஞானிகள் நம்பினர். வடஅமரிக்காவின் ஆஸ்டி என்னும் நாட்டின் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவக் கற்கைகளின் பேரசிரியர் பிறன்ர் இலண்டஉ (Brent Landau) என்பவர் எழுதிய "ஞானிகளின் வெளிப்பாடு" Revelation of the Magi, என்னும் புத்தகத்தில், பெத்லகேமுக்கு ஞானிகளை அழைத்துச் சென்றபின் பிரகாச ஒளி விசுகின்ற குழந்தையாக மாறிய, தோன்றிய இந்த விண்மீன் இயேசுக் கிறிஸ்துவே என்கிறார்.

ஜேர்மனியின் கொலோன் நகரில் அச்சிடப்பட்ட மத்தியகால புனிதர்களின் ஒருநாள் காட்டியில் உள்ள ஒரு பகுதியில்: நற்செய்திக்காக பலசோதனைகள் மற்றும் சோர்வுகளுக்கு ஆளான நிலையில், மூன்று ஞானிகளும் ஆர்மீனியா நாட்டில் சேவா என்னும் இடத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட கி.பி. 54. இல் சந்தித்துக் கொண்டார்கள் என்றும் அதன்பின் புமெல்கியோர் ஜனவரி 01, 116 வயதிலும் காஸ்பர், ஜனவரி 11, 109 வயதில் மற்றும் பால்தாசர் ஜனவரி 06, 112 வயதிலும் இறந்துள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்மீன்களை நிமிர்ந்து பார்ப்பதற்குக்கூட நமக்கு இப்போதுநேரமில்லை. எப்போது வானத்தைப் பார்ப்போம்? கருமேகம் சூழும்போது சந்தேகத்தோடு ஒருவேளை மழைவருமோ? என வானத்தைப்பார்க்கிறோம். அதே போல், உள்ளத்தில் கருமேகங்கள் சூழும்போதும் மீண்டும் வானத்தைச் சந்தேகத்தோடு பார்க்கிறோம். கடவுள் என்ற ஒருவர் அங்கிருக்கிறாரா என்பதைத் தெரிந்து கொள்ள சந்தேகம் வரும்போது மட்டும் வானத்தைப்பார்த்தால், அங்கே கருமேகங்கள் மட்டுமே தெரியும். அந்தக்கருமேகங்களுக்குப் பின் கண்சிமிட்டும் விண்மீன்கள் தெரியாது. அந்த விண்மீன்கள் இறைவனிடம் நம்மை அழைத்துச்செல்ல அவைகள் தரும் அழைப்பும் தெரியாது. நம் வாழ்க்கையில் இறைவார்த்தை விண்மீன்கள் தொலைந்து போகும்போது, மனதின் அந்த வெற்றிடத்தை நிரப்ப, மற்ற போலியான விண்மீன்கள் ஆக்கிரமித்து விடுகின்றன. இந்த ஞானிகள் எத்தனை இரவுகள் பல இடர்பாடுகள் மத்தியில் விண்மீனைத்தொலைத்து விட்டு வேதனைப்பட்டிருப்பார்கள்? இருந்தாலும் இறுதிவரை மன உறுதியுடன் இரவின் துணையில் பல ஆயிரம் மைல்கள் பயணத்தைத் தொடர்ந்து விண்மீன் விடி வெளியாகிய இயேசு எங்கு இருக்கின்றார் என்ற பாதையினைக்காட்ட இலக்கை அடைந்தார்கள். நாமும் கடவுளைக்காண வாழ்க்கைப் பாதையை இறைவார்த்தையின் வழியில் அமைப்போம். இன்றுபாதை அறியாமல் அலைகின்றவர்களுக்கு பாதைகாட்டும் விண்மீனாகுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்-
தொடர்பாடல்-ஊடகவியற் கற்கை ஆசிரியர்.

## இணுவில் திருவேங்கடேஸ்வரர் ஆலய சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா

(குப்பிழான்)

இணுவில் திருப்பதி திருவேங்கடேஸ்வரர் ஆலய சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா நாளை திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் சுப்ரபாதம், 5 மணியளவில் கோபூசையைத் தொட ர்ந்து ஶ்ரீநிவாசர் கருவறையிலிருந்து புறப்பாடு நடைபெறும். நண்பகல் 12 மணியளவில் விசேட பூசை, அன்னதானம் என்பனவும் நடைபெறும்.

மாலை 6 மணியளவில் இரவுத் திருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூஜையும் இரவு 7 மணியளவில் நாச்சிமார் சகிதம் சுவாமி வீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறும்.

சுவர்க்கவாசல் ஏகாதசித் திருவிழா நாளன்று இரவு 7.30 மணியளவில் "சாயி ஸ்ருதி" நாட்டியப் பள்ளியினரின் "கிருஷ்ணாவதாரம்" நாட்டிய சமர்ப்பணம் நிகழ்வும் நல்லூர் சோமராகம் இசை மன்றத்தினரின் வீணாகான சமர்ப்பணம் இசைநிகழ்வும் நடைபெறும். அத்துடன் குறித்த தினத்தில் இரவு முழுவதும் நித்திரை விழித்து வழிபாடுகள் செய்வதற்கேற்ப அடியார்களுக்கு ஆலயத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

## டெங்கு நோய் பரவலைத் தடுக்க செயற்பாட்டு குழு நியமனம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் டெங்கு நோய் பரவலைத் தடுப்பதற்காக செய்ற்பாட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் தம்மிகா ஜெயலத் தெரிவித்தார்.

குறித்த செயற்பாட்டுக் குழு அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய வகையில் நியமிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு நோய்த் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துதல் இதன் பிரதான நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வீதியை விட்டு விலகி வான் விபத்து

### சாரதி மாயம் - பொலிஸார் விசாரணை

(ஹற்றன்)

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஸ்ரதன் வூட்லண்டபசார் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் வீதியை விட்டு விலகி வான் ஒன்று தொலைபேசி கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை குறித்த வானைச் செலுத்திய சாரதி தலைமறைவாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.



வான் சாரதி மது போதையில் வாகனம் செலுத்தினாரா? அல்லது சட்டவிரோத பொருட்கள் ஏதும் குறித்த வானில் உள்ளனவா? அல்லது வேறு ஏதும் காரணங்களால் தலைமறைவாகினாரா? போன்ற பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வான் விபத்து இடம் பெற்றது தொடர்பாகவும் சாரதி தொடர்பாகவும் வானில் காணப்படும் வாகன அனுமதிப்பத்திரத்தையும் பொது மக்களின் தகவல்களின் அடிப்படையிலும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## 43 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நால்வர் உள்ளிட்ட 43 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

பொலிஸ் ஊடகப்பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் ஆலோசனைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கோட்டா தெரிவித்ததை ஏற்க முடியாது

– இராதாகிருஸ்ணன்

(கொழும்பு)

அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தெரிவித்த விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## அரசியலமைப்பை...

அரசியலமைப்பு திருத்தத்தின் அவசியத்தை வரவேற்று இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

நாட்டின் கட்டமைப்பை ஜனாதிபதி முழுமையாக ஆராய்ந்ததாக திம்புல்கும்புரே விமலதர்ம தேரர் தெரிவித்தார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை எதிர்க்கட்சி ஆதரிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-3)

## அரசியல் கைதி...

நாதன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் ஜனாதிபதியை சந்தித்து இதுகுறித்து பேசவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த சந்திப்பின் போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## மகனை தேடி...

தனது மகனை கடந்த 11 வருடங்களாக இவர் தேடி வருகிறார் - 3 வருடங்களாக தொடர் போராட்டங்களின் மூலம் தனது மகன் தொடர்பில் நீதி கேட்டு வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மன்னார் வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி வந்தவர்களில் இதுவரை 56 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,9)

## அரசியல் தீர்வுக்...

லிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட உடனேயே அவருக்கு ஒருசில விடயங்களை நினைவுபடுத்தியிருக்கிறோம்.

ஜனாதிபதிக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்கவில்லை. எனவே குறித்த மக்களின் பிரதிநிதிகளுடன் கலந் துரையாட வேண்டுமென நாம் பகிரங்கமாக ஜனாதிபதிக்கு தெரி வித்திருந்தோம். ஆனாலும் அவர் இதுவரையில் எந்தவிதமான பதிலையும் வழாங்கவில்லை என்றார். (ம-3)

## படையினர் உட்பட ஐவர் கைது...

செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி 155ஆம் கட்டை பகுதியில் தங்கம் இருப்பதாக தெரிவித்து சிலருடன் இணைந்து இரகசியமாக JCB. இயந்திரம் மூலம் தேடுதல் மேற்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற அனுமதி இல்லாது மேற்கொண்ட குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையிலநேற்று இராணவ பொலிஸாரால் நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

அகழ்வு மேற்கொள்ளப்பட்ட காணியானது விடுதலைப்புலிகளின் நிர்வாக சேவை அலுவலகம் அமைந்திருந்த காணி என்பதும், குறித்த காணி படையினர் வசமிருந்து விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,100)

## கோட்டா அரசின் கைது வேட்டைகள்...

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மேல் மாகாண தென் பிராந்திய குற்றவியல் பிரிவின் அதிகாரிகள் ரஞ்சன் ராமநாயக்க வீட்டில் சோதனையிட்டிருந்தனர்.

இதன்போது, நுகேகொடை நீதவான் நீதிமன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட தேடுதல் ஆணையின் அடிப்படையில் இந்த திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், குறித்த தேடுதலின் போது அவரது வீட்டில் இருந்து அனுமதி பெறாத கைத் துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள் மற்றும் சில சட்டவிரோத பொருட்கள் கைப்பற்றப்பட்டமையினைத் தொடர்ந்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## காணாமல் போனவர்களின் உறவு...

வவுனியாவில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்களின் பிள்ளைகள், சகோதரர்கள் தாங்கள் இறப்பதற்கு முன் தங்கள் கைகளில் ஒப்படைக்குமாறு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக கடந்த 1050 நாட்களாக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாலேயே குறித்த ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் மதியம் 12.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எமக்கு வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து சுழற்சி முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தை நேற்றைய தினம் அதனை நினைவுகூர்ந்ததுடன் இவ்வருடம் முதலாம் திகதி 27 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து கொழும்பு சிறையில் தமிழ் அரசியல் கைதியான செல்லப்பிள்ளை மகேந்திரன் மரணமடைந்திருந்தார்.

அவரிற்கு அஞ்சலி செலுத்தி மெழுகுவர்த்தியேற்றி ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த துடன் இவரிற்கு நடந்தது போல் நடக்காது எமது பிள்ளைகள் எமக்கு கிடைக்க வேண்டுமென கோரி காணாமற் போன உறவுகள் தமது பிள்ளைகளுடன் ஒன்றிணைந்து இப் போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்திய வாறும் போராட்டம் மேற்கொண்டிருந்தார்கள். (ம-3,299)

## 21 வயதேயான...

இவ்வாறு மரணம் அடைந்தவர் ஆலடி ஒழுங்கை, பொலிகண்டியைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் குடும்பப் பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் வெளியில் சென்ற நிலையில் மீண்டும் வீட்டுக்கு வந்தபோது மனைவி கையில் வெட்டுக்காயங்களுடன் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-3,60)

## மின்சாரம் தாக்...

கொண்டிருந்த போது, மின் இணைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன் மாட்டு பண்ணை ஒன்றை நடத்தி வந்துள்ளார். பண்ணையை காலையில் நீரினால் சுத்திகரித்து கொண்டிருந்தபோதே மின்சாரம் பாய்ந்துள்ளது. உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும், அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞன் 28 வயதுடைய மங்களதேவன் விஜயகுமார் என்பவராவார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்கு தெரிவான குறித்த இளைஞன் பெரும் முதலீட்டாளராக வர வேண்டும் என எண்ணம் கொண்டு பல்கலைக்கழக கல்வியை நிறுத்தி விட்டு சுயதொழில் முயற்சியாளராக மாறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,100,316)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 842
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,723,845/-
வெற்றி இலக்கங்கள் 02 15 37 47
ஆங்கில எழுத்து S
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புகளுக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
தானியங்கி குரல் சேவையின் பொருட்டு: 0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3283 திகதி: 2020.01.04
பச்சை சனிக்கிழமை
சுப்பிரி தஹஸ
விசேட இலக்கம் 8552
வெற்றி இலக்கங்கள் 22 32 45 58
ஆங்கில எழுத்து B
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 35,645,365/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
நீல நிற டிக்கட்டுக்கள் 2020.01.06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும் வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1103
சீட்டிழுப்பு திகதி 04.01.2020 சனிக்கிழமை
L 08 17 51 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.89,281,044
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04/01/2020 வெற்றி வாரம் 2728 வர்ணம் இளம்நீலம்
வெற்றி இலக்கங்கள் விருச்சிகம் 03 14 42 44
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,185,840
2020/01/05ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
6 கோடி 11 இலட்சம் ரூபாவை 16.07.2018 இல் சாவகச்சேரியில் அள்ளி வழங்கிய NLB யிடமிருந்து
மீண்டும் ஓர் லட்சாதிபதி............
நீண்டஇடைவெளியின் பின்னர் எமது விற்பனையில் 28.12.2019 சனிக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட ஜாதிக சம்பத அதிர்ஷ்டலாபச் சீட்டில் ஆறு இலக்கங்களும் (6 3 8 4 3 5) பொருந்தியதில்
ரூபா இருபது இலட்சம் 2,000,000/= வெல்லப்பட்டுள்ளது.
வெற்றியாளருக்கு எமது வாழ்த்துக்கள்
குறிப்பு :- எமது விற்பனையில் கடந்த 29.12.2017 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட மகாஜன சீட்டிழுப்பில் ரூபா இருபது இலட்சம் வெல்லப்பட்டது யாவரும் அறிந்ததே !
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்
நடராஜா வசீகர், சுன்னாகம். N220063






செவண
திகதி 04/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 250
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 11 44 45 58
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 04-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2351
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 01 44 69 76
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/01/04
சீட்டிழுப்பு இலக்கம் 1492
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 04 05 13 43
முதல் போனஸ் இல 32
இரண்டாவது போனஸ் இல 42
NATIONAL LOTTERIES BOARD

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1006
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 6 4 1 2 7 5
தேசிய லொத்தர் சபை

# ஆலயத்தில் திருட்டு; ஒருவர் கைது

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை துறட்டிப்பனை முத்து மாரி அம்மன் ஆலயத்தில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்ட கும்பலில் ஒருவர் மாவடி இளைஞர்களிடம் சிக்கிக்கொண்டார்.

ஆலயத்தில் உண்டியலில் காசு திருட்டு மற்றும் உடமைகள் திருட்டு என தொடர்ச்சி யாக இடம்பெற்று வந்த நிலையில் மாவடி இளைஞர்கள் ஆலயத்தில் கடந்த இரண்டு நாள்களாக காவலில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நேற்று இரவு ஆல யத்தை உடைத்து திருட்டில் ஈடுபட முற்பட்ட சங்கானையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மாவடி இளைஞர்களிடம் சிக்கிக்கொண் டார்.

திருட்டு நபர் இளைஞர்களால் நையப் புடைக்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்டார். (ம-3)


**மணமகள் தேவை**

யாழ்இந்து, கௌரவ குடும்பம், 1987 ஆம் ஆண்டு, உயரம் - 5'6", பூரட்டாதி 2ஆம் பாதம், கி.பா - 39, சூரி + செவ்வாய் - 11இல், B.SC, M.SC (COMPUTER SCICNCE), அரச தொழில் உள்ள மணமகனுக்கு மண மகள் தேவை.

**எதிர்பார்ப்பு: அரசபதவி நிலை உத்தி யோகத்தர், IT, PROFESSIONAL**

தொடர்பு: 077 693 6744 (1651)


## சங்கானைப் பகுதியில்

# கஞ்சா வைத்திருந்த இரண்டு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் நேற்று கஞ்சாவு டன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற் கொண்ட திடீர் நடவடிக்கையின்போது கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ள தாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களின் உடமையிலிருந்து ஒரு கிலோ 800 கிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. (ம-3)


**காணி விற்பனைக்கு**

மீசாலை சந்தியிலிருந்து 1 Km தூரத்தில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு (இக்காணியில் 4 பெரிய வேம்பு மற்றும் தேக்கு மரம், மா, பலா என்பன உண்டு)

தொடர்பு:- 077 958 1741 (1688)

**இந்தியாவின் தலைசிறந்த கல்லூரியில்**

**HOTEL MANAGEMENT with TRAVEL & TOURISM**

கனடா,இலங்கை,பயணிகள் கப்பல் மற்றும் பல நாடுகளில் 5★ Hotel களில் வேலைவாய்ப்பு, இலட்சங்களில் சம்பளம்




(C-8785)

A/L எந்தப்பிரிவிலும் சித்தியடைந்தால் போதுமானது

CANADA MIGRATION PILOT V2 Travels 0768226243

**வாகனம் விற்பனைக்கு**

2011ஆம் ஆண்டு பதிவு Llxxxx இலக்கமுடைய JAC கனரக வாகனம் Full Alluminiya Body (அலுமினிய பொடி, 14.5 அடி) சிறந்த நிலையிலுள்ள வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- (1749)

077 884 9259


# ஐ.தே.கவிலிருந்து விலகும் மங்கள

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அரசியல் ரீதியாக புதிய தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீங்கி விட தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் தனித்து போட்டியிடத் தீர் மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தவிடயம் குறித்து அவர் பல தரப்புகளுடன் பல்வேறு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ம-3)


**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-8600)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**வேலையாள் தேவை**

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றுக்கு பெண் ஊழியர் தேவை.

தொடர்புகளுக்கு:- (C-8848)

075 552 2999

075 330 5500

**அரியதோர் சந்தர்ப்பம்**

பயிற்சியுடனான நிரந்தர வேலைவாய்ப்பு

**நிரந்தர வேலைவாய்ப்பினை தேடும் நபரா நீங்கள்?**

அவ்வாறெனில் எமது DEM நிறுவனத்தின் கிளைகளுக்கு உங்கள் கல் வித் தகைமை மற்றும் உங்கள் திறமைகளுக்கேற்ப வேலைவாய்ப் பினை எமது நிறுவனம் வழங்குவதற்கு தயாராக உள்ளது.

2019இல் A/L, O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் சிறந்த வாய்ப்பு உள்ளது.

எம்மிடம் கிளைமுகாமையாளர், உதவி முகாமையாளர், மேற்பார்வை யாளர், களஞ்சியப் பொறுப்பாளர், அலுவலக உத்தியோகத்தர்கள் போன்ற பதவி வெற்றிடங்கள் உள்ளன.

புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இடங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை.

வேலைபுரிவோருக்கான சலுகைகள்

| | பயிற்சியின்போது | பயிற்சியின்பின் |
|---|---|---|
| சம்பளம் | 12000-18000 | 45000 க்கு மேல் |
| EPF, ETF | - | உண்டு |
| Medical | - | உண்டு |
| வெளிநாட்டு சுற்றுப்பயணம் | - | உண்டு |

(1746)

தொடர்புகளுக்கு:- 077 298 6763, 077 326 0979


# மைத்திரியின் உரைக்கும் கோட்டாவின் உரைக்கும் வித்தியாசமில்லை

## - பொன்சேகா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை உரைக்கும் 5 ஆண்டுகளுக்கு முன்னர் முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன ஆற்றிய கொள்கை உரை சமனானது என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ராஜபக்ஷ பரம்பரை புற்றிய பகுதியை தவிர இரண்டு பேரின் உரைக்ளுக்கும் இடை யில் எந்த வித்தியாசமும் இல்லை. பேசிய விதத் தில் பிரதிபலன்கள் இருக்குமா என்பது சந்தேகத்திற்குரியது.

மக்கள் எதிர்பார்க்கும் பிரதிபலன்கள் கிடைக்கும் என நம்பவில்லை. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறுகிறார்.

புலனாய்வு பிரிவுகளில் இரண்டு பதவி களில் மாற்றத்தை ஏற்படுத்தியதால் மாத் திரம் பாதுகாப்பு உறுதியாகாது எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ள... சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (1739) பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119

**நெல்லியடியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



**அருள்**

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8786)

**SUBRA (14)**

பொருளியல்: S. ஜெயக்குமார்
(B.A.(Hons) Econ. Spl, M.A. (Econ), PGDE)

**A/L 2022 , 2020 Day Class**

ஆரம்பம்: 05.01.2020 ஞாயிறு 3.00 Pm

A/L 2019 பரீட்சையில் எமது நிறுவனத்தில் பொருளியல் பாடத்தினை வரன்முறையாக கற்று சிறந்த பெறுபேற்றினை பெற்றுக் கொண்ட மாணவர்களைப் பாராட்டுகின்றோம்.

| பெயர் | பாடசாலை | பெறுபேறு | பொருளியல் பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|---|
| 1. M.சாளினி | J/Vad.C.C | 3A | A | 05(Old) |
| 2. K.சுவர்ணா | J/V.H.C | 3A | A | 16 |
| 3. T.திலக்ஷிகா | J/V.C | 2AB | A | 68 |
| 4. S.துளசிகா | J/V.C | 2AB | A | 87 |
| 5. A.நவோமியா | J/S.H.C | 2AB | A | 92 |
| 6. K.தினுசன் | J/.V.H.C | 2AB | A | 102 |
| 7. T.டிலோசன் | J/St.H.C | A2B | A | 160 |
| 8. M.கிருபா | J/V.C | 2AC | A | 161 |
| 9. M.சுபர்ணா | J/V.H.C | A2B | B | 149 |
| 10. A.பவானி | J/V.C | ABC | B | 182 |
| 11. S.சிலோஜினி | J/.V.C | 3B | B | 26 (கலை) |
| 12. P.சங்கவி | J/J.C | ABC | B | 73 (கலை) |

(1747) தொடர்புகளுக்கு: 077 715 7779

**வேலையாள் தேவை**

10 ஏக்கர் விஸ்தீரணமுடைய தென்னந்தோப்பு மற்றும் அதனுடன் வளர்க்கப்படும் ஆடுகளை தோட்டத்தில் தங்கி நின்று பராமரிப்பதற்கு வேலை யாள்தேவை. குடும்பமாக வரவேற்கத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

077 194 1964

077 545 0918 (1719)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 259

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 05.01.2020 | தொலைபேசி : 021 222 3378





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதி புனரமைக்கும் வேலை நடக்குமா?

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ். செயலகம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் ஓய்வு பெற்ற பிரதம கணக்காளர் முத்துக்குமாரு விஜய ரகுநாதன் அவர்கள் அமரத்துவமடைந்து விட்டார்.

மனிதநேயம் மிக்க பண்பாளர். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்னிற்பவர். சமய, சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்தவர். அவரின் இழப்பு பேரிழப்பாகும். அவருக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் நிலவிய அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

தமிழ் மக்களின்ர பலத்தை கூட்டமைப்பினூடாக மீண்டும் நிரூபிக்க வேண்டுமென்று இரா. சம்பந்தர் கூறியிருக்கிறாரல்லோ.

**கங்காணி:** ஓம்...ஓம். அவையள் கோடி உழைக்கிறதுக்காக தமிழ் மக்கள் தங்களை ஆதரிக்க வேணும் எண்டு சொல்லுகினம்.

**மூப்பர்:** அநியாயம்... அநியாயம்... கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நாசமாக்கிப் போட்டு இப்ப தமிழர்களின் பலத்தை மீண்டும் காட்ட வேணுமாம்.

**சாத்திரியார்:** ஒருக்காலும் கிடைக்காத சந்தர்ப்பம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தது. ஆனால்...

**சிறாப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில ஆதரித்த போது, சில நிபந்தனைகளை மறைமுகமாக விதித்திருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை இழந்தினம்.

பிறகு, ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியைக் காப்பாற்றுகிறதில கூட்டமைப்பின்ர ஆதரவு தேவைப்பட்டது. அந்த நேரத்திலாவது சில நிபந்தனைகளை விதித்திருக்கலாம். ஆனால் அதையும் செய்யவில்லை. எல்லாத்தையும் கைவிட்டுப் போட்டு, இப்ப தமிழ் மக்களின்ர பலத்தை தங்கள் ஊடாக மீண்டும் நிரூபிக்க வேணும் எண்டு சம்பந்தர் கேட்கிறார் எண்டால், அவற்ற வயதிற்கும் அனுபவத்திற்கும் இப்படியொரு நரிக் கதையை அவர் சொல்லலாமோ.

**பண்டிதர்:** அவர் ஓர் அரசியல்வாதி. கொழும்பை மையப்படுத்தியதாகத்தான் அவரின் அரசியல்செயற்பாடு இருந்தது. கிழக்கு மாகாணம் பறிபோனதில அவருக்கு எந்தக் கவலையும் இல்லை. அப்படிப்பட்ட ஒருவர் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் கதைப்பார் எண்டு எப்படி நாங்கள் நினைக்க முடியும்.

**விதானையார்:** நான் அறிந்தமட்டில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மகிந்த தரப்பால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ரணிலை ஆதரிக்கிற விடயத்தில சில நிபந்தனைகள் எழுத்தில கொண்டு வரப்பட்டது. அந்த மூலப்பிரதி இரா.சம்பந்தரிட்ட இருந்ததாம்.

**மூப்பர்:** அப்ப ஏன் விதானையார் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

**விதானையார்:** கூட்டமைப்பில இருக்கிற சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை ஆதரிப்பதற்குச் சில நிபந்தனைகள் விதிக்க வேணுமெண்டு சம்பந்தரிட்ட இறுக்கமாகச் சொல்லியிருக்கினம்.

அவர்களைச் சமாளிப்பதற்காக சம்பந்தரும் அவரை வழிப்படுத்துகிறவரும் சேர்ந்து ஒரு நாடகத்தை தயாரித்தினம். அந்தத் தயாரிப்புத்தான் எழுத்து மூலமான நிபந்தனை.

எழுத்துமூல நிபந்தனை இருக்கிறதால ரணிலை ஆதரிக்கலாமெண்டு குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்த பின்னர், எழுத்து மூலமான நிபந்தனை எதுவும் செய்யவில்லை எண்டு சம்பந்தர் சொல்லிப் போட்டார். பிறகு என்ன செய்ய முடியும்.

**கங்காணி:** இப்படியெல்லாம் செய்து போட்டு தமிழ் மக்கள் மீண்டும் தங்கட பலத்தை கூட்டமைப்பினூடாக நிரூபிக்க வேணும் எண்டு சம்பந்தர் கேட்கிறார் எண்டால் எங்கட தமிழ்ச் சனத்தை அவர் எப்படி நினைக்கிறார் என்பது தெரிகிறது தானே.

**வாத்தியார்:** சரி... சரி...எப்ப பார்த்தாலும் அரசியலைக் கதைக்காமல் எங்கட மக்கள் எதிர்நோக்குகிற அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியும் கதைப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற, கடுப்படைந்த விதானையார் விசுவலிங்கம்; எங்கட மக்கள் எதிர்நோக்குகிற அடிப்படைப் பிரச்சினைகளைக் கதைக்கிறதால ஏதேனும் நன்மை நடந்தால் பரவாயில்லை. ஆனால் ஒண்டும் நடக்கிறதாகத் தெரியல்ல.

**வாத்தியார்:** அப்படியல்ல விதானையார். முதலில எங்கட மக்கள் எதிர்நோக்குகிற பிரச்சினைகளை நாங்கள் தெரியப்படுத்த வேணும். அதைத் தீர்த்து வைக்கிறது இரண்டாம் கட்டம்.

**சாத்திரியார்:** வாத்தியார் சொல்லுறது உண்மைதான். ஆனால் மண்டைதீவு அல்லைப்பிட்டி இணைப்பு வீதியை புனரமையுங்கள் எண்டு இந்த இடத்தில கூறியிருந்தம். ஆனால் இன்னும் எதுவும் நடந்தபாடில்லை.


**மூப்பர்:** சாத்திரியார் சொல்லுற மாதிரி மண்டைதீவு-அல்லைப்பிட்டி இணைப்பு வீதியைத் திருத்திறம், புனரமைக்கிறம் எண்டு சம்பந்தப்பட்டவர்கள் எத்தனையோ தடவை சொல்லிச்சினம். ஆனால் இன்றுவரை அந்த வீதியால போகவர முடியல்ல. இதால மண்டைதீவு-அல்லைப்பிட்டி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகினம். அதிலும் மழை காலம் எண்டால் அந்தோ கதிதான்.

**வாத்தியார்:** அப்ப மண்டைதீவு-அல்லைப்பிட்டி இணைப்பு வீதியை காப்பெற் வீதியாகப் புனரமைக்க வேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக அங்கீகரிக்க, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# போக்கணம் கெட்ட அரசியல்தனம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அக்கிராசன உரை அவரின் எதிர்காலச் செயற்பாடுகளைக் கோடி காட்டியுள்ளது.

ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற விபரங்கள் சிறுபான்மைத் தமிழினத்தை வாழவிடப் போவதில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டி நிற்கிறது.

முப்பது ஆண்டுகாலப் போராட்டமும் அதற்குள் நடந்தேறிய தியாகங்களும் அந்தப் போராட்டத்திற்குள் வாழ்ந்த மக்கள் இழந்தவையும் சாதாரணமானவையல்ல.

எனினும் விடுதலைப் புலிகள் அமைப்பு முற்றுப்பெற்ற பின்பு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை புதிய பாதையில் வழிப்படுத்திச் செல்வதற்குத் தமிழ் மக்களிடம் ஆன தலைமை இருந்திருக்கவில்லை என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

விடுதலைப் போராட்டத்திற்குச் சமாந்தரமாக அரசியல் முன்னெடுப்புகளும் பயணிக்க வேண்டும் என்ற உண்மையை விடுதலைப்புலிகள் தமது இறுதிக்காலத்தில் உணர்ந்து கொண்டனர்.

எனினும் நீண்ட கால ஆயுதப் போராட்டத்தின் வேகம் தமிழர்களின் அரசியல் களத்தை வெறுமையாக்கி இருந்தது.

இந்நிலையில் வெறுமையான அரசியல் களத்தை நிரப்புவதற்குச் சப்பி நெல் விதைத்து நல்ல நெல் அறுவடை செய்வதான தேற்றத்தை விடுதலைப் புலிகள் பிரயோகித்தனர்.

எனினும் தமிழ் அரசியலில் சப்பி நெல் விதைக்கப்பட்டதாயினும் நல்ல நெல்லை அறுவடை செய்வதற்கு முன்னதாக விதைவிதைத்த விடுதலைப் புலிகள் இல்லாமல் போக, சப்பி நெல் பயிரை கோழிச் சூடனும் குதிரைவாலனும் ஆக்கிரமித்துக் கொள்ள தமிழர்களின் அரசியல் தலைமை என்பது வேடதாரியாயிற்று.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்தேறிய தமிழின அழிப்பு ஈழத்தமிழர் மீதான சர்வதேசத்தின் கரிசனையை அதிகரித்திருந்தது.

முன்னெப்போதும் இல்லாத அளவில் ஐ.நா.சபையும் இலங்கைத் தமிழ் மக்கள்மீது அக்கறை கொண்டிருந்தது.

தவிர, வன்னியில் இடம்பெற்ற போர்க்குற்ற ஆதாரங்களை சனல்-4 தொலைக்காட்சி ஆவணப்படுத்தி சர்வதேசத்தின் பார்வைக்கு முற்படுத்தியிருந்தது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை கூடும் போதெல்லாம் சனல்-4 தொலைக்காட்சி வன்னியில் படையினர் மேற்கொண்ட போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தி தமிழர்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் செய்த கொடுமையை பகிரங்கப்படுத்தியது.

உரிமைப் போராட்டம் நடந்த காலத்தில் இல்லாத ஒருபெரும் சாதக நிலைமை சர்வதேச ரீதியில் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

எனினும் தமிழினத்தில் தகைசார்ந்த அரசியல் தலைமை இல்லாத காரணத்தால் எங்கள் இனத்திற்குச் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட சாதகமான வாய்ப்பைப் பயன்படுத்த முடியாமல் போயிற்று.

மாறாக, ஆட்சி மாற்றம் நடந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நினைப்பை தமிழ் அரசியல் தலைமை வலியுறுத்தி நிற்க, அது விடயத்தில் கரிசனை செலுத்திய ஒரு சில நாடுகள் ஆட்சி மாற்றம் ஏற்பட வழிவகுத்தன.

ஆட்சி மாற்றத்தால் எந்தப் பயனும் ஏற்படாது. மாறாக தமிழ் மக்களின் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை தமிழ் அரசியல் தரப்புகள் வலியுறுத்தியிருந்தால், ஆட்சி மாற்றத்திற்குப் பதிலாக தமிழ் மக்களின் உரிமையை வழங்க வேண்டுமென்ற அழுத்தத்தை சர்வதேச சமூகம் மேற்கொண்டிருக்கும்.

ஆக, ஆட்சி மாற்றம் ஒரு காட்சியாக முடிய, இப்போது பழைய ஆட்சி அரங்கேறியிருக்கிறது. இனி என்ன செய்ய முடியும். யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்துவிட, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை பழங்கஞ்சி ஆகிவிட்டது.

இந்நிலையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போதாவது; தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க விரும்புகின்றார்களோ அவர்களை ஆதரிக்கட்டும் என்று இருந்துவிடாமல், சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொட்டி முழக்க, எல்லாம் அம்போ என்றாகிவிட்டது.

சரி, இவைதான் நடந்துவிட்டன. நாம் வைரம் பாய்ச்சிய பகையோடு இருப்போம் என்றால் அதுவுமில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேநீர் விருந்துபசாரத்திலும் பங்கேற்கின்ற அளவிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் இருக்கிறது எனும் போது எங்கள் இனத்திற்கு எந்த விடிவும் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை. ரோசம் கெட்ட அரசியல்வாதிகளாக நம் அரசியல்வாதிகள் ஆகி.விட்ட பின்பு எல்லாமும் நடிப்பும் நாடகமுமாகவே இருக்கும்.


ஆம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய தேநீர் விருந்துபசாரத்தில் பங்கேற்கும் போது கூட்டமைப்பு தன்னைப் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும்.

அந்தக் கேள்விகளைக் கேட்காத கட்டத்தில், இவர்களைப் போன்ற போக்கற்ற அரசியல்வாதிகளை எங்கும் காண முடியாது என்பதையே இந்த நாடு உச்சரித்துக் கொள்ளும்.

**திருநீலகண்டன்**




# சொல்லும் செயலும்



ஒரு புராணம் பிரசங்கியார் ஒருவர் ஊருக்குப் பேச வந்திருந்தார். பேச்சைக் கேட்க மக்கள் திரளாகக் குழுமியிருந்தார்கள்.

கூட்டத்திற்கு வருமுன்னர் ஒரு செல்வந்தரின் வீட்டில் மிக உயர்ந்த அறுசுவையுணவை உண்டுவிட்டு உடல் நோவு தெரியாத விலையுயர்ந்த காரில் ஒரு இளம் சந்நியாசினி மாதுவுடன் பிரசங்க மேடை அருகே வந்து இறங்கினார்.

அவர் இறங்கிய இடத்திலிருந்து மேடை வரை நடந்து செல்லப் பீதாம்பர் விரிப்புப் போடப்பட்டிருந்தது. காதில் வைரக்கடுக்கனும் கழுத்தில் தங்க மணிமாலையும் பிரகாசித்தன.

மேடையேறியதும் பிரசங்கத்தைத் துவக்கினார். "புலனடக்கம் வேண்டும். நாவுக்கு ருசியானதைக் கேட்கக் கூடாது. உல்லாசத்தை விரும்பக்கூடாது. இவையே ஒரு மனிதனின் சத்ரு. நமது முன்னைய ஆச்சார்யார்கள் இதைத்தான் சொல்லிச் சென்றார்கள். வாழ்ந்து காட்டினார்கள்"

உடனே ஒரு பக்தன் பவ்யமாக எழுந்து நின்று "சுவாமிஜி! இதைக்கூறும் முன்னர் நீங்கள் உங்கள் முகத்தைச் சற்றுக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளக் கூடாதா?" என்றான்.

## பொது அறிவு வினா விடைகள்

- பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?
  **330**
- உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
  **நெதர்லாந்து.**
- உலகின் மிகச் சிறிய சந்து எது?
  **புனித ஜான் சந்து. ரோமில் உள்ளது. 48 செ.மீ. அகலம்**
- உலகிலேயே அதிகளவில் எரிமலைகள் உள்ள நாடு எது?
  **இந்தோனேஷியா**
- உலகிலேயே அதிக மழை பெறும் இடம் யாது?
  **சீராப்புஞ்சி**
- உலகிலேயே மிக நீளமான மலை எது?
  **அந்தீஸ்மலை**
- உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது?
  **நோர்வே அரசு**
- கிரெடிட் கரட் வழங்கிய முதல் இந்திய வங்கி எது?
  **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா**
- உலக இரத்ததான தினமாகக் கருதப்படும் நாள் எது?
  **ஒக்டோபர்-1**
- உலகின் இரண்டாவது நீளமான் கடற்கரையான மெரினாவை வடிவமைத்து பெயர் சூட்டியவர் யார்?
  **கிரண்ட்டப்**
- மனித இரத்தத்தை ஏற்றுமதி செய்வதில் முன்னணி வகிக்கும் நாடு எது?
  **அயர்லாந்து**
- முகர்ந்து பார்த்தால் வாடிவிடும் மலர் எது?
  **அனிச்சம்**
- உலகிலேயே ஜனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவி கொண்ட நாடு எது?
  **சுவிட்சர்லாந்து**



கே.விதுசன், தரம் 11,
யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, SOS சிறுவர் கிராமம்.

## விடுகதைகளும் விடைகளும்


- சிவப்பான பெட்டிக்குள் கருகு மணி முத்துக்கள் அது என்ன?
  **பப்பாளி விதைகள்**
- காலையிலே கூவும் பட்சி, கந்தன் கொடியில் காணும் பட்சி, குப்பையைக் கிளறும் பட்சி, கொண்டையுடைய பட்சி. அது என்ன?
  **சேவல்**
- அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது. அது என்ன?
  **சங்கு**
- ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக் கை. அது என்ன?
  **குடை**
- காற்று நுழைந்ததும் கானம் பாடுகிறான். அவன் யார்?
  **புல்லாங்குழல்**
- அனைவரையும் நடுங்க வைப்பான், ஆதவனுக்கே அடங்குவான். அது என்ன?
  **குளிர்**
- சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அது என்ன?
  **மின் விசிறி**
- ஆயிரம் தச்சர் கூடி கட்டிய அந்த அழகான மண்டபம், ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் அந்த மண்டபம். அது என்ன?
  **தேன் கூடு**

## பழமொழிகள்

- இளங்கன்று பயமறியாது.
- இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி அடிப்பான்.
- இளமையிற்கல்வி கல்மேல் எழுத்து.
- இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம்.
- இறங்கு பொழுதில் மருந்து குடி
- இறுகினால் களி, இளகினால் கூழ்.
- இறைக்க ஊறும் மணற் கேணி, ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்.
- இறைத்த கிணறு ஊறும், இறையாத கேணி நாறும்.
- இனம் இனத்தோடே வெள்ளாடு தன்னோடே
- இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்கு குலை அறுப்பான்.
- ஈட்டி எட்டு முழம் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்.



ஆர்.சரோன், தரம் 03,
யா/கல்வியங்காடு தமிழ் கலவன் பாடசாலை,
SOS சிறுவர் கிராமம்.








## விக்னேஸ்வரன் ஐயாவின் மாகாண சபை நிர்வாகத்திறமை தொடர்பாக தங்களின் கருத்து?

**திகளன் — யாக்கரு**

தேசிய கீதம் சிங்களத்தில் மட்டும் பாடப்பட்டால் நாம் பிரிந்து விட்டோம் எனப் பொருள்படுமா?

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததில் இருந்து பின்பற்றப்பட்டதை இப்போது மாற்றுவது எதற்காக என்று புரியவில்லை.

ஒருவேளை தேசிய கீதத்தை தமிழில் மாத்திரம் பாட வேண்டும் என சிங்களத் தலைவர்கள் முடிவெடுத்திருந்தால் அதில் நியாயம் இருக்கிறது.

தமிழர்களை சிங்களவர்கள் அடக்கி ஒடுக்க நினைக்கவில்லை. அவர்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற சிந்தனையை மேலோங்கச் செய்யும்.

இதை விடுத்து சிங்களம் மட்டும் என்பது தமிழினத்தை தனிமைப்படுத்தும் செயலேயன்றி வேறில்லை.

**கபிலன் — வட்டுக்கோட்டை**

விக்னேஸ்வரன் ஐயாவின் மாகாண சபை நிர்வாகத் திறமை தொடர்பாக தங்களின் கருத்து?

அவர் நீதியரசராக இருந்து பல வழக்குகளுக்கு நீதியான தீர்ப்பு வழங்கியவர். அவருக்கு நிர்வாகம் நடத்துவது ஒன்றும் பெரிய விடயமல்ல.

ஆனால் அவரை சுயமாகச் செயற்பட விடாமல் அவரின் நிர்வாகத்தை தொடர்ந்து ஒரு நிகழ்ச்சி நிரலின்படி குழுவொன்று குழப்பிக் கொண்டே இருந்தது.

மாகாண சபையில் பாட்டுப் பாடுவது, கூத்தாடுவது, கத்திச் சத்தம் போடுவது, வெளியேறுவது, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொடுப்பது என அவரை நிர்வாகம் நடத்த விடாது தொல்லை கொடுத்த ராசாக்கள் இப்ப சத்தமில்லாமல் இருக்கிறார்கள் என்பது தான் முக்கிய விடயம்.

**நிதர்சன் — யாழ்ப்பாணம்**

நாங்கள் கேட்கிற கேள்விக்கு எப்படி உங்களுக்கு பதில் சொல்ல முடிகிறது வியாசரே?

கேள்விகள் தரமாக இருக்கும் போது பதில் எழுதுவது சுலபமாக இருக்கிறது. பதில்கள் மிகத்தரமாக இருக்கும் போது கேள்விகள் மிகமிகத் தரமாக வருகிறது அவ்வளவே.

**கோகிலன் — வரணி**

மேலைத்தேய நாட்டவர்கள் ஜாதகம் பார்த்தா திருமணம் செய்கிறார்கள்?

கட்டுவதும் வெட்டுவதும் அவர்களுக்குக் கைவந்த கலையாக இருந்தது–அன்று. கட்டுவதும் வெட்டுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது இன்று எம்மவர்க்கு.

அட்ஷதை போட்டுக் கட்டியதும் முகப் புத்தகத்தில் கடலை போட்டு கட்டியதும் நீதிமன்ற வாசலில் நிற்கிறது மணமுறிப்புப் பத்திரத்துக்காய். இதுதான் வேதனையின் உச்சம்.

## ரி.வியில் பூனை, நாய், எலி–பூனை ஒற்றுமையாக இருப்பதைப் பார்க்க கவலை யாக இருக்கிறதே?

**சுதன் — குப்பிழான்**

தமிழ் மக்கள் நாட்டிற்கு விசுவாசமாக இருந்தாலும் சிங்கள தேசியவாதிகள் அப்படி இருக்க விடமாட்டார்களே?

பத்திரிகைகளில் காணி, வீடு விற்பனைக்கு என்று விளம்பரம் போடுவார்கள். அதன் அடியில் தரகர்கள் தேவையில்லை எனக் கட்டாயம் போட்டிருப்பார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது, தரகர்கள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க வல்லவர்கள் என்று. சிங்களம்–தமிழ் என்கின்ற இந்த இரண்டிற்கும் நடுவில் நிற்கும் அரசியல் தரகர்களைத் தவிர்த்தால் எல்லாம் சரிவரும்.

**டிலக்ஷன் — நவாலி**

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பலம் எப்படி உள்ளது?

ஹைடன், கில்கிறிஸ்ட், ஷேன்வோன், பொண்டிங் ஆகியோரது ஓய்வுக்குப் பின் அவுஸ்திரேலிய அணியின் கதை அவ்வளவு தான் என்று சிந்திக்க வோனர், சிமித், மைக்ஸ்வெல் என்ற கூட்டணி அவுஸ்திரேலிய அணியை மீண்டும் தூக்கி நிறுத்தியிருக்கிறது.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**தர்ணிகா — கவுந்தில்**

தமிழர்களுக்கான தீர்வு பேரினத்திடமிருந்து வருமா?

ஒரு இனத்தினுடைய தீர்வு இன்னொரு இனத்தின் கையில் இருக்கிறது என்றாலே தீர்வு கிடைக்காது என்பதே பொருள்.

காலம்காலமாக தமிழ்த் தலைவர்களை சிங்கள அரசுகள் ஏமாற்றிக் கொண்டே வந்தன. வந்து கொண்டிருக்கின்றன.

இதில் மாற்றம் ஏற்படும் என்பதில் இம்மியும் நம்பிக்கை இல்லை எமக்கு. இருந்தாலும் எமக்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற வேண்டுதல் மனதில் ஓயாது ஓடிக் கொண்டே இருக்கிறது.

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பலம் எப்படி உள்ளது?

**பிரசாந்தி — விசுவமடு**

வியாசரே சமைக்கத் தெரியாத பெண்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டு என்னைப் பெண்களுக்கு எதிரானவன் ஆக்கப் பார்க்கிறீரோ?

வீட்டுச் சாப்பாடு ஆரோக்கியம் என்றும் கடைச் சாப்பாடு ஆரோக்கியம் அற்றது என்று கூறுவதன் பொருள், வீட்டுச் சாப்பாட்டில் அன்பும் கலந்திருக்கும் அதனால் தான். சாதாரண ஒருவரிடமும் ஒரு தாயிடமும் ஒரு சாப்பாட்டு பார்சல் கட்டுவதற்குக் கொடுத்துப் பாருங்கள். இரண்டு பார்சல்களில் தாய் கட்டிய பார்சல் சோறு கறிகள் சற்று அதிகமாகக் கட்டப்பட்டிருக்கும்.

தன் மகன், மகள் அதிகமாகச் சாப்பிடவேண்டும் என சிந்திப்பது தாய் மட்டும்தான். உங்கள் கேள்விக்கு பதில் சொன்னது போல எனக்குத் தோன்றவில்லை பிரசாந்தி

**அருட்கதிர் — துன்னாலை**

ரி.வியில் பூனை, நாய், எலி–பூனை ஒற்றுமையாக இருப்பதைப் பார்க்க கவலை யாக இருக்கிறதே?

வீட்டில் தாயும் தகப்பனும், அண்ணனும்–தங்கையும், மாமியும்–மருமகளும், மச்சாளும்–மச்சாளும், அயல்வீடும்–எதிர்வீடும், இந்த ஊரும் –அடுத்த ஊரும், இந்தப் பிரதேசமும்–அந்தப் பிரதேசமும், வடக்கும்–கிழக்கும் இப்படி ஒன்றுக்குள் ஒன்றாய் இருக்க வேண்டியவர்கள் ஒன்றாய் இருக்காதவரை இப்படி பூனை, நாயைப் பார்த்துக் கவலைப்பட்டுக் கொண்டி ருக்க வேண்டியதுதான். வேறென்ன செய்ய முடியும்.

**டிலக்ஷன் — கற்கோவளம்**

சுவர்களுக்கு வர்ணம் தீட்டுவதனால் ஏதும் நன்மையுண்டோ வியாசரே?

சுவர்களுக்கு வர்ணம் தீட்டுவது நல்லதே. அது எம் சூழலை சுத்தமாய் வைத்துக் கொள்ள உதவும்.

ஆனால் தமிழர்களாகிய எமது மனதை ஆற்றுப்படுத்தும் செயல்களையும் செய்தால் நன்று.

அதை விடுத்து வெறும் சுவர்களுக்கு வர்ணம் பூசுவது மட்டும் நல்லிணக்கத்தை தந்து விடாது.

**தேனு — மானிப்பாய்**

தலைவிதி என எதையும் சர்வசாதரண்மாய் எடுத்துக் கொள்வது சரியானதா வியாசரே?

தலைவிதி என்பதுதான் மனிதனை ஆற்றுப்படுத்தும் முதல் ஆசான்.

சிந்தித்துப் பாருங்கள் எமது குடும்பத்தில் ஒரு இழப்பு ஏற்படுகிறது. அழுது புரண்டு தவிக்கிறோம். சில நாட்களில் எல்லாம் விதிப் பயனே என்று எம்மை தேற்றிக் கொள்கின்றோம்.

இந்த விதி என்கின்ற பதம் இல்லாது போனால் மனிதன் பைத்தியம் பிடித்தே அலைந்திருப்பான்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# மறந்து போகிறேன்

**மிருசுவில் மின்மினி**



அவள்
சிரிப்பொலி
அரித்தெடுக்கும்
செல்லின் அதிசய
மெல்லொலி
அவள் சிரிக்கும் போது
சிவக்கும் கன்னக்குழி
ஆழ்ந்த நிரூற்றின்
வீழ்ந்த பள்ளத்திடல்
நெஞ்சக் கிணற்றில்
விஞ்சும் அவள்
நினைவலைகள்
அலையலையாய்
அடித்து ஓயும்
அள்ளி எடுக்க
கிள்ள முடியா
நீர்த்திரளாய்
அன்புப் பொக்கிசம்
அலைக்களிக்க
அப்போதே
மறந்து போகிறேன்
என்னையே நான்

அந்த
முட்டை விழிகளின் மேல்
எனக்கொரு கண்
இல்லையில்லை
எனக்கு
இரண்டு கண்கள்
அவள்
சத்தமிட்டு பேசினால்
அத்தனையும் நடுங்கிடும்
அகிலங்களில்

# மானிடர் யாவரும் தெய்வங்களே

**எஸ்.சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு**

உலகை இறைவன் ஏன் படைத்தான்?
இயற்கையைப் போற்றி வாழ்வதற்கே...
உலகில் மதங்களை ஏன் படைத்தான்?
உயிர்களில் அன்பு கொள்வதற்கே...
மதங்களை மனிதன் ஏன் படைத்தான்?
மனதினில் அன்பு காட்டுதற்கே...
சிலைகளை மனிதன் ஏன் படைத்தான்?
விரும்பும் மார்க்கம் கொள்வதற்கே...
இறைவனின் சிலைகள் பலவுண்டு–இவை
மனிதனின் கைவண்ணத்தில் உருவானதே
கலையுடன் பார்த்தால் இறைவன் உண்டு– அதை
கல்லாய்ப் பார்த்தால் அங்கு இறைவன் இல்லை
சந்திக்குச் சந்தி சிலைகள் வைத்து
இறைவனை ஏளனம் செய்யாதீர்–தனி
சந்நிதி அமைத்து சடங்குகள் செய்து
இறைவனைப் பூட்டி வைக்காதீர்
மதவெறிகொண்டு அழிவுகள் செய்து
மதத்தையும் இனத்தையும் கொல்லாதீர்
மதபேதமின்றி இறைவனைத் தொழுது
மானிடப் பண்பைப் போற்றி நிற்பீர்
மானிட தர்மம் தழைத்திடவே
மானிடப் பண்பை மதங்கள் காட்டும்
மதங்கள் காட்டும் வழியில் வாழ்ந்தால்
மானிடர் யாவரும் தெய்வங்களே



# வாழ்க்கை வாழ்வதற்கே 02

எப்போதும் உங்களை நீங்கள்
உச்சத்தில் வைத்துக் கொள்ளுங்கள்

முடிவுகளை சுயமாக எடுங்கள்
அடுத்தவரை எதற்கும் எதிர்பார்த்து
காத்துக் கிடக்காதீர்கள்

உங்கள் முடிவில் நீங்கள்
முனைப்பாய் நில்லுங்கள்
உங்கள் முடிவுகள் மற்றவரை
பாதிக்கும் என்றால்
உடனே அதை உங்கள்
தலைகளில் போட்டுக் கொள்ளுங்கள்
அது உங்கள் மீதுள்ள நம்பிக்கையை
இன்னும் இன்னும் அதிகரிக்கும்

நீங்கள் இப்படித்தான் என்ற
வட்டத்தை மற்றவர்க்கு காட்டிவிடாதீர்
ஏனென்றால் அது உங்களை
கீழ் நிலைக்கே இழுத்துச் செல்லும்

வெற்றி உங்களால் என்று இருந்தால்
அதற்குக் கிடைத்த கோப்பையை
அடுத்தவர் கையில் கொடுத்துவிட்டு
அடக்கமாய் நில்லுங்கள்

அதே தோல்வி உங்கள் அணிக்கென்றால்
அதில் முன்னிலையாய் அதை ஏற்று
சரி செய்ய முயற்சி செய்யுங்கள்

உங்களிடம் இருப்பதை
மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற
கட்டாயம் ஏதும் இல்லை- அதற்காய்
இல்லாதவரை இகழாதீர்கள்

நல்லவர் என்று பெயர் எடுக்க
சிரித்தால் மட்டும் போதாது
மனதைத் தூய்மைப்படுத்துங்கள்
மற்றவரை மாட்டிவிடுவதை நிறுத்தி
உங்களை உயர்வுபடுத்துங்கள்

(வாழ்க்கை மலரும்)

**மாவை.நா.கஜேந்திரன்**

# பெண்ணடிமை

வெளிநாட்டு மாப்பிள்ளை
வீடு வாசல் வேண்டாமாம்
வரன் வந்து சேர்ந்தாலே
கரம் தந்தான் கடவுளென்று
கையிலுள்ள காசையெல்லாம்
கடவுச்சீட்டு வேண்டி
இந்தியா போய்த் திருமணங்கள்
இப்போ இலேசாய் நடக்கிறது
இருமனங்கள் சேர்ந்தால் தான்
திருமணமே சிறக்குமென்பர்
மாப்பிள்ளை குணமறியா
மணப்பெண்ணின் நிறமறியா
மாற்றுப்பசை பூசி
மறுநாளே சிவப்பாக்கி
இந்தப் பிள்ளையா
இம்புட்டு வடிவு என்று
ஊரே வியப்பாலே
உற்றுத்தான் பார்க்கிறது
பத்திரமும் முடித்தாச்சு
பத்து ஆண்டும் போயாச்சு
பார்த்து பார்த்து வெளிநாடு
வழி கழுவு காய்ந்தாச்சு
பொன்சருக்கு இன்னும்
அஞ்சாறு ஆண்டு ஆகுமெண்டு
கான்சர் நோய் வந்தவளாய்
மாமா மாமி காவலுக்குள்
கட்டுண்டு கிடக்கிறது
நாவில் வார்த்தையில்லை
நல்லதில்லை
கெட்டதில்லை
வயது வரம்பேறி
வாலிபமே போயாச்சு
பெண்ணடிமை இங்கே
பிறவுருவ வடிவாச்சு




# மௌனத்தின் தேடல்- 479



## புத்தர் பிறந்த இடம்

புத்தர் பிறந்த இடம்
புரியாமல் புத்தர்
செத்த இடமும் தேராமல்
பௌத்தம் வந்தேறு மதம்
பூர்வீகம் தமிழரது பூமி இது
சித்தம் கலங்கிச் சீரழிய
சரணடைய வந்தோரை
சாவுக்கு இட்டவரே
சதிகாரர் இடியமீன்களே

**த.சிவகாமி**
**நல்லூர்**

# மௌனத்தின் தேடல் -480



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## சதிகாரன் இடியமீன்

சமூக நீதி தெரியாத
சதிகாரன் இடியமீனும்
சுமுக அரசியலையே
சூறாவளி ஆக்கும்
அறம் பிழைத்த அசுரர்
ஆளுவது நிலைத்திடுமா?
அறம் வெல்லும் தமிழருக்கு
அரசோச்சும் காலம் வரும்

**த.கந்தபாலன்**
**நாரந்தனை**

## அரச உதவியுடன்

சிவனொளிபாதமலை
சிறப்போங்கு கதிரமலை
சிவபக்தன் இராவணனின்
சீரேமு வெந்நீரூற்றும்
நீராவிப் பிள்ளையாரை
நீசமாக மதித்து பிக்குடலை
ஆரவாரத் திமிரோடு
அரச உதவியுடன் நீதி
உரைத்ததையும் நீறாக்கி
ஊனமிலா உள்ளம் இடியமீன்தான்

**கந்தமணி**
**காவலூர்**

## அடக்குமுறை

மனிதனை உயிரோடு
விழுங்க முயற்சிக்கும்
அந்தக் கொடிய
அரக்கனைப் போன்றே
நம் நாட்டின் சிறுபான்மை
இனத்தவரை அடக்கியாளத்
துடிக்கிறது சிங்களப்
பெரும்பான்மை அரசாங்கம்

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## திருப்பாசுரப் பாடல்

திருப்பாசுரப் பாடல்
திருவருள் பெற்ற புகழ்
திருக்கோணேஸ்வரமும்
திருக்கேதீஸ்வரமும்
பெருமை கொள வைத்தது
பௌத்தமா இல்லை
பார்போற்றும் சைவமா
மொத்தத்தில் மதம்பிடித்த
மிருகமில்லை தமிழர்
தாயகமே இது இடியமீனே

**கந்தவாசன்**
**கரம்பொன்**

## மனிதர்களே! மனம் திரும்புங்கள்

ஐயோ! நாம் எவ்வளவோ
பாவம் செய்தோம் மெய்யாகவே எம்
மனச்சாட்சி சொல்லுதே!
விதியோ சதியோ
அல்ல எனச் சொல்லுதே!
மதி செய்யாத விதியை நோவுதே!
சத்தியத்தின் இயற்கையை மீறினோமே!
நித்திய வசனத்தை மீறினோமே!
புத்திகெட்டு பாவிகளானோமே!
சித்திபெற்று மாயையில் வீழ்ந்தோமே!
சுத்திகரித்திட நாடிடுவோம் இயற்கையை
சுகம் தரும் சிருஷ்டி
கர்த்தரையே நினைந்து!
சுட்டுப் பொசுக்கும் நீ
நரகத்திலிருந்து விடுபட
சுவிசேஷம் மனதில்
தினம் சுமந்திடுவோம்
சிலுவைத் துன்பம் சுமந்த
கிறிஸ்து இயேசுவைப் போல
சிறுபெரு துன்பம் சுமக்கும் நாமும்
சிறுபெரு பாவமன்னிப்புக்கு இக்கணமே
மனந்திரும்புவோம்!
ஆசீர்வதிக்கப்படுவோம்!
மனம் திரும்புவதே பாவ மன்னிப்பு!

**எஸ்.சுகிர்தமலர்**
**ஆனைப்பந்தி**

## இராட்சத மனிதன்

உயிருடனே சிறுவர்களை
விழுங்கும் இராட்சத
மனிதனா நீ
எத்தனை உயிர்களை விழுங்கி
ஏப்பம் கொண்டாய்?
உன் நாவிற்கும்
பசிக்கும் மனிதர்களை
இரையாக்குவது
எத்தனை கொடுமை
நீ மட்டுமல்ல
உன் போன்ற பல
அரக்கர்கள் ஒளிந்தும்
இருப்பது சங்கடமானது

**அபிகுலமாலிகா**
**சங்கானை**

## மனிதகுலம் என்னாகுமோ?

கொடிய அசுரனைப் போலவே
விஸ்வரூபம் எடுத்து.
சின்னஞ்சிறார்களைப் பிடித்து
விழுங்குன்றவன் மானிடனோ
மானிடனே அசுரனாக
மாறிப்போனாலே
மனிதகுலம் என்னாகுமோ?

**ச.பிரநிதன், மட்டுவில்**

## போதையாலான பேதமை

இன்றைக்குப் பல
மானிடர்களை மீளாத வண்ணம்
அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும்
போதை இது– சிறுவர்கள் உட்பட
போதை அன்றிலும்
இது மனிதனின் பேதமை அல்லவோ

**வி.டிலக்ஸன்**
**யா/ தும்பளை.சி.ம.வி.**



சிறுகதை

# கல்யாணக் கனவு

"அப்பப்பா என்னவெயில், என்ன வெக்க மண்டையப் பிளக்குது. பாக்கியம் தண்ணி கொண்டுவா குடிப்பம்" எனக் கூறியபடி கதிரையில் அமர்ந்தார் சோமு. "இந்தாங்கோ தண்ணி. இந்த வெயிலுக்க இப்ப எங்க போயிற்று வாறியள்" எனக் கேட்டாள் பாக்கியம்.

"நான் வேறெங்க போவன். எல்லாம் எங்கட பிள்ளையின்ர விசயமாக புரோக்கர் நாதனைப் பார்த்திட்டு வாறன்" எனக்கூறியபடி பெருமூச்சு விட்டார் சோமு.

சோமு பாக்கியத்தைத் திருமணம் செய்து தவமாய் தவமிருந்து பிறந்தவள்தான் ஜீவிதா. சோமு தான் ஏழ்மையில் வாழ்ந்தாலும் தன் மகளைப் படிக்க வைத்தார். ஜீவிதாவும் படிப்பை முடித்து வேலையில்லாததால் தனியார் கம்பனியில் வேலை செய்து வந்தாள். தன் மகளை எப்படியாவது வாழவைக்கவேண்டுமென மனம் சலிக்காது புரோக்கரிடம் ஒவ்வொரு முறையும் சென்று வந்தார் சோமு.

" என்ன கடும் யோசனையில் இருக்கிறியள். புரோக்கர் நாதன் என்ன சொன்னார்" என ஆவலோடு கேட்டாள் பாக்கியம். " ஒன்றுமில்லை பாக்கியம் பிள்ளையின்ர போட்டோவையும் குறிப்பையும் புரோக்கர் மாப்பிள்ளை வீட்டாரிடம் குடுத்தவராம். இன்னும் ஒரு பதிலும் வரயில்லையாம்" எனக் கூறினார் சோமு.

"கடவுளே இந்த மாப்பிள்ளையாவது பிள்ளைக்கு அமையவேண்டுமெனக் கூறியபடி வீட்டிற்குள் போகத் திரும்பிய போது யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு "யாரது யார்" எனக் கேட்டாள் பாக்கியம். "அது நான்தான் தங்கச்சி வேலு" எனக் கூறியபடி உள்ளே வந்தார் வேலு. சோமுவும் வேலுவும் ஒன்றாகப் படித்தவர்கள். இன்றுவரை இவர்களின் நட்பு பிரியவே இல்லை.

"என்னடாப்பா வேலு கனநாளா உன்னை இந்தப் பக்கம் காணயில்லை" எனக் கேட்டார் சோமு."ஓமடாப்பா எங்க நேரம். தோட்டம் துரவென்று என்ர காலம் போகுது. நீ எப்பிடி சுகமாய் இருக்கிறியே" எனக் கேட்டார் வேலு. "ஏதோ சுகமாய் இருக்கிறன்" எனக் கூறினார் சோமு. சோமு தன் மகளுக்காகப் படும் கஷ்டத்தை நன்றாகவே உணர்ந்திருந்தார் வேலு.

"சோமு அது இண்டையான் பேப்பரா? இண்டைக்கு என்ன செய்தி?" எனக் கேட்டார் வேலு. "வேலு இப்பையெல்லாம் கொலை, களவு, சமூகச் சீரழிவு எண்டுதானே கிடக்குது" என ஓர் வெறுப்போடு கூறினார் சோமு.

"உண்மைதான் நாங்கள் வாழ்ந்த காலம் வேற. இப்ப இருக்கிற காலம் வேற. அந்தக் காலத்தில கலை, கலாசாரப் பண்பாட்டோட வாழ்ந்தம். இப்ப பார்த்தால் எங்கட கலை, கலாசாரப் பண்பாடுகள் எல்லாம் சீரழிஞ்சு போச்சு" என மனதில் ஆதங்கம் வந்தவராய் கூறினார் வேலு.

" இப்ப அம்மா யார், மகள் யார் என்று தெரியாத அளவுக்கு காலம் மாறிப்போச்சு. கண்டறியாத போன் ஒன்று வந்து தான் எல்லாம் சீரழிஞ்சு போகுதுகள்" எனச் சினந்து கொண்டார் சோமு.

"எட சோமு இந்த அவசர உலகத்தில மனித வாழ்வில் போனும் ஒரு முக்கிய சாதனமாகப் போச்சுது. போனிலையும் எத்தனையோ நல்ல விடயங்கள் இருக்கு. அது பாவிக்கிற முறையைப் பொறுத்தது. உதுகள் எங்க அதுகளைப் பார்க்கப் போகுதுகள்" எனக்கூறினார் வேலு. " இதுகளை நாங்கள் கதைச்சு ஒரு பிரியோசனமும் இல்லை. ஏதோ நடக்கிறதைக் காணவேண்டியதுதான்" என்றார் சோமு.

"சரி சோமு நானும் வந்து கனநேரமாகப் போச்சு. போயிற்று வாறன்" எனக் கூறியபடி வெற்றிலையை போட்டுக்கொண்டு சென்றார் வேலு. "பாக்கியம் பிள்ளை எங்க போயிற்றுது. இன்னும் காணயில்லை" எனக் கேட்டார் சோமு. "பிள்ளை சுமதி வீட்டை போயிற்று வாறனெண்டு போனது" என்றாள் பாக்கியம்.

"சரி நான் கடைப்பக்கம் ஒருக்கா போயிற்று வாறன்" எனக் கூறிக்கொண்டு எழுந்த போது "சோமு அண்ண... சோமு அண்ண..." எனக் கூப்பிட்டவாறு புரோக்கர் நாதன் வருவதைக்கண்டதும் மின்னல் பளிச்சிட்டதைப் போன்று முகத்தில் சந்தோசம் மலர "வா தம்பி நாதன் வா" என வரவேற்றார் சோமு.

பாக்கியம் கொடுத்த தேநீரை அருந்திவிட்டு "சோமு அண்ண மாப்பிள்ளையும் அவர் வீட்டாரும் பொம்பிளையைப் பார்க்க வேணுமாம். நீங்கள் வாற வெள்ளிக்கிழமை உங்கட மகளையும் கூட்டிக் கொண்டு முருகன் கோயிலுக்கு வாருங்கோ" எனக் கூறினார் நாதன்.

"சீதனம் சம்பந்தமா நீங்கள் மாப்பிள்ளை வீட்டுக்காரரோட கதைச்சனீங்களே" எனக் கேட்டாள் பாக்கியம். "அதெல்லாம் ஆறுதலாகக் கதைக்கலாம். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். சோமு அண்ண நான் போயிற்று வாறன்" எனக் கூறியபடி வாசலில் கிடந்த செருப்பினை காலில் போட்டுக் கொண்டு சென்றார் புரோக்கர் நாதன்.

"முருகா நீதான் துணை. உன்னைத் தான் நம்பியிருக்கிறம்" எனப் பாக்கியம் கூறும்போது ஜீவிதாவும் வீடு வந்து சேர்ந்தாள். "பிள்ளை மாப்பிள்ளையும் அவர் வீட்டாரும் உன்னைப் பார்க்க வெள்ளிக்கிழமை வருகினமாம். ஒரு இடமும் போகாத" எனக் கூறினாள் பாக்கியம்.

தாய் கூறியதைக் கேட்டதும் சந்தோசப் பூக்கள் மனதிற்குள் பூக்க நாணத்தால் முகம் சிவக்க வீட்டிற்குள் ஓடிச்சென்றாள் ஜீவிதா. நாட்களும் விரைவாக ஓடியது. அன்று வெள்ளிக்கிழமை இரு வீட்டாரும் முருகன் கோயிலில் சந்தித்துக் கொண்டனர். " என்ன இரண்டு பகுதியும் ஒன்றும் பேசாமல் நிக்கிறியள். ஏதாவது கதையுங்கோவன்" என ஆரம்பித்து வைத்தார் புரோக்கர் நாதன்.

எங்களுக்கும் மாப்பிள்ளைக்கும் பொம்பிளையைப் பிடிச்சிருக்கு" எனக் கூறினார் மாப்பிள்ளை நந்தனின் தந்தை வெற்றிவேல். " சோமு அண்ண மாப்பிள்ளைக்குப் பொம்பிளையைப் பிடிச்சிருக்காம். உங்கட பக்கம் என்ன மாதிரி" எனப் புரோக்கர் கேட்க அவர்களும் பச்சைக்கொடி காட்டினார்கள்.

"ஒரு நல்ல நாளாப் பார்த்து பேச்சுக்காலை வைப்பம்" என வெற்றிவேல் கூற சோமுவும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார். இருவீட்டாரும் அவ்விடம் விட்டு அகன்றனர். சோமுவின் மனதில் எண்ண அலைகள் மோத பேச்சுக்காலின் போது என்ன கேட்பார்களோ என்ற ஏக்கம் நெஞ்சை அடைத்தது. பேச்சுக்காலிற்குரிய நாளும் வந்தது. மாப்பிள்ளை வீட்டில் இருவீட்டார் சொந்தங்களும் கூடியிருக்க பேச்சு நடைபெற்றது.

"சோமு இது உங்கட பிள்ளையின்ர வாழ்க்கை. வாழப் போறது உங்கட பிள்ளை. எவ்வளவு தருவதாக உத்தேசம்" என வெற்றிவேல் கேட்டார். "நான் எங்கட நிலைமையைப் பற்றி புரோக்கரிடம் சொன்னான். ஏதோ எங்களால இயன்றதைத் தருவம்" எனக் கூறினார் சோமு.

" சோமு நான் பெரிசா ஒன்றும் கேட்க இல்லை. இருபது இலட்சம் ரூபா காசும் பதினைந்து பவுண் நகையும் வீடு வளவு இவ்வளவும்தான் கேட்கிறன்" என வெற்றிவேல் கூற வானமே இடிந்து தலையில் விழுவதைப் போல் செய்வதறியாது தன் மனைவியைப் பார்த்தார் சோமு. "அண்ண இவ்வளவு பணம் தருவதற்கு எங்களிடம் வசதியில்லை. ஏதோ எங்களால முடிஞ்சதை தருவம்" எனக் கூறினாள் பாக்கியம்.

அதற்கு சோமுவும் ஐந்து இலட்சம் ரூபா காசும் நாலரைப் பவுண் நகையும் நாங்கள் இருக்கிற வீட்டினையும் தருவம்" எனச் சோமு கூற, " ஓ அப்படியா சங்கதி. நீங்கள் குடுக்கிற இந்தப் பணத்தை வைத்து இவர்கள் எப்படி வாழப்போகிறார்கள். இந்தாப் பார் சோமு நான் கேட்ட சீதனம் கேட்டால் உங்கட மகளை என் வீட்டு மருமகளாக ஏற்றுக் கொள்ளுவன். இல்லையென்றால் ஒன்றுமே செய்ய முடியாது" எனக் கூறினார் வெற்றிவேல்.

"நீங்கள் மனசு வைச்சால் எல்லாமே நல்லபடியாக நடக்கும் என" அழாத குறையாக் கேட்டார் சோமு. "மனசு மனுசனை வாழவைப்பதில்லை. பணம்தான் மனுசனை வாழ வைக்கும். சோமு நான் கேட்ட சீதனம் தந்தால் கெட்டி மேளச் சத்தம். இல்லையென்றால் வேறு வழியைப் பார்க்க வேண்டியதுதான் எனக் கைவிரித்தார் வெற்றிவேல்.

சோமுவும் அவரது மனைவியும் கலங்கிய விழிகளோடு வீடு சென்றனர். " கடவுளே உனக்கு கண் இல்லையா. உனக்கு இரக்கமே இல்லையா? நாங்கள் ஏழைகளாகப் பிறந்தது பாவமா? இனி நாங்கள் எங்கட பிள்ளையை எப்படி வாழவைப்பது. சீதனம்... சீதனம் இந்தப் பாழாப் போன சீதனத்தால என்ர பிள்ளையைப் போல இன்னும் எத்தனையோ பிள்ளைகள் வாழ வழியின்றி கண்ணீர்விட்டபடி சிறைப்பறவைகளாக இருக்கிறார்கள்.

இதற்கு முடிவே இல்லையா பாக்கியம்... பாக்கியம்... பிள்ள...பிள்ள... என நெஞ்சைப்பிடித்தபடி சோமு கூப்பிட சத்தம் கேட்டு ஓடிவந்த ஜீவிதா தனது தந்தையை மடியில் வைத்தபடி "அப்பா என்னப்பா செய்யிது" என விழிகளில் நீர்வடிய கேட்டாள் ஜீவிதா. "ஒன்றுமில்லையம்மா நெஞ்சு வலிக்குது" என மகளின் முகத்தை வருடியபடி கூறினார் சோமு.

" அப்பா நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எனக்கு கல்யாணமே வேண்டாமப்பா. இறுதிவரையும் உங்கள் பிள்ளையாகவே இருக்கிறன். அம்மா... அப்பாவைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என ஜீவிதா எழுந்து கொள்ள "சிறகே இல்லாத பூங்குருவி ஒன்று வானத்தில் பறக்கிறது" எனும் பாடல் எங்கேயோ இருந்து ஒலிக்க கல்யாணக் கனவுகளை மனசிற்குள் சுமந்தபடி விழிகள் பனித்துக்கொள்ள அடுக்களை நோக்கி நகர்ந்தாள் ஜீவிதா.

மா.செழியன், வேலணை.

# இந்தியாவைக் கூறுபோடும் குடியுரிமை திருத்தச்சட்டம்

**2019** நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவின் இமாலய வெற்றிக்குப் பிறகு, சட்டப்புத்தகத்தைத் தொட்டு வணங்கி, பிரதமராக மீண்டும் பதவியேற்றுக் கொண்டார் மோடி. ஆனால் இப்போது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையையே தகர்க்கும் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது மோடி அரசு.

**இந்தச் சட்டத்திருத்தம் என்ன சொல்கிறது?**

'இந்திய எல்லைப்பகுதியை ஒட்டி அமைந்துள்ள பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மத ரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாகி இந்தியாவுக்குள் குடியேறிய இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பார்சி இனத்தவர் ஆகியோர் சட்டவிரோதக் குடியேறிகளாகக் கருதப்படமாட்டார்கள். இவர்கள் குடியேறி ஐந்து ஆண்டுகள் கடந்திருந்தால், இந்தியக் குடியுரிமை வழங்க இந்தச் சட்டத்திருத்த மசோதா வழிவகை செய்கிறது. அதேசமயம் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் குடியேறியுள்ள இஸ்லாமியர்களுக்கு இந்தச் சட்டத்திருத்தம் பொருந்தாது' என்பதுதான் இம்மசோதாவின் முக்கிய அம்சம்!

இம்மசோதா, இஸ்லாமியர்கள் தவிர்த்துப் பிற மதத்தினருக்கு மட்டும் குடியுரிமை வழங்குவதும் ஈழத்தமிழர்களைக் கண்டுகொள்ளாததும் எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது. இதற்கிடையில், வங்கதேசத்திலிருந்து அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் குடியேறியுள்ளவர்களுக்கு இம்மசோதா குடியுரிமை அளிப்பதால், 'வங்கதேசத்தினரின் ஆதிக்கம் அதிகரித்துவிடும்' என்ற அச்சவுணர்வில் இம்மாநிலங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

முதலில் அஸ்ஸாமில் ஆரம்பித்த போராட்டம் படிப்படியாக அதிகரித்து, அஸ்ஸாமையே முடக்கிப்போட்டது. மேற்கு வங்கத்திலும் போராட்டம் வெடித்து ரயில்களை எரிக்கும் அளவுக்குத் தீவிரமடைந்தது. டில்லியில் இந்தச் சட்டத்துக்கு எதிராகப் போராடிய டில்லி ஜமியா பல்கலைக்கழக மாணவர்களைப் பொலிஸார் கடுமையாகத் தாக்கியதுடன், 'சோதனை' என்ற பெயரில் கல்லூரி விடுதிக்குள் அத்துமீறி நுழைந்தது. தமிழகத்தில் வசிக்கும் அஸ்ஸாம் இளைஞர்கள் சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அருகே போராட்டம் நடத்தும் அளவுக்கு இந்தியாவெங்கும் கிளர்ச்சி வெடித்துள்ளது.

ஆனால் பிரதமர் மோடியோ, "போராடுபவர்களின் உடைகளைப் பார்த்தாலே தெரியவில்லையா, அவர்கள் யார் என்று" எனப் பொறுப்பில்லாமல் பேசியிருக்கிறார்.

இந்திய அளவில் எந்தப் பிரச்சினை நடந்தாலும் அதற்கான தீவிர எதிர்வினையை முன்வைப்பது தமிழகத்தின் தனிச்சிறப்பு. குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான போர்க்குரலைத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதிவு செய்திருந்தார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், "மத அடிப்படையில், ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் மக்களுக்காகத்தான் இந்த மசோதாவே நிறைவேற்றப்படுகிறது. அப்படியென்றால், பாகிஸ்தான் அஹமதியா முஸ்லிம்கள், மியன்மார் ரோஹிஞ்யாக்கள், இலங்கையில் சிங்கள பௌத்தப் பேரினவாதத்தால் பாதிக்கப்படுகிற தமிழர்களுக்கும் குடியுரிமை கிடைக்கும் வகையில்தானே இந்தச் சட்டத்திருத்தம் இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி இல்லையே! அண்டை




நாடுகளில் வாழ்ந்து வரும் இந்து மக்களுக்கு வெளிப்படையாக அழைப்பு விடுக்கும் இவர்கள் 'இஸ்லாமிய மக்களுக்கு மட்டும் குடியுரிமை கிடையாது' என்று திட்டமிட்டு ஒதுக்குகிறார்கள். இதன் மூலம் உள்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களுக்கு நேரிடையான அச்சுறுத்தலைக் கொடுக்கிறார்கள்" என்கிறார் வேதனையோடு.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினரான ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, "ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்தவர்களை அன்பொழுக அழைத்து விருந்து கொடுக்கும் மத்திய ஆட்சியாளர்கள், இங்கே அகதி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவது பற்றி யோசித்துப் பார்ப்பதற்குக்கூடத் தயாராக இல்லை. மதச்சார்பின்மையை வலியுறுத்துகின்ற, இந்திய ஜனநாயகத்துக்கும் ஒற்றுமைக்கும் உலைவைக்கும் விஷ விதைகளைத் தொடர்ந்து விதைத்துக்கொண்டிருக்கிறது மத்திய பா.ஜ.க அரசு" என்று எச்சரிக்கிறார்.

"இஸ்லாமியர்கள், ஈழத்தமிழர்களை மட்டுமல்ல... கிறிஸ்தவர்களையும் குடியுரிமைச் சட்டத்திலிருந்து விலக்குவதுதான் பா.ஜ.கவின் திட்டம். ஆனால்..." என்று புதியதொரு கோணத்தில் இப்பிரச்சினையை அணுகுகிறார் தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான தயாநிதி மாறன்.

"பா.ஜ.கவின் 2019ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில், 'இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களைத் தவிர்த்து ஏனைய மதத்தினருக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும்' என்றுதான் அறிவித்திருந்தார்கள். ஆனால், இப்போது கிறிஸ்தவர்களை உள்ளே கொண்டுவந்து, இஸ்லாமியர்களை மட்டும் தனிமைப்படுத்திவிட்டார்கள். காரணம், 'கிறிஸ்தவர்களுக்கும் குடியுரிமை கிடையாது' என்று அறிவித்திருந்தால், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் கடும் எதிர்ப்பை இந்தியா சந்திக்க நேரிட்டிருக்கும்.

இலங்கையில் பௌத்த மதத்தினரின் ஆதிக்கத்தால் இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்து, 35 வருடங்களுக்கும் மேலாக அகதிகளாகவே வாழ்ந்துவரும் இந்து தமிழ் மக்களின் குடியுரிமையைப் பற்றி இந்தச் சட்டத்திருத்தம் கண்டுகொள்ளவே இல்லையே, ஏன்? இந்தி பேசும் இந்துக்கள் உங்களுக்கு வேண்டும். தமிழ் பேசுகிற இந்துக்கள் வேண்டாமா?" என்ற ஆவேசக் கேள்வியை எழுப்புகிறார்.

இந்நிலையில், ஈழத் தமிழர்களுக்கான குடியுரிமை பற்றி எந்தவிதத் தீர்வையும் முன்வைக்காத இம்மசோதாவை அ.தி.மு.க ஆதரித்து வாக்களித்திருப்பது தமிழக எதிர்க்கட்சிகளால் கடும் விமர்சனத்துக்குள்ளாகி வருகிறது. அரசியல் ரீதியான இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துப் பேசுகிற அ.தி.மு.க மேலவை உறுப்பினரான நவநீதகிருஷ்ணன், "ஈழத்தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்குவதற்கான சிறப்புச் சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை ராஜ்யசபாவில் வலியுறுத்திய பிறகுதான் நாங்கள் இம்மசோதாவையே ஆதரித்திருக்கிறோம்.

அடுத்ததாக, 'முஸ்லிம்களுக்கு எதிரான கட்சி அ.தி.மு.க' என்பதுபோல், எதிர்க்கட்சிகள் விஷமப் பிரசாரம் செய்கின்றன. 1955 இல் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின்படி இப்போதும் தகுதியுள்ள இஸ்லாமியர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட்டே வருகிறது. எனவே, இந்திய முஸ்லிம்களுக்கு எப்போதுமே அ.தி.மு.க பாதுகாப்பாக விளங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை" என்கிறார் உறுதியாக.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான ஜோதிமணி, " 'இந்தியா வல்லரசாகிறது' என்று சொல்லிக்கொள்ளும் நாம், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், பொருளாதாரம், பெண்கள் பாதுகாப்பு என அனைத்து வகையிலும் முன்னேறியிருக்கும் மேற்கத்திய நாடுகளோடுதான் போட்டி போடவேண்டும். ஆனால், அதற்கான திறன் இவர்களிடம் இல்லை. எனவே, எல்லாவகையிலும் பின்தங்கிப்போன பாகிஸ்தானோடு இந்தியாவை ஒப்பிட்டுக்கொண்டு மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி ஒட்டுமொத்த நாட்டின் முன்னேற்றத்தையே பின்னோக்கி இழுக்கிறார்கள்" என்கிறார் அழுத்தமாக.

எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கேள்விகளுக்கு விளக்கம் கேட்டு, தமிழக பா.ஜ.க பொதுச்செயலாளர் வானதி சீனிவாசனிடம் பேசியபோது, "1955இல் கொண்டுவரப்பட்ட 'குடியுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட சில ஷரத்துகளில் மட்டும்தான் இப்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், திட்டமிட்டு இஸ்லாமியர்களை இந்த அரசு புறந்தள்ளுவதுபோல் ஒரு மாயையை எதிர்க்கட்சியினர் உருவாக்கி வருகிறார்கள்.

இப்போதும்கூட வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய கிறிஸ்தவரோ அல்லது பாகிஸ்தானிலிருந்து வரக்கூடிய இஸ்லாமியரோ 1955ஆம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டப்படி இந்தியக் குடியுரிமை பெற்று வாழும் உரிமை அப்படியேதான் தொடர்கிறது என்பதை முதலில் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாம் அல்லாத மதங்களைச் சார்ந்த அகதிகளை, இந்தியக் குடிமக்களாக அங்கீகரிப்பதில் 11 ஆண்டுகாலம் என்றிருந்த இடைவெளியை 5 ஆண்டுகளாகக் குறைத்துச் சட்டத்திருத்தம் செய்திருப்பதுதான் இந்தச் சட்டம்.

பாகிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ள அஹமதியா முஸ்லிம்கள் எனப்படுபவர்கள் முஸ்லிம்களிலேயே ஒரு பகுதியினர். இவர்கள் ஏற்கனவே இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றவர்கள். ஆனாலும் அங்கே உரிய அங்கீகாரம் அளிக்கப்படாமல் வசித்துக்கொண்டிருப்பவர்கள். 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்திலேயே, 'இங்கிருந்து பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளவர்களுக்கு அங்கே உரிய அங்கீகாரம் கிடைக்காமல் அவதிப்பட்டால், மறுபடியும் இந்தியாவுக்கு வந்துவிடலாம்' என்று கூறி இரண்டு ஆண்டுகாலம் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் 'எங்களுக்கு மதம்தான் முக்கியம், நாங்கள் இந்தியா திரும்பமாட்டோம்' என்று கூறிப் பாகிஸ்தானிலேயே தங்கிவிட்டவர்கள் தான் இந்த அஹமதியா முஸ்லிம்கள். எனவே, இந்தச் சட்டத்திருத்த மசோதா அவர்களுக்குப் பொருந்தாது.

அடுத்ததாக, ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மியன்மார் நாட்டிலிருந்து வந்தவர்கள். ஆனால், இப்போதைய சட்டத்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் மியன்மார் இடம்பெறவில்லை. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் சட்டவிரோதமாக இங்கே வந்து குடியேறியிருப்பவர்களுக்கும் குடியுரிமை வழங்குவதென்பது, அவர்கள் வந்த பிரச்சினையின் பின்னணி மற்றும் அந்தந்த நாடுகளோடு இந்தியாவுக்கு உள்ள வெளியுறவு எனப் பல்வேறு விடயங்களையும் பொறுத்ததாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில், ஏற்கனவே சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்திலேயே, ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதன்படி இலங்கையிலிருந்து இந்தியா திரும்பியவர்களுக்கு உரிய குடியுரிமை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அதன்பிறகு கடந்தகாலங்களில் அங்கே நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்திருப்பவர்கள் மறுபடியும் அவர்களது தாய் நாட்டுக்கே சென்று வாழ வேண்டும் என்றுதான் மத்திய அரசு விரும்புகிறது. ஏனெனில், பாகிஸ்தானிலோ அல்லது வங்கதேசத்திலோ உள்ள சிறுபான்மை மக்கள் என்பவர்கள் தங்களுடைய தனி அடையாளத்துக்காகவோ அல்லது தனி நாடு கோரியோ அங்கே போராடவில்லை.

தாங்கள் சார்ந்திருந்த மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமையையும் அடையாளத்தையும் மட்டுமே அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், இலங்கைப் பிரச்சினை என்பது அப்படிப்பட்டதல்ல. அங்கு தனி நாடு கோரிக்கை இருந்தது. அதற்கென்று அரசியல் வாய்ப்பும் அங்கிருந்தது. எனவே, அந்த மக்களை மீண்டும் இலங்கையிலேயே குடியமர்த்தி சம உரிமையோடு அவர்களை அங்கே வாழவைக்க வேண்டும்' என்றே மத்திய அரசு நினைக்கிறது.

அதற்கான முயற்சியாகத்தான் இலங்கையிலே ஆயிரக்கணக்கான குடியிருப்புகளை இந்தியா சார்பில் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் தொழில் செய்துகொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே விமான சேவை தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், இங்கிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியக் குடியுரிமை வழங்கிவிட்டால், மீண்டும் அவர்கள் இலங்கைக்குச் செல்லமுடியாது.

இலங்கையில் தமிழர்களுக்குண்டான உரிமைகள் அனைத்தும் கைவிட்டுப்போய், முழு இலங்கையும் சிங்களவரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே போய்விடும். எனவே இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தச் சட்டத்திருத்தம் பொருந்தாது" என்கிறார்.

'பிரித்தாளும் சூழ்ச்சி' என்பது பிரிட்டிஷ்காரர்கள் கடைப்பிடித்தது. இப்போது பி.ஜே.பி. அரசு கடைப்பிடிக்கிறது. 'முஸ்லிம்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் தானே பிரச்சினை' என்று அமைதியாக இருந்துவிட்டால், அடையாளங்களைப் பயன்படுத்திப் புறக்கணிக்கும், வேட்டையாடும் அபாயம் நாளை நம்மையும் நெருங்கக்கூடும். இதற்கெதிரான குரல்களை ஓங்கி ஒலிப்பது ஒட்டுமொத்த இந்தியக் குடிமக்களின் கடமை.

# அமெரிக்கப்படைகளால் கொல்லப்பட்ட ஈரான் இராணுவத் தளபதி சுலேமானீ

## பதிலடிக்குத் தயாராகும் ஈரான் வலுக்கும் போர் பதற்றம்

ஈரானின் புரட்சிகர இராணுவ படைப்பிரிவின் தலைவரும் அந்த நாட்டிலேயே அதிக அதிகாரம் பெற்ற இராணுவத் தளபதியாக விளங்கிய வருமான ஜெனரல் காசெம் சுலேமானீ அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டுள்ளது சர்வதேச அளவில் அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது.

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகள், ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவின் பேரில் காசெம் சுலேமானீயை கொன்றதை அமெரிக்க பாதுகாப்புத் துறையின் தலைமை அலுவலகமான பென்டகன் உறுதிப்படுத்தியது.

“இந்த தாக்குதலை நடத்திய குற்றவாளிகளுக்கு கடுமையான பழிவாங்கல் நடவடிக்கை காத்திருக்கிறது” என்று ஈரானின் அதி உயர் தலைவர் அயத்துல்லா அலி காமேனி எச்சரித்துள்ளார்.

அயத்துல்லா அலி காமேனிக்கு அடுத்தபடியாக ஈரானில் சக்திவாய்ந்த நபராகக் கருதப்பட்டவர் சுலேமானீ.

சரி. யார் இந்த காசெம் சுலேமானீ? ஈரானின் இராணுவ முகமாக இருந்த இவரது மரணம் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் என்ன?

ஈரானின் ஆட்சியில் ஜெனரல் காசெம் சுலேமானீ, ஒரு முக்கியமான நபர். 1998 ஆம் ஆண்டு முதல் காசெம் சுலேமானீ, ஈரானின் புரட்சிகர இராணுவ படைப்பிரிவு **(Quds Force)** ஒன்றின் தலைவராக இருந்து வந்தார். இந்தப்பிரிவு வெளிநாடுகளில் இரகசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

ஈரானின் புரட்சிகர இராணுவ படையானது, அந்நாட்டின் இஸ்லாமிய கட்டமைப்பை பாதுகாக்க 40 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது.

இந்த படையின் **Quds** என்ற பிரிவு, மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள கூட்டணி அரசுகள் மற்றும் ஆயுதம் ஏந்திய போராளிகள் குழுவிற்கு இரகசியமாக பணம், ஆயுதங்கள், தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் ஆலோசனை போன்ற உதவிகளை வழங்கும். இதன்மூலம் ஈரானின் ஆதிகத்தை மத்திய கிழக்கு பகுதிகளில் விரிவுபடுத்தும் இலட்சியம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்குப் பின்னால் இருந்த முக்கிய புள்ளிதான் காசெம் சுலேமானீ. போர் என்று வரும்போது அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் போன்று இவர் செயற்பட்டார்.



### ஈரான் - ஜெனரல் காசெம் சுலேமானீ - அமெரிக்கா

ஈரானும் அமெரிக்காவும் சித்தாந்த ரீதியாக எதிரிகளாக இருந்தாலும் ஈராக்கில் ஐ.எஸ்.அமைப்பு நடத்திய தாக்குதல், இரு நாடுகளுக்கு இடையே மறைமுக தொடர்பை ஏற்படுத்தியது.

2001 ஆம் ஆண்டு, ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பை அகற்ற அமெரிக்காவுக்கு இராணுவ புலனாய்வு உதவிகளை வழங்கியது ஈரான்.

மேலும், 2007 ஆம் ஆண்டு, ஈராக்கின் பாதுகாப்பு குறைபாடுகள் குறித்த பேச்சுவார்த்தைக்காக, அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகள் தங்கள் அதிகாரிகளை பக்தாத்துக்கு அனுப்பின.

அப்போது ஈராக்கில் வகுப்புவாத வன்முறையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தார் அந்நாட்டின் பிரதமர் நூரி மலிகி.

### இந்த விவகாரத்தில் முக்கிய பங்கு ஆற்றியவர் காசெம் சுலேமானீ. அது எப்படி?

ஈராக்கிற்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ரியான் க்ரோக்கர் இது தொடர்பாக இரண்டு ஆண்டுகளுக்கு முன் அளித்த பேட்டியில், பக்தாத் பேச்சுவார்த்தைக்கு பின்னால் ஜெனரல் காசெம் சுலேமானீயின் பங்கு குறித்து விபரித்தார்.

“பேச்சுவார்த்தையின்போது ஈராக்கிற்கான ஈரான் தூதர் அடிக்கடி இடைவேளை எடுத்துக் கொண்டார். எனக்கு அது ஏன் என்று தெரியவில்லை. அவர் குறிப்பிடாத சில விடயங்களை நான் பேசும்போதெல்லாம் அவர் இடைவேளை எடுத்துக் கொண்டு ஈரானுக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசுவார். அவரை ஈரான் முழு கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. தொலைபேசியின் அந்த முனையில் பேசியவர் காசெம் சுலேமானீ” என்றார் க்ரோக்கர்.

க்ரோக்கர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க தூதராக பணியாற்றிய போதும் சுலேமானீயின் தாக்கத்தை உணர்ந்ததாக தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்த ஈரான் நாட்டின் பேச்சுவார்த்தை அதிகாரிகள், அனைத்து விடயங்களையும் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகத்திடம் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால், இறுதி முடிவு எடுப்பது காசெம் சுலேமானீதான் என்று க்ரோக்கர் தெரிவித்தார்.

ஒருசில ஆண்டுகளில் சுலேமானீயின் பங்கு வெளிச்சத்திற்கு வந்தது. தொலைபேசியில் மட்டுமே பேசிக் கொண்டிருந்த நபர், வெளிப்படையாக தெரிய ஆரம்பித்தார்.

பிறகு ஈரானின் முக்கிய முகமாக மாறினார் சுலேமானீ, எந்த பிரச்சினை இருந்தாலும் அவரிடம்தான் எடுத்துச் செல்லப்படும்.

சிரியா போர், ஈராக் உடனான மோதல், இஸ்லாமிய அரசுக்கு எதிரான சண்டை மற்றும் பல விவகாரங்களில் சிரியாவின் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத்தின் மூளையாகவும் காசெம் செயற்பட்டார் என்று கூறப்படுகிறது.

இதனையடுத்துத்தான் வெறும் ஒரு அதிகாரியாக இருந்த காசெம், கதாநாயகர் போல பார்க்கப்பட்டார்.

காசெம் சுலேமானீ கட்டுப்படுத்திய படைப்பிரிவு நேரடியாக ஈரான் நாட்டின் அதி உயர் தலைவர் அயதுல்லா அலி காமினேவிடம் தொடர்பில் இருக்கும்.

காசெம் சுலேமானீ தலைமை வகிக்கும் **Quds** பிரிவு, அமெரிக்காவில் தீவிரவாத தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

ஏற்கனவே ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான பிரச்சினையில், தற்போது சுலேமானீயின் மரணமும் சேர்ந்திருக்கிறது.

பிரச்சினை பெரிதாகும் அதே நேரத்தில், ஈரானின் பதிலடியும் தீவிரமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

### சுலேமானீ கொல்லப்பட்டது எப்படி?

அமெரிக்க ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தியதில், ஜெனரல் சுலேமானீ கொல்லப்பட்டதாக ஈரானின் புரட்சிகர காவல் படை கூறுகிறது.

சுலேமானீ மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற போராளிகள் இரண்டு கார்களில் பக்தாத் விமான நிலையத்தில் இருந்து செல்லும்போது அமெரிக்க ட்ரோனால் அவர்கள் தாக்கப்பட்டனர்.


இது தொடர்பாக பென்டகன் வெளியிட்ட அறிக்கையில், “ஜனாதிபதியின் உத்தரவின் பேரில், வெளிநாட்டில் இருக்கும் அமெரிக்க பணியாளர்களை பாதுகாக்கும் நோக்கத்தில் ஜெனரல் காசெம் சுலேமானீயை கொல்லும் முடிவை அமெரிக்க இராணுவம் எடுத்தது” என்று கூறப்பட்டுள்ளது.

“ஈரான் எதிர்காலத்தில் தாக்குதல் நடத்துவதை தடுக்கும் நோக்கத்தோடு இது நடத்தப்பட்டது. அமெரிக்கர்கள் உலகில் எங்கிருந்தாலும் அவர்களை பாதுகாக்க அமெரிக்கா அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்” என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

B.B.C

# "இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதே தீர்வு

## அடித்துச் சொல்கிறார் இளம்பரிதி



முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களின் நிலை பற்றி கடந்த பத்து ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருகிறார் சென்னைப் பல்கலைக் கழகக் குற்றவியல் துறையின் மூத்த ஆய்வாளர் இளம்பரிதி. தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களுக்கு மட்டுமல்லாது, இலங்கைக்கும் பல முறை பயணம் மேற்கொண்டிருக்கிறார் இவர்.

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை அரசியல் தளத்தில் தொடர்ந்து முன்வைத்து வருகிறார். புதிதாக நிறைவேற்றப்பட்ட குடியுரிமை சட்டத்திருத்தத்துக்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள சூழலில், இளம்பரிதியைச் சந்தித்து சில கேள்விகளை முன் வைத்தோம்.

**"இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்த தமிழர்கள் எந்தெந்தக் காலகட்டங்களில், என்னென்ன காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்தனர். இந்திய அரசு அவர்களை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளது?"**

"1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, இலங்கையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 9,75,000 மலையகத் தமிழர்கள் இருந்தனர், இவர்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் இலங்கை அரசு காலப்போக்கில் பறித்தது. இதனால், அவர்கள் நாடற்றவர்களாக மாறினர். ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தவரையில் பிரிட்டிஷ் காலத்தில் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து மற்ற நாடுகளுக்குச் சென்றவர்கள் அந்த நாடுகளின் குடிமக்களாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

1964இல் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக இருந்த போதுதான் இலங்கை - இந்திய அரசு இடையே சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இது 1974இல் இந்திரா காந்தி ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி, 'ஆறு லட்சம் மலையகத் தமிழர்களை இந்திய அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்படும்' என்று உறுதியளிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு வரை இந்தியா வந்த 4,61,631 தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் 'தாயகம் திரும்பியோர்' (Repatriates) என அழைக்கப்பட்டனர்.

இலங்கையில் கலவரம் தொடங்கியதால், repatriation பணி இந்திய அரசால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதற்குப் பிறகு தாயகம் திரும்புவோர், பூர்வீக இலங்கைத் தமிழர்கள் என இருவருமே உயிர் பிழைக்க இந்தியா திரும்பினர். இரு தரப்பினருமே ஒன்றாக இந்தியா முழுவதும் அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். 1983இல் இந்திய அரசு நிறுத்திய repatriation பணியை தற்போதுவரை தொடங்கவில்லை. முந்தைய அரசு ஒப்பந்தங்களின்படியே இன்னும் 1,40,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டிய தார்மீகக் கடமை இந்திய அரசுக்கு இருக்கிறது.

1987இல் கையெழுத்திடப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்திலும், குடியுரிமை வழங்கும் பணி மீண்டும் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதுவும் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. அப்போது தொடங்கி 2009ஆம் ஆண்டு போர் சமயம் வரை இந்தியா வந்தவர்களில் மலையகத் தமிழர்கள் தாயகம் திரும்பியோராகவும் (Repatriates), இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகவும் (refugees) உள்ளனர். 108 முகாம்களில் 60,000இற்கும் அதிகமானோர் மற்றும் வெளியே 35,000 என 95,000 பேருக்கும் அதிகமாகக் குடியுரிமை இல்லாமல் வசித்துவருகின்றனர். முகாம்களில் மட்டும் சுமார் 29,000 பேர் தாயகம் திரும்பியோராக உள்ளனர். இவர்கள் சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இந்தியக் குடியுரிமைக்குத் தகுதியுடையவர்கள். அவர்களோடு சேர்ந்துதான் இலங்கைத் தமிழர்களும் உள்ளனர்.

இங்கே இன்னொரு சிக்கல் என்னவென்றால், இந்தியா எந்தவொரு சர்வதேச அகதிகள் உடன்படிக்கையிலும் கையெழுத்திடவில்லை. இந்தியாவுக்கு வரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களையும் Foreigners Act-ன் கீழ் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகத் தான் (illegal immigrants) பதிவுசெய்யப்படுவார்கள். 2014ஆம் ஆண்டில் இந்திய அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்திருந்தது. அதில் "புதிய குடியுரிமைச் சட்டத்தின்மூலம் பயன்பெற இருக்கும் மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்களை, சட்டவிரோதமாகக் குடியேறியவர்களாகக் கருதக் கூடாது' என அறிவித்திருந்தது. இது இலங்கைத் தமிழர்களுக்கும், ரோஹிஞ்யா அகதிகளுக்கும் பொருந்தாது. புதிய சட்டத்தின் மூலம் 31,000 பேர் குடியுரிமை பெறுவார்கள் எனச் சொல்லப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள் 95,000 பேர் பல ஆண்டுகளாக இந்தியாவில் உள்ளனர். இவர்களின் குடியுரிமை கேள்விக் குறியாகவே உள்ளது."

**"இந்தச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் சேர்க்கப்படவில்லை என்பது முக்கியமான குற்றச்சாட்டாக உள்ளது. சட்டபூர்வமாக அவர்களின் நிலை என்ன?"**

"இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை கோரிக்கையை இந்தச் சட்டத்துடன் சேர்த்துப் பார்க்க வேண்டிய தேவையே இல்லை. இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளது. புதிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இதுபோன்ற வரலாற்றுப் பின்னணி கிடையாது. அதற்காக அவர்களுக்கு குடியுரிமை தரக் கூடாது எனச் சொல்லவில்லை. ஆனால், தமிழர்களை மத்திய அரசு மாற்றான்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதுதான் வருத்தமாக உள்ளது.


தமிழக அரசியல்வாதிகளுமே இதைச் சரியான விதத்தில் மத்திய அரசிடம் முன்வைத்ததாகத் தெரியவில்லை. கருணை அடிப்படையில் குடியுரிமை வழங்க வேண்டும் என்கிற வாதமும் தவறு. சட்டபூர்வமாக இவர்களுக்கான உரிமை அது. 1980களில் பரபரப்பான சூழலில் அரசால் குடியுரிமை வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டதால் அவர்களுக்கான உரிமையில்லை என்றாகிவிடுமா? அதே அடிப்படையில்தான், இலங்கைத் தமிழர்களுக்கும் சேர்த்து குடியுரிமை வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை வருகிறது. உயிருக்கு அச்சுறுத்தலான சூழலில் அவர்கள் இந்தியா வந்துள்ளனர். ரோஹிஞ்யா மக்களின் கதையும் அதே நிலைதான்."

**"தமிழர்களின் குடியுரிமை கோரிக்கை அரசியல் ஆக்கப்படுகிறதா?"**

"இது ஓர் அரசியல் பிரச்சினைதான். முந்தைய அரசு செய்த ஒப்பந்தங்களை அதற்குப் பிறகு வந்த அரசுகள் காற்றில் பறக்கவிட்டன. திபெத்திய அகதிகளும் இந்தியாவில் உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை, கலாசாரத்தைப் பாதுகாக்க, இந்திய அரசு பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது. திபெத்தியர்களுக்கு பயண ஆவணங்கள் இந்திய அரசால் வழங்கப்படுகின்றன. இதன்மூலம் அவர்கள் வெளிநாடுகளுக்குக்கூட செல்ல முடியும். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்த வசதியும் கிடையாது."

**"முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலை என்ன... அவர்களின் கோரிக்கை என்னவாக இருக்கிறது?"**

"இலங்கைத் தமிழர்கள் உள்ள முகாம்கள் மிகவும் மோசமான நிலையில்தான் இருக்கின்றன. போர் முடிந்த பிறகு இந்தியாவிலிருந்து கிட்டத்தட்ட 10,000 பேர் வரை இலங்கை திரும்பியுள்ளனர். இலங்கையில் உள்ள தமிழர்களே போருக்குப் பிறகு உள்நாட்டு அகதிகளைப்போல்தான் இருந்து வருகின்றனர். போர்க் குற்றம் புரிந்த அரசுதான் தற்போது இலங்கையில் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறது. கடந்த ஆட்சியிலாவது இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு போன்றவை குறைவாக இருந்தன. தற்போது இவை அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. இதனால், தமிழர்கள் எவரும் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை என்பதுதான் உண்மை நிலை. ஆனால், சில அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழர்கள் திரும்பிச் செல்ல விரும்புவதாகச் சொல்கின்றனர். அது முற்றிலும் தவறு."



**"இலங்கைத் தமிழர்களுக்கு என்ன தீர்வு தர முடியும்?"**

"இரட்டை குடியுரிமை வழங்கலாம் என்று சிலர் குரல்கொடுக்கின்றனர். இந்தியச் சட்டங்கள் இரட்டை குடியுரிமையை அனுமதிப்பதில்லை. சட்டபூர்வமாக இது எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்றும் தெரியவில்லை. கிட்டத்தட்ட இரண்டு, மூன்று தலைமுறையினர் இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்திருக்கின்றனர். இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. அதுவே தீர்வாகவும் இருக்க முடியும்."

ஜூனியர் விகடன்

# "வெற்றி, தோல்வியைவிட விளையாட்டை நேசிப்பதே முக்கியம்!"

இந்திய ஸ்போர்ட்ஸின் ஹிட்ஹாட் ஜோடி தீபிகா - தினேஷ் கார்த்திக். ஸ்குவாஷ், கிரிக்கெட் என இரண்டிலும் அசத்தும் இந்த இருவரையும் ஒன்றாக இணைத்தது இந்திய கிரிக்கெட்டின் முன்னாள் ஃபிட்னஸ் ட்ரெய்னர் பாசுவின் ப்ரைமல் பேட்டன்ஸ் ஜிம். இந்த ஜிம்மில்தான் தீபிகா - தினேஷின் காதல் மலர்ந்தது. இந்த ஜிம்மின் 10 ஆம் ஆண்டு விழாவில் இவர்கள் இருவரையும் சந்தித்தேன்.

"உங்க கரியரும், திருமண வாழ்க்கையும் எப்படிப் போயிட்டிருக்கு?"

தீபிகா: "ஒரு வருடமா ஸ்குவாஷ் விளையாடுறதுல இருந்து கொஞ்சம் பிரேக் எடுத்திருக்கேன். என் கரியருடைய அடுத்த கட்டத்துக்குப் போறதுக்கான ட்ரெய்னிங்ல முழுசா கவனம் செலுத்திட்டிருக்கேன்."

"உங்க ஜெர்ஸி நம்பர் 21, உங்க மனைவி தீபிகாவுடைய பிறந்த திகதியைக் குறிப்பதாகச் சொல்றாங்களே?"

தினேஷ்: "முதல்ல என்னுடைய ஜெர்ஸி நம்பர் 19. அதை இப்போ உமேஷ் யாதவ் வைச்சிருக்கார். அதனால நான் மாத்த வேண்டியதா இருந்தது. அதனால தீபிகாவுடைய பிறந்த திகதி 21 என்பதையே வைச்சிக்கிட்டேன். வங்கதேசத்துக்கு எதிரா கடைசி போல்ல சிக்ஸர் அடிச்சப்போ 21 ஆம் நம்பர் ஜெர்ஸிதான் போட்டிருந்தேன்."

"உங்க கரியரின் ஆரம்பத்துலேயே அர்ஜுனா, பத்மஶ்ரீ மாதிரியான உயரிய விருதுகளை வாங்கிட்டீங்க. இப்போ உங்களுடைய இலக்கு என்னவா இருக்கு?"

தீபிகா: "ஸ்குவாஷ்னு இல்லை, பொதுவா என் வாழ்க்கையிலேயே எனக்கு நிறைய இலக்குகள் இருக்கு. விருதுகள் கிடைச்சுட்டா, நாம சாதிச்சிட்டோம்னு அர்த்தமில்லை. நான் இன்னும் ஸ்குவாஷ் மைதானத்தில் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு. அடுத்தடுத்த வருடங்களில என் கரியர்ல இன்னும் முன்னேறுவேன்னு நம்பிக்கை இருக்கு."

"நீங்க கப்டனா இருந்து வழிநடத்தின சையது முஷ்டாக் அலி டிராஃபி ஃபைனல்ல தமிழ்நாடு ஒரு ரன் வித்தியாசத்துல தோல்வியடைஞ்சது உங்களை பாதிச்சதா?"

தினேஷ்: "அந்த சீரிஸ் முழுக்க நாங்க விளையாடிய விதம், எங்களுடைய கன்சிஸ்டன்ஸி எல்லாமே ரொம்ப நல்லாயிருந்தது. ரொம்ப சந்தோஷமா உற்சாகமா ஃபைனல்ஸ் வந்தோம். ஆனா, ஒரு ரன்ல டிராஃபியைத் தவறவிட்டது ரொம்ப வருத்தமா இருக்கு. ஆனா, அடுத்து ரஞ்சி இருக்கு. தமிழ்நாட்டு டீமோட இப்போதைய இலக்கு மீண்டும் ரஞ்சியைத் தமிழ்நாட்டுக்குச் சொந்தமாக்குறதுதான்."

"இந்தியப் பெண்களுக்கு ஃபிட்னஸ் எவ்ளோ முக்கியம்னு நினைக்கிறீங்க?"

தீபிகா: "பெண்கள்னு இல்லை, பொதுவாவே எல்லோருக்குமே ஃபிட்னஸ் ரொம்ப முக்கியம். குறிப்பா, விளையாட்டுத் துறையில் இருக்கிறவங்களுக்கு ஃபிட்னஸ்தான் எல்லாமே. கொஞ்ச வருஷங்களுக்கு முன்னாடி ஃபிட்னஸ் பத்தி அவ்வளவா எந்தப் பெண்களும் பேசலை. ஆனா, இப்போ எல்லோரும் ஃபிட்டா இருக்கணும்னு நினைக்கிறாங்க. வரவேற்க வேண்டிய மாற்றம் இது."

"இந்திய கிரிக்கெட் அணியில் ஃபிட்னஸ் ஃப்ரீக் யார்?"

தினேஷ்: "டீம்ல எல்லோருமே ஃபிட்னஸ் வெறி பிடிச்சு அலையுறாங்க. இந்த ஃபிட்னஸ் வெறியை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போனவர் கப்டன் விராட் ஹோலிதான். பும்ராவுக்கு ஆரம்பத்துல பிசிக்கல் ஃபிட்னஸ் எல்லாம் இல்லை. ஆனா, ஒரு இன்ஜுரி ஆன பிறகு, ஃபிட்னஸ் எவ்ளோ முக்கியம்னு புரிஞ்சிக்கிட்டார். வோஷிங்டன் சுந்தர் தமிழ்நாட்டு டீமுக்கு வரும்போது 16 வயசு. இப்போ கிரவுண்ட்ல ப்ராக்டீஸ் முடிச்சவுடன், ஜிம், அப்புறம் ஸ்விம்மிங்னு ஃபிட்னஸுக்கு அவ்ளோ நேரம் செலவு பண்றான். விளையாட்டு வீரனுக்கு ஃபிட்னஸ்தான் முக்கியம்."



"விளையாட்டு வீராங்கனையாக உங்களுக்கு இருக்கிற மெண்ட்டல் பிரஷரை எப்படிக் கையாளுறீங்க?'

தீபிகா: "வெற்றி, தோல்வி எல்லாம் தாண்டி நான் என் விளையாட்டை ரொம்ப என்ஜோய் பண்ணி விளையாடுறேன். அதுவே எனக்கு மென்ட்டல் பிரஷர் வராமல் பார்த்துக்கும். விளையாட்டை நேசிக்கிறதுதான் ரொம்பவே முக்கியம்."

"கிரிக்கெட்டர்ஸ் நிறைய பேர் மனநலப் பிரச்சினைகளால் பிரேக் எடுக்குறாங்க. மென்ட்டல் ஃபிட்னஸுக்கு என்ன பண்ணணும்னு நீங்க நினைக்கிறீங்க?"

தினேஷ்: "உங்களைச் சுத்தி என்ன மாதிரியான ஆட்கள் இருக்காங்க, அவங்க உங்ககிட்ட என்ன பேசுறாங்கன்னு இது எல்லாம் சேர்ந்துதான் உங்க மனநிலையைத் தீர்மானிக்கும்.

"வெற்றி, தோல்வியைவிட விளையாட்டை நேசிக்கிறது முக்கியம்!"

அதனால எப்பவும் பொசிட்டிவான மக்களுடன் இருப்பது ரொம்பவே அவசியம். இப்போ சோஷியல் மீடியா வளர்ந்துடுச்சு. அதை எவ்ளோ பயன்படுத்தணும், எவ்ளோ தூரம் தள்ளி இருக்கணும்னு புரிஞ்சிக்கணும்."

"உங்க கரியருக்கு தினேஷ் கார்த்திக் எவ்ளோ உறுதுணையா இருக்கார்?"

தீபிகா: "நாங்க ரெண்டு பேருமே அவங்கவங்க கரியரை நல்லா ஹாண்டில் பண்றோம். விளையாட்டைப் பொறுத்தவரை அவருக்குத் தனியா டீம் இருக்கு. எனக்குத் தனியா டீம் இருக்கு. அவங்க கூடதான் நாங்க விளையாட்டைப் பற்றி டிஸ்கஸ் பண்ணுவோம். ஃபேமிலி டைம்ல விளையாட்டைப் பற்றிப் பெரிசா பேச மாட்டோம். எங்களுக்கான நேரத்துல ரொம்ப சந்தோஷமா இருப்போம்."

"உங்க மனைவிக்குப் பிடிச்ச விளையாட்டு வீரர் ரோஜர் ஃபெடரர்னு சொல்லியிருக்காங்க. உங்களுக்குப் பிடிச்ச விளையாட்டு வீராங்கனை யார்?"

தினேஷ்: "செரினா வில்லியம்ஸ் ரொம்பப் பிடிக்கும். இப்போ பி.வி. சிந்துவுடைய மட்ச் எல்லாமே பார்த்துடுவேன். செமையா விளையாடுறாங்க. பெண்கள் கிரிக்கெட் டீம்ல மித் தாலி, ஸ்மிரிதி, ஹர்மன்ப்ரீத் இவங்க எல்லோரும் சுப்பரா பெர்ஃபோம் பண்றாங்க. பெண்கள் அணியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துட்டு வர்றாங்க."

"ஐ.பி.எல். ஆரம்பிக்கப்போகுது. நீங்க உங்க கணவர் தினேஷுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?"

தீபிகா: "நாங்க ரெண்டு பேருமே கொல்கத்தா டீம்கூட நல்லா செட்டாகிட்டோம். அந்த அணியுடைய கோச், உரிமையாளர், மற்றப் ப்ளேயர்ஸ்னு எல்லோரும் தினேஷுக்கு ரொம்ப சப்போர்ட்டிவா இருக்காங்க. ஒவ்வொரு வருஷமும் ஐ.பி.எல். வரும்போது தினேஷும் அவர் டீமும் இந்த வருடம் என்ன பண்ணப்போறாங்கன்னு பெரிய எதிர்பார்ப்பு இருக்கும். கொல்கத்தா அணி இந்த வருடம் அவங்க பெஸ்ட்டைக் கொடுப்பாங்கன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு."

# முள்வேலி...

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களுக்கு இனிய ஞாயிறு வணக்கம் கூறுவதில் பெருமகிழ்வடையும் சிவப்பு றோஜாவின் இனிய புதுவருட வாழ்த்துக்கள்.

அழகும் அற்புதமும் நிறைந்த மலர்க்கூட்டங்களில் றோஜா இனத்திற்கு ஒரு தனி மரியாதையும் புனிதமான பார்வையும் உண்டு. உண்மையில நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் தான். மலர்ந்து சில நாட்கள் மட்டுமே உயிர் வாழ்ந்து பின் உதிர்ந்து மண் மாதாவின் மடியில சருகாகி உரமாகும் பிறப்புத்தான் எமக்கு. ம்...ம்...இருந்தாலும் அதைப்பற்றி என்ன? சில நாள் வாழ்ந்தாலும் சிறப்போடு வாழ்கிறோமே...அது போதாதா...எங்கள் தேவை கல்லறைக்கும் உண்டு. காதலுக்கும் உண்டு. சருகாகும் போதே எமது இதழ்களை தேனில் ஊற வைத்து அதை மருந்தாக உண்டு நோய் தீர்க்க உதவும். எமது பெருமைக்கு நிகரேயில்லை. சரிசரி ...விசயத்துக்கு வருவோம்.

பெரியுவர் வீட்டுத் ம்...வெள்ளிக்கிழமை பூப்பறிக்க வந்த பெரியவர் இதை அவதானித்திருக்கிறார் போலை- என்னோடை சேர்த்து மொட்டும் மலருமா பத்துக்கு மேலை எங்களைப் பார்த்து சந்தோசமா பறிக்க வந்தார். அம்மாவுக்கு சரியான கோபம். என்னுடைய புது அழகைப் பாதுகாத்து ஒரு கடவுளுக்கோ சுமங்கலிக்கோ அர்ப்பணிக்கக் கொடுக்க நினைத்தால் இரண்டு மூன்று தரம் தூதுவளை சாய்ஞ்சு சாய்ஞ்சு வளைந்து சீண்டத் தொடங்கியிருந்ததை அம்மா எப்படியும் தடுக்க வேணும் தானே. பாதுகாவல் எண்டு இருக்கிற பெரியவரிடம் தானே குறைகளை முறையிடலாம். அம்மாவும் தூதுவளையாரும் முரண்பட்டுச் செயலில் இறங்கி விட்டினம். பெரியவர் மௌனமாகி நின்று அவதானித்தார்...உரையாடல் தொடங்கி விட்டது.

**றோஜா:** "என்ன தூதுவளையாரே இவ்வளவு இடம் இருக்க ஏன் என்ரை பிள்ளைகளோடு இப்படி மோதுகிறீரப்பா..."ப்போல வேணுமென்றே உங்களிலை மோதுறன் ...காத்தடிச்சுது நானும் சாய்ஞ்சு விழுந்தன். உன்ரை கொடியும் பூவும் மொட்டும் கூட இஞ்சாலை சாய்ஞ்சுது. ஆனால் நட்டம் உனக்குத் தானே. உன்னையும் என்னையும் பாதுகாக்கிற பெரியவர் தான் இதைப் பார்க்க வேணும். நீயும் நானும் ஒரே இனம் தான்" ம்... இதுதான் நடந்தது. இண்டைக்குப் பெரியவர் கந்தையாப்புவைக் கத்தியோடை, கயிறோடை, தடியோடை கூட்டி வந்திட்டார். ஏதோ நடக்கப் போகுது. நிச்சயம் நல்லது தான் நடக்கும்...பெரியவர் சொல்லுறார்.

"மெய்யே கந்தையா இந்தத் தூதுவளை இலையளெல்லாம் காயப்பட்டும் றோஜாப் பூக்கள் எல்லாம் கொளுவுப்பட்டும் கிடக்கு. இரண்டும் முள்ளுக் கொடியள். ஒண்டாலை ஒண்டு பாதிக்கக் கூடாதப்பா. பிரிச்செடுத்துக் கதியால் நட்டு ஒழுங்கா வேலி போட்டு விடு. வெட்டின தடியளைத் திரும்பவும் நட்டு விடு. கவனம் முள்



தோட்டத்தில் நாம் குடியிருக்கிறோம். எங்களுக்குப் பக்கத்திலேயே தூதுவளை என்று ஒரு படரியும் குடியிருக்கிறார். அடிக்கடி அவர் எங்கள் மேல் பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் காற்றில் அசைவது போல் பாசாங்கு செய்து எமக்கு இடைஞ்சல் தந்து கொண்டே இருக்கிறார். எங்களுக்கும் முள் இருக்கு. ஆனால் எங்கடை முள் எங்களைக் கீறவோ காயப்படுத்தவோ மாட்டுது. ஆனால் தூதுவளை முட்கள் அடிக்கடி தொல்லை கொடுத்த படியே இருந்தது...

**தூதுவளையார்:** "ஓகோ... நீர் பெரிய அழகென்று உமக்கு சரியான தலைக்கனம்...நான் ஆர் தெரியுமே,...காய்ச்சல், தடிமன், சளி நோய்களுக்கு என்னுடைய முழு உடலுமே பயன்படும். சனத்துக்கு நான் தான் அவசியம். உம்மடை அழகைத் தூக்கிப் போடும்"

**றோஜா:** "போதுமய்யா உமது புலம்பல். இந்தப் பூமியில் எல்லா உயிர்களுக்கும் சடப்பொருளுக்கும் ஒரு பயனும் தேவையும் உண்டு. எல்லாம் சமம் தான்..."


**தூதுவளை:** "அதுசரி நானென்ன மனிதர்களைளுக்குத்திப் போடும்..."

ம்...அருமையான விசயம். நட்டவனும் வளர்த்தவனும் பிள்ளையைக் கைவிட்டு நடுறோட்டிலை விட்டால் பிள்ளைக்கும் இதுதான் கதி. மனித வாழ்வே முள்வேலிகளோடைதான் பின்னிக் கிடக்கு. முள்ளு வாழையில பட்டாலும் வாழையிலை முள்ளிலை பட்டாலும் வாழைக்குத்தானே சேதம். ஏதோ... விளங்க வேண்டியவை விளங்கினாச் சரி....அப்ப...போட்டு வாறன்.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தங்கப்பதக்கம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன்,பி.சுசீலா



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
அன்பு மணி வழங்கும் சுரங்கம் வாழ்க வாழ்க

எங்கள் வீடு கோகுலம்
என் மகன் தான் கண்ணனாம்
தந்தை வாசுதேவனோ
தங்கமான மன்னனாம்
எங்கள் வீடு கோகுலம்
என் மகன் தான் கண்ணனாம்
தந்தை வாசுதேவனோ
தங்கமான மன்னனாம்
(நல்லதொரு...)
அன்னை என்னும் கடல் தந்தது
தந்தை என்னும் நிழல் தந்தது
அன்னை என்னும் கடல் தந்தது
தந்தை என்னும் நிழல் தந்தது
பிள்ளை செல்வம் என்னும்
வண்ணம் கண்ணன் பிறந்தான்
நன்றி என்னும் குணம் கொண்டது
நன்மை செய்யும் மனம் கொண்டது
எங்கள் இல்லம் பேரை கண்ணன் வளர்ப்பான்
(நல்லதொரு...)

வெள்ளம் போல ஓடுவான்
வெண்மணல் மேல் ஆடுவான்
கானம் கோடி பாடுவான்
கண்ணன் என்னைத் தேடுவான்
கானம் கோடி பாடுவான்
கண்ணன் என்னைத் தேடுவான்

மாயம் செய்யும் மகன் வந்தது
ஆயர்பாடி பயம் கொண்டது
அந்த பிள்ளை செய்யும் லீலை நானறிவேன்
இந்த பிள்ளை நலம் கொள்ளவும்
என்னைப் பார்த்து எனை வெல்லவும்
கண்ணில் வைத்து நெஞ்சில் வைத்து
நான் வளர்ப்பேன்
(நல்லதொரு...)
கோலம் கொண்ட பாலனே
கோவில் கொண்ட தெய்வமாம்
தாயில் பிள்ளை பாசமே
தட்டில் வைத்த தீபமாம்

பாசம் என்று எதை சொல்வது
பக்தி என்று எதை சொல்வது
அன்னை தந்தை காட்டும்
நல்ல சொந்தம் அல்லவா?
பிள்ளை என்னும் துணை வந்தது
உள்ளம் எங்கும் இடம் கொண்டது
இல்லம் கண்டு தெய்வம் தந்த
செல்வம் அல்லவா?
(நல்லதொரு...)



# V1 திரைவிமர்சனம்

வெற்றி பெற்ற இயக்குனர்களின் உதவியாளர்கள் சிலர் நல்ல கதைகளோடு புதிய இயக்குனர்களாக களத்தில் அறிமுகமாகிறார்கள். அதில் ஒருவராக பாவல் நவகீதன். மெட்ராஸ், குற்றம் கடிதல், பேரன்பு படங்களில் நடிகராக இவரை நீங்கள் பார்த்திருப்பீர்கள் தானே. **V1** மூலம் அவர் இயக்குனராக சொல்லும் சேதி என்ன என பார்க்கலாம்.

ஹீரோ ராம் அருண் திறமையான போலிஸ் அதிகாரியாக இருந்தும் சில காரணங்களால் அந்த வேலை வேண்டாம் என நுட்பமான துப்பறியும் அதிகாரியாக மாறுகிறார். அவருக்கு தோழியாக தைரிய மான போலிஸ் பெண் அதிகாரியாக நடிகை விஷ்ணுப்பிரியா. இடையே ராம் வாழ்க்கையில் ஒரு பெரும் இழப்பு.

லிஜேஷின் மனைவியாக சீரியல் நடிகை காயத்திரி. இதில் இருவருக்கும் சண்டை சச்சரவு. வேலைக்கு சென்று இரவில் வீட்டிற்கு திரும்பிய போது காயத்திரி பிணமாக கிடக்கிறார். இந்த சம்பவம் போலிஸ் கவனத்திற்கு வருகிறது. பின் விஷ்ணு பிரியாவின் கைக்கு வருகிறது இந்த **V1** கொலைக் குற்ற வழக்கு.

மிகவும் சவாலாக இருக்கும் இந்த வழக்கில் குற்றவாளியை கண்டுபிடிக்க நண்பர் ராமின் உதவியை நாடுகிறார். அவர் இந்த வேலையே எனக்கு வேண்டாம் என தூக்கி போட திடுக்கிட வைக்கும் வகையில் **V1** வழக்கை மீண்டும் கையில் எடுக்கிறார். விசாரணையை அவர் ஸ்மார்டாக தொடங்க அடுத்தடுத்த துப்பு கிடைக்கிறது. இதில் காயத்திரி மரணத்தின் பின்னணி என்ன? ராம் தன் வாழ்க்கையில் இழந்தது என்ன என்பதே இந்த **V1**.



ராம் அருண் நிஜ போலிஸ் அதிகாரி போலவே தோற்றத்தில் பார்ப்போரை ஈர்க்கிறார். டென்சனான போலிஸ் வேலையில் இப்படியும் ஒரு நபரா என சற்று ஆச்சர்யம். கொலைப் பின்னணியை கையில் எடுத்து களத்தில் இறங்கி ஆக்ஷனுடன் அவர் செயலாற்றும் விதம் சக பொலிஸிடமிருந்து சற்று வித்தியாசம்.



விஷ்ணு பிரியாவின் அழகாக பேச்சினாலும், மிரட்டலாக பேசினாலும் மலையாள சாயலில் நன்றாக தெரிகிறது.

ராமுடன் அவர் சக அதிகாரி போல இல்லாமல் நண்பராக அணுகும் விதம் படம் பார்க்கும் போது பலருக்கும் இவர் அவரின் காதலியோ என தோன்றலாம்.



கொலையான காயத்திரியை எங்கோ பார்த்திருக்கிறோமே என தோன்றலாம் சரிதானே. பேரழகி சீரியல் மூலம் மக்கள் மனம் கவர்ந்த இவர் படத்தில் இறங்கியுள்ளார். பரியேறும் பெருமாள் படத்தின் மூலம் சற்று அதிகம் அறியப்பட்டவர் லிஜேஷ் கடைசி வரை கேள்விக்குறியாக செல்லும் கேரக்டர். இயல்பான நடிப்பு.

இயக்குனர் வெற்றி மாறனிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய பாவல் நவகீதன் ஆக்ஷன் கதையோடு அதிரடி காட்டுகிறார். முயற்சிக்கு நன்றி. முதல் பாதி வேகமாக போனாலும் 2 ம் பாதியில் கொஞ்சம் தளர்வு.

ஏதோ மிஸ் ஆவது போல ஒரு ஃபீல் இருந்தாலும் இறுதியில் நல்ல மெசேஜ்.

ரியல் போலிஸாக ஹீரோ ராம் அருணின் மதி நுட்பம்.

கடைசி வரை செல்லும் குற்றவாளி யார் என்னும் மர்மம்.


விஷ்ணு பிரியாவை குற்றவாளி போல காட்டுவது காட்சிக்காக திணிக்கப்பட்டது போல ஒரு உணர்வு மொத்தத்தில் **V1** விறு விறுப்பான ஆக்ஷன் மர்டர்.





# அழகு... ஆர்மீனியா... பயணம்: கேபிள் காரில் திடுக் பயணம்!

ஆர்மீனியாவின் கோர் விராப் பகுதி... இங்கே புகழ் பெற்ற மொனஸ்ட்ரியில் ரொட்டி சுடும் குழி ரொம்பவே பாப்புலர். இது அவர்களின் பிர்த்தியேகமான ரொட்டி செய்யும் முறை. ஏழுக்கு ஏழு அறை, நடுவில் பெரிய குழி, நெருப்பிட ஒருபக்கத்தில் விறகுகள்... கங்குகளுடன் உள்ள குழியைச் சுற்றிலும் காலை தொங்கப்போட்டு அமரும் இடங்கள். அப்படி அமர்பவர்களின் கால்களுக்கு அடுப்பின் வெப்பம் இதமாகப் பாய்கிறது. அந்தக் குழிக்குள் பெரிய அயர்ன் செய்யும் போர்டு போல கையில் ஏந்தும் பலகையில் ரொட்டிக்கான மாவை 'O' வடிவத்தில் இட்டு அப்படியே அந்த நெருப்பில் போடுகின்றனர். நமது தந்தூரி முறைதான் என விளக்குகிறார்கள் ஆர்மீனியர். இந்த ரொட்டியே அவர்களது ஸ்பெஷல் உணவு.

ரொட்டி குழியின் உள்ளே கால்களை விட்டபடி அமரும் பெண்களுக்கு வாதம், எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் தீர்வதாக நம்பிக்கை... இன்றும் இது நிச்சயம் நடக்கிறது என்கிறார்கள். எனக்கு ஜெகன் மோகினி சினிமாதான் ப்ளாஷ் அடித்தது.





மூன்று அடுக்கு நிலையில் சந்நிதி இருப்பது என் நினைவுக்கு வந்தது. இந்த சர்ச்சுகளின் வாயில்களில் கற்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களைக் காட்டி விளக்குகிறார்கள். கூடவே திராட்சைக்கொடிகள் சுற்றி வளைக்கின்றன எங்கும். இந்த வளாகத்தில் சில ஆர்மீனிய ஓவியர்களை அவர்களது பாரம்பரிய உடைகளில் காண முடிந்தது.

தவம் போல நின்றபடியே முகத்தில் கொஞ்சும் வெயிலைப் பொருட்படுத்தாமல் போஸ் கொடுக்கும் மக்களை வரைந்து தள்ளுகின்றனர்.

ஆர்மீனியாவின் தென்கிழக்குப் பகுதியில் வருகிறது தத்தேவ் மலைப்பிரதேசம். கண்ணுக்கெட்டியவரை காணவில்லையே என்றால்... இரண்டு மலை தாண்டி இருக்கிறது என்கிறார்கள்!

சுற்றிலும் பச்சை அணிந்த மலைகள், காதலோடு உரசிப் போகும் குளுகுளு காற்று... இதமோ இதம் என ரசிக்க ஆரம்பிக்கும் போது நமக்காக கேபிள் கார் காத்திருக்கிறது. அரை மணிக்கொருதரம் மூன்று மலைகளை இரண்டு கேபிள் கார்கள் இணைக்கின்றன.

17 ஆம் நூற்றாண்டில் இங்கு **chapel** எனப்படும் வழிபடும் சர்க்கிள் கட்டப்பட்டுள்ளது. இந்த கோர் விராப்புக்கு யெரவான் ஹைவேயிருந்து பொக்ர் வெடி (Pokr Vedi) என்ற கிராமத்தின் வழியே 3 கிலோமீற்றர் தொலைவு செல்ல வேண்டும். இந்தக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் வெளியே இயற்கை எரிவாயு பைப் லைன் போர்டர் போல அமைக்கப்பட்டுள்ளது. அதிகமாக பூகம்பம் நிகழும் பகுதி என்பதால், பூமிக்குள் புதைக்காமல் வெளியில் சதுரமாக ப்ரேம் போல அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி வீடுகளின் வாசலில் உயரமான கம்பம் காணப்படுகிறது. கம்பத்தின் மேலுள்ள தட்டையான பகுதியில் வெள்ளை நாரைகள் கூடுகட்டி குடும்பமாக வசிக்கின்றன. அவற்றின் வருகையும் சத்தமும்தான் இந்த மக்களுக்கு சுபசகுனம். இந்த ஊரிலுள்ள குழந்தைகள், "நான் எப்படி பிறந்தேன்?" என்று கேட்டால், "நாரைதான் தந்தது" என்று அந்தக் கூட்டைக் காட்டுவார்களாம்! இப்படித் தங்கள் வாழ்வியலோடு இணைந்த இந்தப் பறவை இனத்தையே தங்களது "குட் லக்" எனக் கொண்டாடுகிறார்கள்.

நோராவங் என்ற பள்ளத்தாக்கு... இது பிறவுன் நிற மலைகள் நிறைந்த ஆர்மீனியாவின் தென்பகுதி. கடினமான பாறைகளைக் குடைந்த பாதையில் ஹைவேயை விட்டு விலகி உள்ளே நுழைந்தால் பக்கவாட்டில் சலசலக்கும் அருவிச் சத்தம், பிறகு, சுள் வெயில், வளைந்துப்போகும் சமதள சாலை. பள்ளத்தாக்கின் சிறிய மலைப்பகுதியில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதத் துறவிகள் வாழ்ந்த மடலாயம்.

இவர்கள் அன்றைய அரசியல் மாற்றத்துக்கும் கலாசாரத்துக்கும் காரணமாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக,சோவியத் காலத்துக்கு முன்பு பெர்ஷிய, ஈரானிய படையெடுப்பின்போது தங்கள் மத, கலாசார அடையாளங்களைக் காத்துக்கொள்ள பெரிதும் முயற்சி செய்திருக்கிறார்கள்.

நாமும் அந்தக் காலகட்டத்தில் இருப்பது போன்ற எண்ணத்தை இந்த பழைமை மாறாத, மாடர்ன் பாதிப்பு இல்லாத இயற்கையுடன் இணைந்த இடங்கள் அளிக்கின்றன. பாரம்பரிய இடங்களை அப்படி அப்படியே பொக்கிஷமாகப் பாதுகாப்பதை ஆர்மீனியரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

இங்கும் தேவாலயங்கள் உள்ளன. ரெண்டு தளங்களில் உள்ள சர்ச்சுகள் **Surb Astvatsastin, Sub Karapet churches** என்று அழைக்கப்படுகின்றன. கற்களால் ஆன சிறிய படிகளில் ஏறி முதல் தளத்தில் உள்ள சர்ச்சில் பிரார்த்திக்கிறார்கள்.

மதுரையில் கூடலழகர் கோயிலில் இதேபோல

ஒவ்வொன்றும் 30 பேரை சுமக்கும் அளவில் அந்தரத் தில் ஒரு கேபிளால் இழுக் கப்பட்டு நிதானமாக நகர்ந்து செல்கிறது. அடுத்த மலையை கிராஸ் செய்யும்போது ஒரு ஜெர்க், மலையை விட்டு இற ங்கி... மூன்றாவது மலையை நோக்கி பயணிக் கும்போது "ஓ"வென அலறுகிறோம் அனிச்சையாக!

**Wings of Tatev** என்ற இந்த கேபிள்வே ஹாலிட்ஜர் மற்றும் தாத்தேவ் மடாலயத்தை இணைக்கிறது. 2010 இல் அமைக்கப்பட்ட இதுவே உலகிலேயே முதல் நீளமான எங்கும் நிற்காத இரட்டைத்தட கேபிள் கார்.


"மிக நீளமான திரும்பி வரக்கூடிய வான்வழி ட்ராம்வே" எனவும் சொல்லப்படும் இது கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

5.7 கிலோமீற்றர் வழித்தடத்தை 12 நிமிடங்களில் கடக்கிறது. தத்தேவ் ஸ்டேஷன் சென்று திரும்ப 40 நிமிடங்கள் எடுக்கிறது.

சேவைநோக்குடன் இயக்கப்படும் இந்த சர்வீஸில் வரும் இலாபம் முழுவதும் தத்தேவ் மடாலயத்துக்காகவும் அப்பகுதி மக்களுக்காகவும் செலவிடப்படுகிறது. இதனால்தான் தத்தேவ் கிராமம் நம்ப முடியாத வகையில் சகல வசதிகளுடன் பராமரிக்கப்படுகிறது. பொது இடங்களில் சுத்தமான டொய்லெட் வசதி உள்ளது.

---

# வங்கிக் கணக்கில் 37 மில்லியன் ஒரு நாள் கோடீஸ்வரியான பெண்




ரூத் பலூன், தென் அமெரிக்காவிலுள்ள டல்லாஸ் நகரில் வசித்து வருகிறார். இவர் கடந்த வாரம் தன்னுடைய வங்கிக் கணக்கில் மீதத்தொகை மற்றும் பணப் பரிவர்த்தனை ஆகியவற்றை சரி பார்க்க சாதாரணமாக வங்கியின் அப்பில் லொக்-இன் செய்துள்ளார்.

தன்னுடைய கணக்கில் 37 மில்லியன் டொலர் பணம் அதிகமாக இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு ரூத் அளித்த பேட்டியில், "நான் மில்லியனராக இருந்தேன். அதற்கான ஸ்கிரீன் ஷொட் என்னிடம் உள்ளது. அந்தப் பணம் எங்களுக்கு சொந்தமானது அல்ல என்று தெரிந்தாலும் அதை நினைத்து பகல் கனவு கண்டு கொண்டிருந்தேன்.

பணத்தின் சில பகுதியை ரியல் எஸ்டேட்டுக்கு பயன்படுத்தலாம் எனத் திட்டமிட்டிருந்தேன்" என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், "நான் டெக்ஸாஸ் வங்கியைத் தொடர்புகொள்ள முயற்சி செய்தேன். தொடர்புகொள்ள முடியவில்லை. என் கணவருக்கு ஸ்கிரீன் ஷொட்டை அனுப்பி இதுபற்றிக் கூறினேன். பின்னர், என்னுடைய கணவர் டெக்ஸாஸ் வங்கியை அணுகியபோது தவறுதலாக இந்தச் சம்பவம் நடந்து விட்டது என்று தெரிவித்தனர். 37 மில்லியன் டொலர், கிறிஸ்துமஸ் மிராக்கிளாக இருக்க வேண்டுமென்று விரும்பினேன். கடைசியில் வங்கி ஊழியரின் பிழையாக மாறிவிட்டது" என்றார் வேதனையுடன்.

இந்தச் சம்பவம் குறித்துப் பேசிய டெக்ஸாஸ் வங்கி நிர்வாகத்தினர், "வெளிநாட்டுக் கரன்ஸிகளைப் பரிவர்த்தனை செய்யும்போது பணமதிப்பு காரணமாக வங்கி ஊழியர்கள் தகவல்களை உள்ளீடு செய்யும் பணியில் ஈடுபடுவார்கள். ஒரு வாடிக்கையாளர் பணத்தைச் செலுத்த வந்தபோது, எங்களுடைய பிரதிநிதி தொகையை தட்டச்சு செய்வதற்குப் பதிலாக வங்கிக் கணக்கு எண்ணைத் தட்டச்சு செய்து விட்டார். இதனால், இந்தத் தவறு நிகழ்ந்து விட்டது. இதுகுறித்து, வாடிக்கையாளர் எங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது இந்த நிகழ்வு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது" என்று தெரிவித்துள்ளனர்.

# மனிதக் குரங்குகள்



இற்றைக்கு 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் 'ஏப்ஸ்' எனப்படுகிற மனிதக் குரங்குகளின் வரலாறு தொடங்குகிறது. இரவில் உலாவுவதற்கு ஏற்ற, பாரிய, விரிந்த கண்களை கொண்ட 'அர்ச்சொன்டா' (**Archonta**) எனப்படும் பாலூட்டி வகை உயிரினமே மனித குரங்குகளின் மூதாதைய இனமாக கருதப்படுகிறது. அந்த இனத்தின் பரிணாம வளர்ச்சி, வௌவால்கள், மனிதர்கள் அடங்கலாக, பல பாலூட்டி வகை உயிரினங்கள் தோற்றம் பெற காரணமாய் அமைந்தது.

ஆதி கால மனிதக் குரங்குகளிடம் இரண்டு தனித்துவ அம்சங்கள் காணப்பட்டன. ஒன்று **'Binocular vision'** எனப்படுகின்ற 'இருவிழிபார்வை'. அதாவது, முகத்தின் இரண்டு பக்கங்களிலும் கண்களை கொண்டிருந்த மற்றைய விலங்குகளிலிருந்து கொஞ்சம் வேறுபட்டு, முகத்தின் முன்புறத்தில் இரு விழிகளையும் ஒரு சேர கொண்டிருப்பது. இந்த அமைப்பானது, முப்பரிமாண பார்வைக்கு வழி வகுத்தது. இதனால், நீள, அகலத்துடன் சேர்த்து, தூரத்தையும் கணக்கிடக்கூடிய ஆற்றல் மூளைக்கு கிடைத்தது.

பற்றிப்பிடிக்க வசதியான கை அல்லது விரல் அமைப்பு, அவை கொண்டிருந்த இரண்டாவது மிக முக்கியமான அம்சமாகும். இந்த அமைப்பு, மரங்களில் வாழ்வதற்கும், காணும் பொருட்களை கருவிகளாக கையாள்வதற்கும் வழி வகுத்து கொடுத்தது. மரங்களில் வாழும் வாழ்க்கை முறையானது, தரை வழி ஆபத்துக்களிலிருந்து தப்பி பிழைத்து வாழ இடமளித்தது. ஆரம்பத்தில், பூச்சி உண்ணிகளாக இருந்த இவ்வுயிரினங்கள், பிற்காலத்தில் தாவரங்களையும் உண்ணும் வழக்கத்தை பெற்றன. மூக்கின் நீளமும், பற்களின் எண்ணிக்கையும் மெல்ல மெல்ல குறைந்துகொண்டு வந்தன.


சுமார் 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், இரண்டு வகையான மனித குரங்கினங்கள் பிரிகையடைந்தன. ஒன்று, ப்ரொசிமியன்ஸ் (**Prosimians**), மற்றயது அந்த்ரொபொய்ட்ஸ் (**Anthropoids**). ப்ரோஸ்மியன்ஸ் விலங்குகள், ஒரு அணிலுக்கும் பூனைக்கும் இடைப்பட்ட தோற்றம் கொண்டவை. இந்த இனத்தில் 'லீமர்' மற்றும் 'டார்சியர்' போன்ற ஒரு சில விலங்குகளே இன்று எஞ்சியிருக்கின்றன.

அந்த்ரொபொய்ட்ஸ் வகையில், இன்று நாம் காணும் குரங்குகள், மனித குரங்குகள், மற்றும் மனிதர்களாகிய நாமும் அடங்குகின்றோம். பகலில் உலாவுவதற்கு ஏற்ற, நிறங்களை பிரித்தறியும் கண்கள், விருத்தியடைந்த மூளை அமைப்பு என்று பல வகைகளில் அந்த்ரொபொய்ட்ஸ் இனம் வளர்ச்சி கண்டது. இந்த இனத்தின் ஒரு கிளை, இன்று நாம் காணும் நவீன உலக குரங்குகளாக பரிணமித்தது. இன்னொரு கிளையில் தான், மனித குரங்குகள் தோற்றம் பெற்றன. பரிணாமத்தின் தடைகளை எல்லாம் கடந்து, வெற்றிகரமாக இன்றைய உலகில் வாழ்ந்து வருகின்ற சிம்பன்சி, கொரில்லா, ஒராங்குடன் மற்றும் கிப்பொன் போன்ற மனித குரங்குகளின் உலகம் மிகவும் சுவாரஸ்யமானது !

# வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பப் போகிறீர்களா?

எல்லா எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் தங்கள் சேமிப்புத் தொட்டிகளை நிலத்துக்கு அடியில் பதித்து வைத்திருக்கின்றன.

நிலத்தின் வெப்பநிலை குளிர்ச்சியாக இருக்கும் போதே எரிபொருள் அடர்த்தியுடன் இருக்கும்.



வெப்பநிலை அதிகரிக்கும் போது, பெற்றோல் விரிவடையும். எனவே, மதியம், மாலையில் நீங்கள் ஒரு லீற்றர் பெற்றோல் வாங்கினால், அது மிகச் சரியாக ஒரு லீற்றர் இருக்காது.

எனவே, நிலத்தின் வெப்பநிலை குளிர்ச்சியாக இருக்கும் அதிகாலை நேரங்களில் வாகனத்துக்கு பெற்றோல் நிரப்புங்கள். பெற்றோல் வணிகத்தில் வெப்ப அளவும், அடர்த்தியும் மிக முக்கியமானவை. பெற்றோல் ஒரு டிகிரி அதிக வெப்பநிலையில் இருந்தால் அது மிகப் பெரிய மாற்றம். ஆனால் எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இதுபோன்ற கட்டுப்பாடுகள் பார்க்கப்படுவதில்லை. அதேபோல உங்கள் வாகனத்தின் பெற்றோல் தொட்டியை எப்பொழுதும் முழுமையாக நிரப்பாதீர்கள்.

அதனால் உங்களுக்கு நட்டமே ஏற்படும். பாதி மட்டுமே நிரப்புங்கள். அதிக எரிபொருள் இருந்தால், அந்தத் தொட்டியில் காற்று குறைவாகவே இருக்கும். நாம் நினைப்பதைவிட வேகமாக பெற்றோல் ஆவியாகக் கூடியது. எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பெற்றோல் சேமிப்புத் தொட்டிகளில் மிதக்கும் கூரைகள் இருக்கும். இதன் காரணமாக உள்ளே பெற்றோலுக்கும் காற்று மண்டலத்துக்கும் இடையே இடைவெளி இருக்காது. எனவே, ஆவியாதல் குறையும்.

வாகன பெற்றோல் தொட்டியில் பாதி நிரப்பினால், பெற் றோல் ஆவியாவதை ஓரளவு குறைக்க முடியும். அதேபோல நீங்கள்பெற்றோல் நிரப்பப்போகும் போது தான், அந்த எரிபொருள் நிலையத்தில் லொறியில் இருந்து பெற்றோல் இறக்கப்படுகிறது என்றால், அப்போது வாகனத்துக்கு பெற்றோல் நிரப்பாதீர்கள். கிடங்கின் அடியில் தேங்கியிருந்த கசடுகள் அப்போது கலங்கி இருக்கும். இது எஞ்சினை பாதிக்கும்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1936


**வினித்**

உயரமாக இருக்கும் வானம் விழுந்துவிடாது. அதுபோல உன் நம்பிக்கையும் உயரமாக இருக்கட்டும். ஒருநாளும் விழுந்து விடமாட்டாய்



**ஜெரோம்**

உன்னைக் காயப்படுத்துபவர்களிடம் புன்னகையுடன் சேர்ந்த மௌனத்தைப் பதிலாக்கு... அதைவிட பெரிய பதிலடி இருக்க முடியாது.



**அன்ரன்**

நல்லவர்கள் சோதிக்கப்படுகிறார்கள் என்றால் துரோகம் செய்தவர்களுக்கு அழிவுகாலம் ஆரம்பம் ஆகிவிட்டது என்று அர்த்தம்




**நந்தன்**

வாழ்க்கை முழுமையடையவில்லை என்று ஏங்காதீர்கள். தேய்ந்த நிலவுதான் பௌர்ணமி ஆகின்றது



**குமரன்**

தவறேதும் செய்யாமல் தன்மானத்தைச் சீண்டும் நிலை வந்தால் எவரையும் எங்கேயும் எதிர்த்து நில்லுங்கள் தப்பேயில்லை.



**வெங்கட்**

நட்பில் யோசித்துப் பழகாதே!
காதலில் யோசித்து விலகாதே!
வாழ்க்கையில் எதிர்பார்த்து ஏமாறாதே!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்
சுகமான விடியல்
வலம்புரியின் மருத்துவச்சுடர் 206

# வெண்ணெய் திரண்டிருக்க நெய்தேடி ஓடுகின்றோம்



மண்ணை மறந்து அதன் மரபுகளை சிதறடித்து
வெண்ணெய் திரண்டிருந்தும் அதை வீசி வீணடித்து
மெய்யான நெய்தேடி ஓடி நிலைகுலைந்து
தலைகால் விளங்காமல். தடுமாறும் தேசமிது.

அன்னை பனைமரமே எம்மை அரசாண்ட கற்பகமே
உன்னை சரண்புகுந்தோம் எம்மை நெறிப்படுத்து
அன்னை பனைமகளே! எம்மை அரவணைத்த கற்பகமே!
இம்மண்ணை மறுதலித்து நீ நெய்தேடி ஓடவில்லை.

உன்னவரின் மண்பிடிப்பு எனக்கும் இருந்திருந்தால்
உங்களது நெஞ்சுறுதி எம்மவர்க்கும் இருந்திருந்தால்
உன்னைப்போல் நாமும் உயர்ந்து வளர்ந்திருப்போம்.


காவலனாய் காவலரணாய் காத்துநின்ற உன்னுடம்பை
உன்னவரே வீழ்த்திய போதும் நெய்தேடி ஓட நீ நினைத்தும்
பார்த்ததில்லை.
வீழ்ந்தும் கூரைமரமாகி எமக்கே குடைபிடித்தாய்
மறந்தாய் மன்னித்தாய் உன்பண்பை கற்பித்தாய்
பனைதாயான தத்துவமே!



எத்தனை புயல்களை எதிர்த்தாய் எதிர்கொண்டாய்
அத்தனைக்கும் நீ வளைந்ததில்லை. புயல்தாங்கி முறிந்ததுண்டு
சோகம் தாக்கியும் சோர்ந்து நீ வாடவில்லை
புயல் இல்லா பூமி எது என்று புன்னகைத்தாய்
இடர்தாங்கும் வழிசொன்னாய் இடம்பெயர எண்ணவில்லை.

அன்னை பனைத்தாயே! சொந்த மண்ணிலே நாயகியாய் - நீ
காலூன்றி வேரூன்றி நிற்கையிலே
சுட்டெரிக்கும் சூரியன்கூட உன்னை சுட்டதில்லை
செயற்கை சத்துக்கும் மருந்துக்கும் எம்மைப்போல - நீ
மண்டியிட்டதில்லை
எம் கண்ணீரும் மண்ணும் மண்ணீரும் - உனக்கு
மருந்தானதோ?

கறுப்பு மரகதமே!
சுயத்தை மறைக்க பிறதேச கழிபூசி சிவக்க நீ நினைக்கவில்லை
இப்பிரதேசம் சிலிர்க்க பனங்கழியின் பசுமையை
பனாட்டாய் பாய்விரித்தாய்.
உன்போல அல்ல நாம் சுயத்தை தொலைத்துவிட்டோம்
முன்போல அல்ல நாம் முழுவதுமாய் மாறிவிட்டோம்.
நாவற்பழத்தை இந்த நாக்கு அறியாது
பனங்காய் பணியாரம் பணம்கொடுத்தும் கிடையாது
நெல்லிமரத்தின் நிழல்கூட தெரியாது
கொய்யா விளா வேளாண்மை வீடுவந்து சேராது.
அப்புவும் ஆச்சியும் அரசாண்ட அடுக்களையில்
அப்பிளின் ஆட்சி அற்புதமாய் நடக்கிறது
ஓட்சும் ஒறேஞ்சும் பேரீஞ்சும் கோதுமையும்
கூட்டணி அமைத்தால் ஆட்சி கவிழலாம் - ஆனால்
உன் பருத்த பனம்பழத்தை அரசாள அனுமதியோம்.



சத்தியமாய் உன் நுங்கை நோண்டி உண்ண நேரமில்லை
சத்துமா பேணிகளை வாங்கிஉண்டால் சோலி இல்லை
அந்நியரின் ஆட்டாமா ஆளுநராய் ஆகிறது - எங்கள்
ஆட்டுக்கல் அம்மி எல்லாம் அடிவளவில் கிடக்கிறது.

கூல் ஆக குடிக்க குவிந்து கிடக்கையிலே
கூழ் காய்ச்சி குடுக்க ஆச்சியும் சம்மதியா
ராசவள்ளி கழிகாய்ச்சி பல ஆண்டு கழிஞ்சாச்சு
உழுத்தம்மா கழிகிண்டி உண்டகாலம் மறந்தாச்சு




நம்வெண்ணெய் உருக்க நெய்வருமோ தெரியாது
எம்மெய் உழைப்புகளும் உள்ளூரில் கிடையாது
நாட்டரிசி வேண்டாம் வெளி நாட்டரிசி கொடு தம்பி
முட்டைமா வேண்டாம் சொட்டு உப்புமா தா தம்பி

இறக்கும் பொருள்தேடி பணத்தை இறைத்திடுவோம்
கையில் இருக்கும் நித்திலத்தை எட்டி உதைத்திடுவோம்
அன்னை பனையே!
உன்போல அல்ல நாம் சுயத்தை தொலைத்துவிட்டோம்
முன்போல அல்ல நாம் முழுவதுமாய் மாறிவிட்டோம்.

நெடிய கண்மணியே!
நொடிந்துபோன எம்மை ஏன் நோகடிக்க துணிந்துநின்றாய்
கிழிந்துபோன பனம்பாயாய், நாம் கிடப்பது தெரியாதோ?

காற்றுக்கு நீ ஆடுதல் போல் எம்மை கள்கொடுத்து ஆட்டுகிறாய்
கல்லுக்கு வெடிவைப்பது போல் எம் கல்லீரல்களுக்கு
கள்ளால் கண்ணிவெடி வைத்தாய்.



இரத்தக் கண்ணீரை வாந்தியாய் வடிக்கிறோம்
உன் உரத்த பனைநெஞ்சு கல்நெஞ்சோ?
கள்ளால் கண்ணீரில் கரையும் கல்லீரல்களுக்கு என்ன பதில்

கள்ளா? கருப்பணியா? அது உன்தெரிவு -பழுத்த
காவோலை சரசரத்து சொல்கிறது.
கருப்பணியை விரட்டி 'கள்' தேடிய பாவம்
எம் கல்லீரல்களில் கருக்கொள்கிறது.

எம் தெரிவுகள் தவறானால் முடிவுகள் தப்பானால்
தீயன தலையெடுக்கும் என்ற தெளிவான தத்துவத்தை
கள்ளால் கருப்பணியால் கற்பித்தாய் - எம்
தாயான தத்துவமே.

எம்முன் குடிவந்த எம்மவளே!
எம்மை தடம்மாற்று தடுத்தாட்கொள்
உன்நெஞ்சுரமும் மண்பிடிப்பும் வரட்சியிலும் வாடாத வலிமையை தா!
உன் சிந்தனைத்தெளிவை எமக்கு சீரணம்தா!
உள்ளூர் வளங்களை உறைபோட்டு தயிர் செய்வோம்
சொந்த மரத்தை மத்தாக்கி இந்த மண்கடைந்து வெண்ணெய் செய்வோம்.
தன்னை உருக்கி மெழுகுசுடர் ஒளிவீச - தூய
வெண்ணெய் உருகி நெய்யாகி மணம்வீச
நாம் எம்மை செதுக்க எம்வளங்கள் கைகொடுக்க
எம்கை ஓங்கும் உயர்வுவரும் காத்திருப்போம்.



Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்